# விடுதலைப்புலிகள்

குரல் : 105 | புரட்டாதி — ஐப்பசி, 2002 | அன்பளிப்பு : 10/=

05 இத்தீவின் மக்களிடமிருந்து சமாதானம் அதிக விழிப்பைக் கோருகின்றது
07 காஞ்சுரன்குடா, திருகோணமலை சமாதானகாலப் படுகொலை
03 சிங்களத்தின் ஆறுகள் பின்நோக்கிப் பாய்கின்றன



# இரண்டாம் கட்டப் பேச்சின் பெறுபேறுகள்; முன்னேற்றம் கண்டுவரும் சமாதான முயற்சி!

**புலிகள் இயக்கத்திற்கும், சிங்கள அரசாங்கத்திற்குமிடையே நோர்வேயின் அனுசரணையுடன் தாய்லாந்தில் கட்டம் கட்டமாக நடைபெற்றுவரும் அமைதிப்பேச்சுக்கள் உலக அரங்கில் மிக முக்கியத்துவம் பெற்றுவருகின்றன.**

**முதற்கட்டப் பேச்சுக்கள் நடந்து முடிந்த பின்னர் - செயல் ரீதியில் ஆக்கபூர்வமான அடுத்த கட்டப் பேச்சின் பெறுபேறுக்காக உலக சமூகம் ஆவலுடன் காத்திருந்தது.**

**கடந்த ஒக் 31 - நவ 03, 2002 வரை தாய்லாந்தின் றோஸ்காடினில் நடந்த இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் சுமூகமாக நடந்து முடிந்துள்ளன.**

**அமைதிச் சூழலை உறுதிப்படுத்தக் கூடிய செயற்திட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு புலிகள் இயக்கமும் . இலங்கை அரசாங்கமும் இணங்கியுள்ளன.**

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்ற இனப்போரால் சிதைந்து போயுள்ள வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்வையும் அவர்களது பொருளாதாரத்தையும் மேம்படுத்த பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த இணக்கம் காணப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களது பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண இந்த இரண்டாம் கட்டப் பேச்சில் முக்கியமான பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளது. இநதப் பேசசுவார்த்தையை முஸ்லிம் தலைமைகளும் - மக்களும் வரவேற்று - நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

வடக்கு - கிழக்கின் இயல்பு வாழ்வை ஏற்படுத்தும் இலக்குடனும் - அபிவிருத்தி வேலைத்திட்டங்களை - புனர்வாழ்வு நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் வகையில் மூன்று வகையான உபகுழுக்கள் அமைக்கப்பட்டு - அவை செயற்படுவதற்கு போதிய அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளது இப்பேச்சுவார்த்தையின் முக்கிய வெற்றியாகும.

- வடக்கு - கிழக்கில் உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான ஒரு உபகுழு அமைக்கப்பட்டுள்ளது.
- இனப்பிரச்சனைக்கு நிரந்தர அரசியல்தீர்வு தேடும் மார்க்கத்தில் அரசியல் விடயங்களுக்கான ஒரு உபகுழு அமைக்கப்பட்டுள்ளது.
- வடக்கு - கிழக்கிலுள்ள இராணுவ மயமாக்கலை படிப்படியாகக் குறைத்து - அங்கே சுமூகமான இயல்பு நிலையை ஏற்படுத்தும் செயற் திட்டத்திற்காக ஒரு உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது.

இவற்றுடன், குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் அண்மையில் நடந்தேறிய துயரச்சம்பவங்கள் இனிமேலும் நடந்தேறாமல் தடுக்கும் நோக்குடன் கிழக்கின் பாதுகாப்பு நிலைமையை மேம்படுத்துவதற்காக எடுக்கப்படவேண்டிய நடைமுறைகள் பற்றியும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், போர் நடவடிக்கைகளின்போது காணாமல் போனவர்களின் விபரங்களைச் சேகரித்து - இந்த விடயங்கள் தொடர்பாக அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை அமர்வுகளில் கலந்துரையாடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசியல் விடயங்களுக்கான உபகுழு இலங்கை அரசினதும் - விடுதலைப்புலிகளினதும் அமைதிப்

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# நீதிமன்றத் தீர்ப்பு ஒரு அரசியல் சதி

**புலிகளின் குரல்**

தமிழ் இனத்தின் தன்னிகரில்லாத் தலைவனாக, தமிழீழ தேசியத்தின் காவலனாக தலைவர் பிரபாகரன் திகழ்ந்துவருவது சிங்களப் பேரினவாதிகளால் சகிக்க முடியாத ஒன்றாகும்.

சிங்கள பேரினவாதத்தின் நீண்டகால இராணுவத்திமிருக்கு தக்கபாடம் புகட்டி – அதன் படை ஆணவத்தை உடைத்தெறிந்த வரலாற்றுப் பெருமை தலைவர் பிரபாகரனுக்கே உண்டு.

சிங்களதேசம் சந்தித்த ஒரு பாரிய தேசிய அவமானமாகவே இந்த இராணுவ யதார்த்தத்தை சிங்களப் பேரினவாதிகள் கருதிக் –குமுறுகின்றனர்.

புலிகளின் படைபலத்தை அங்கீகரித் தப்படி நிகழும் தற்போதய சமாதான முயற்சியும் – இது காரணமாக தலைவர் பிரபாகரனுக்குப் பெருகிவரும் உலகளாவிய புகழும் – முக்கியத்துவமும் சிங்களப் பேரினவாதிகளுக்கு எரிச்சலூட்டி வருகின்றன.

புலிகள் இயக்கத்தை இராணுவரீதியாக அழித்து – தமிழர் போராட்டத்தை நசுக்கவேண்டும் என்ற நிறைவேறாத ஆசையே சிங்களப் பேரினவாதத்தின் அரசியல் இலட்சியமாக இருந்து வருகின்றது.

நோர்வே அரசின் அனுசரணையுடன் முன்னேற்றம் கண்டுவரும் தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தை தங்களது அரசியல் இலட்சியத்திற்கு சமாதி கட்டக்கூடியது என்று பேரினவாதிகள் அஞ்சுகின்றனர். சர்வதேச சமூகத்தின் பேராதரவுடன் நடைபெற்றுவரும் இந்த சமாதானப் பேச்சுவார்த்தையை முறியடிக்கும் திறன் தம்மிடம் இல்லை என்ற உண்மையை உணர்ந்தப்படி சமாதானப் பேச்சுவார்த்தையைக் கெடுக்க வேறுவகையான மார்க்கங்களை பேரினவாதிகள் நாடுகின்றனர்.

சிங்கள நீதிமன்றில் தலைவர் பிரபாகரனைக் குற்றவாளியாக்கி – அவருக்கு சிறைத்தண்டனைத் தீர்ப்பை வழங்கி சமாதான அஞ்சலோட்டத்திற்கு ஒரு சட்டரீதியான தடையை ஏற்படுத்தி – பேச்சுவார்த்தையை முறியடிக்க பேரினவாதிகள் விரும்புகின்றனர்.

அத்துடன், சிங்களப் பேரினவாதிகளுக்கு சிம்ம சொப்பனமாக இருந்துவரும் தலைவர் பிரபாகரனுக்கு எதிராக ஒரு நீதிமன்றத் தீர்ப்பை வழங்கி அவரையும் – தமிழ் இனத்தையும் அவமானப்படுத்திவிட்டதாகவும் பேரின வாதிகள் திருப்திப்பட முனைகின்றனர்.

30 வருடகால ஆயுதப்போரில், இலட்சத்திற்கும் மேற்பட்ட சிங்களப்படைகளாலும் தலைவர் பிரபாகரனை அணுகவே முடியவில்லை.

இராணுவரீதியாகவும் – அரசியல்ரீதியாகவும் எதையுமே சாதிக்க முடியாது துவண்டுகிடந்த சிங்களப்பேரினவாதம் இப்போது நீதிமன்றம் என்ற தனது பீரங்கி மூலமாக 200 வருட சிறைத்தீர்ப்பு என்ற குண்டை தலைவர் பிரபாகரன் மீது ஏவிவிட்டு திருப்திப்படவேண்டிய நிலையில் உள்ளது.

சிறிலங்காவின் நீதித்துறையானது சிங்களப் பேரினவாதத்தின் அரசியல் அபிலாசைகளையும் – இராணுவ சித்தாந்தங்களையும் பாதுகாத்து அவற்றிற்குச் சட்டவடிவம் கொடுத்து அதன்மூலம் தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்திவரும் ஒரு சிங்கள அரச அலகாகும்.

உலக சமூகம் கண்டித்துவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நடைமுறைப்படுத்தி தமிழ்மக்களை இம்சித்து வருவது சிறிலங்கா நீதிமன்றங்களேயாகும். தமிழர் பகுதிகளில் நடைபெறும் இன அழிப்பு நடவடிக்கைகளை ஒரு ''இறைமையுடைய அரசின் சட்டரீதியான உரிமை'' என்றும் – அதைப்புரியும் சிங்களப் படையினரை அரச காவலர்கள் என்றும் பிரகடனப்படுத்தி ஒரு தலைப்பட்சமாக சிங்கள் நீதிமன்றுகள் நடந்து வருகின்றன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குகள் வரும்போது கோட் – சூட் அணிந்த சிங்களப்படையாளாகவே சிறிலங்காவின் நீதிபதிகள் பணியாற்றுகின்றனர் என்பது தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்தாகும்.

இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுக்கள் தாய்லாந்தில் ஆரம்பமான ஒக்ரோபர் 31ஆம் திகதியன்றே, தலைவர் பிரபாகரனுக்கு எதிராக சிங்கள உயர்நீதிமன்று வழங்கிய சிறைத்தீர்ப்பு அப்பட்டமானதொரு அரசியற் சதியாகும். இச் சதிச்செயலுடன் அரச உயர்மட்டத்தில் உள்ளோர்க்கும் தொடர்புண்டு.

உள்நோக்கம் கொண்ட – கேலிக்கூத்தான இந்தத் தீர்ப்பினை புலிகள் இயக்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

தமிழரின் போராட்டத்தை ஒடுக்கவென்று நினைத்தும் – புலிகள் இயக்கத்தையும் அதன் தலைமையையும் கொச்சைப்படுத்தவும் என்று ஆசைப்பட்டும் சிங்கள அரசும் – அதன் நிர்வாக அலகுகளும் எடுக்கும் சதித்தனமான நடவடிக்கைகள், இறுதியில், சிங்கள அரசிற்கான பொறியாகவே அமைந்துவிடுவது கடந்தகால அனுபவமாகும்.

சமாதானப் பாதையின் குறுக்கே சிங்கள அரசு போட்ட 'சிறைத்தீர்ப்பு' என்ற இந்தத் தடையை அகற்ற சிங்கள அரசே முயலவேண்டும். சமாதானத் தின் எதிர்காலத்திற்கும் அதுவே நன்மை பயக்கும் ●

## ஜே.வி.பி.யின் சந்தர்ப்பவாத அரசியல் வியூகம்



தற்போது மிக அதிகளவில் இனவாதம் பேசும் கட்சியாக ஜே.விபி தன்னை வெளிப்படையாகவே இனம்காட்டி வருகிறது. தற்போதைய சமாதான முயற்சிகளை குழப்புவதே அதன் முக்கிய இலட்சியமாகவும் இருந்து வருகிறது.

ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசை ஆட்சியில் இருந்து அகற்றுவதை தமிழீழம் அமைவதை தடுப்பதற்கான தனது கடமையென தென்பகுதி மக்களிடையே பிரசாரம் செய்து வருகிறது.

இதற்கான பின்புல உதவிகளை சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகாவே மேற்கொண்டு வருவதுதான் வேடிக்கையான அரசியலாக உள்ளது.

கடந்த பொதுத் தேர்தலுக்கு சில மாதங்களின் முன்னர் கூட இதே சந்திரிகா 'தனது கணவரைக் கொன்ற கொலைகாரர்கள்' என ஜே.விபி யினரை விரல் சுட்டி காட்டி பேசியதை நாடறியும்.

ஆனாலும் கடந்த தேர்தலின் போதும் – அதன் பின்னரும் – ஏன் இன்று வரையும் கூட ஜனாதிபதியின் கூட்டணித் தோழர்களாக இந்த முன்னாள் சமதர்ம சிந்தாந்தவாதிகள்தான் இருந்து வருகிறார்கள்.

சந்திரிகாவின் ரனில் எதிர்ப்பு நடவடிக்கைகள் யாவும் ஜே.விபியின் அனுசரணையுடன் தான் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆனால் பொதுசன ஐக்கிய முன்னணிக்கே சிங்கள மக்களின் ஆதரவு வீழ்ச்சி கண்டுள்ள நிலையில் ஜே.விபியின் நிலையைச் சொல்ல வேண்டியதில்லை. ஏதாவது ஒரு பெரும்பான்மையின் – பேரினவாத கட்சியை வால் பிடிக்க வேண்டிய பரிதாபகரமான நிலையிலேயே உள்ளது. சந்திரிகாவுக்கும் ஜே.விபியை விட்டால் வேறு துணையில்லை என்ற நிலை. போதாக்குறைக்கு அநுராபண்டாரநாயக்காவின் புதிய அரசியல் வழிகாட்டிகளாவும் ஜே.விபியினரே இயங்கி வருகின்றனர்.

இன்றைய நிலையில் ஒரு வங்குரோத்து அரசியல் நிலையைச் சந்திக்கும் ஜே.விபிக்கு சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரப்பலத்தின் ஆதரவை நம்பியிருக்க வேண்டிய நிலையேதான் ஏற்பட்டிருக்கிறது...

இது ஜே.விபிக்கு ஏற்பட்டுள்ள ஒரு பரிதாபகரமான நிலைதான்.

ரனிலின் ஆட்சி மாறவேண்டும். ஆனால் பொதுத் தேர்தல் நடைபெறக்கூடாது, மாற்று அரசு அமையவேண்டும். அதற்கு ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும். அதன் பின் சந்திரிகா அமைக்கும் ஒரு தற்காலிக மாற்று அரசில் பங்கேற்று சந்திரிகாவை ஆட்டிப்படைக்க வேண்டும். அதற்கு 'அநுரா' என்ற தலையாட்டி பொம்மையை பயன்படுத்த வேண்டும்.

இதுதான் ஜே.விபியின் இன்றைய அரசியல் வியூகம்... ஒரே கல்லில் ரனிலையும், சந்திரிகாவையும் பொறிக்குள் தள்ள நினைக்கும் ஜே.விபியின் தந்திரம் பலிக்குமா? ●

# சிங்களத்தின் ஆறுகள் பின்னோக்கிப் பாய்கின்றன

*க.வே.பாலகுமாரன்*

**'கொ**டுப்புக்குள் சிரித்தல்' என எம்மக்களிடை வழக்கொன்றுள்ளது. வெளிப்படையாக சிரிக்கமுடியாத நிலையில் வாய்க்குள் சிரிப்பதை இது குறிக்கும். ரணில் தனது எதிர்காலத் திட்டங்கள் யாவற்றினையுமே செயற்படுத்த கண்டுபிடித்த குறுக்கு வழியொன்று உயர் நீதிமன்றத் தீர்ப்பொன்றால் இழுத்து மூடப்பட்டுவிட்டது. நிச்சயம் ரணிலும் அவரது அணியினரும் தமது தலைவிதியை எண்ணி, தம்வினை தம்மைச் சுடுவதை எண்ணி மனம் நொந்திருப்பர். ஆன்மாவை நசித்து அதன் குரல்வளையை நெரித்த அரசியல் யாப்பு ஈற்றில் அந்நாட்டினைமதிக்கே இப்போது ஆப்பு வைக்கின்றது. சிங்களத்தின் யாப்புக்கள் யாவுமே இனமேலாதிக்கத்தின், அநீதியின் மறுவடிவங்கள்தானென தமிழ் மக்கள் கூறியது இன்று நூற்றிற்கு நூறு சரியென்றாகிவிட்டது. சருவதேச முகதாவில் இனச்சிக்கலுக்கான பேச்சுக்கள் நடைபெறும் இக்கால கட்டத்தில் அரசியல் யாப்பு மாற்றப்படவேண்டுமென குரல்கள் எழும் இவ்வேளையில் எம்மக்கள் இவைகுறித்தும் சிந்திக்கின்றார்கள்.

கழகத்திற்கு மேன்முறையீடு செய்யும் உரிமை என்பன இப்பாதுகாப்பு ஏற்பாடுகளில் முதன்மை வாய்ந்தவை. 29வது பிரிவின்படி இனத்தையோ, மதத்தையோ, சமூகத்தினையோ பாதிக்கும் சட்டங்களை நாடாளுமன்றம் இயற்றினால் அவற்றை நிராகரிக்கும் அதிகாரம் அதாவது அதில் கையொப்பமிடாது விடும் அதிகாரம் மகாதேசாதி பதிக்குண்டு. ஆனால் மகாகனம் பொருந்திய தனது ஒப்பத்தினை யெல்லாம் மகாதேசாதிபதி 1948,1949ஆம் ஆண்டுகளில் மலையக மக்களின் குடியுரிமை, வாக்குரிமை பறித்த வேறாக்கமே இவ்யாப்பின் கேலிக் கூத்தாக்கப்பட்டது. நாடாளுமன்றிற்கு தேசிய அரசப் பேரவையென பெயர்மாற்றம் செய்து சட்டவாக்கம், நிறை வேற்றதிகாரம், நீதி என முப்பெரும் அதிகாரங்களும் இப்பேரவையிடம் ஒப்படைக்கப்பட்டன. நீதித்துறை முற்றிலுமாக சுயத்தை இழந்தது. தேசிய அரசப் பேரவையே அரச அதிகாரத்தைப் பிரயோகிக்கும் உச்சமன்றென்றும் அமைச்சரவையின் ஆளுகைக் குட்பட்டே நீதிதிபதிகள் நியமனம், மாற்றம் போன்றவை நடைபெறுமென்றும் இவ்யாப்புக்கூறியது. எனவே இத்தகைய சனநாயகப் பண்பாட்டடிப்படையில் வந்த சிங்களத்தின் இன்றைய உயர் நீதியரசர் சரத்சில்வா செல்வதே மாற்றுவழி. அவ்வாறு சென்றாலும் விகிதாசாரமுறை பெரும்பான்மைப் பலத்தினைப்பெற விடுமா? 1978ஆம் ஆண்டு யாப்பின் 43,49,70,99ஆவது விதிகள் ரணிலை தலைசுற்ற வைக்கின்றன. சந்திரிக்காவை சற்று நிமிர வைக்கின்றன. யாப்பின் 43ஆவது விதி தனது கருத்தில் நாடாளுமன்றின் நம்பிக்கையை பெற்ற கட்சியின் ஆட்சியமைக்க சனாதிபதி கோர வழிவகுக்கின்றது. அப்படியானால் அம்மையார் தனது விருப்பப்படி எவரையும் அரசாங்கம் அமைக்க அழைக்க முடியுமா? அது எவ்வாறு நடைமுறைச்சாத்தியமாகும்? விதி 49 அமைச்சரவையைக் கலைத்து புதிய பிரதம அமைச்சரை, ஏனைய அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரத்தை சனாதிபதிக்கு வழங்குகின்றது. விதி எழுபதோ



அதேவேளை, "எண்ணி ஒரு வருடத்திற்குள் 78ஆம் ஆண்டு யாப்பை இல்லாமல் செய்துவிடுவேன்" எனப் பதவியேறிய அம்மையாரோ - பாவம் - அதே யாப்பினைப் பற்றித் தொங்கிய போதும் யாப்பின் முழு அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்த முடியாமல் குரங்கு ஆப்பையிழுத்ததா, ஆப்பே குரங்கை இழுத்ததா எனப் புரியாமல் தடுமாறுகிறார். ஆனால் இந்த இருவருமே 1978ஆம் ஆண்டு யாப்பு மாற்றப்பட வேண்டுமென மாறிமாறி தாளம் போடுவதைப் பார்த்துத்தான் எம்மக்கள் கொடுப்பிற்குள் சிரிக்கின்றார்கள்.

எங்கேயாவது ஆறுகள் வந்தவழி திரும்புமா? படிக்கட்டுக்கள் ஏறுவோரைக் கீழிறக்குமா? பூமாலைகள் பாம்புகளாகுமா? இவையெல்லாம் இன்று சிறிலங்காவில் நடக்கின்றன.

01. யாப்பு ரீதியானதும் பேச்சுக்கள் மூலமானதுமான வழியில் வடகிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு கண்டு இலங்கையில் இனவொற்றுமையைப்பேண
02.நாட்டின் பொருண்மியத்தை மீள உறுதிப்படுத்த
03. அரசாங்கத்தினதும் நாடாளுமன்றத்தினதும் அதிகாரங்களை உறுதிப்படுத்த

எனக் காரணம் கூறி அரசியல் விழிப்புணர்வினைப் பெற்றுவிட்ட எம்மக்கள் தம் மன வாசிப்பில் வரலாற்றினேடுகளைத் திருப்பப்புரட்டுகிறார்கள். சிங்களத்தின் யாப்புக்களால் இழந்துபோக வைக்கப்பட்ட தமது இறந்த காலத்தை எண்ணிப்பார்க்கின்றார்கள்.

1833ஆம் ஆண்டிலிருந்து எட்டு யாப்புக்களை இலங்கை சந்தித்ததாக வரலாறு கூறுகின்றது. ஆங்கிலேயர் ஆளுகைக்குதவிய கோல்புறுக் - டொனமூர் வரையிலானவற்றைத் தவிர்த்து 1948இன் பின்னான வற்றினைக் கவனத்தில் கொள்ளலாம். சோல்பரி அரசியல் யாப்பு 1947ஆம் ஆண்டே நடை முறைக்கு வந்தாலும் சட்டங்களிற்கும் 1956ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டத்திற்கும் வைத்தார் என்பதே வரலாறு. அதுபோலவே இலங்கை நீதிமன்றங்களில் தமக்கு நீதி கிடைக்கவில்லையெனக் கருதுவோர் பிரித்தானியக் கோமறைக் கழகத்திற்கு முறையீடு செய்யலாமென்கிற உரிமையை 1971ஆம் ஆண்டின் 44ஆம் இலக்கச் சட்டம் மூலம் சிறிமாவோ பறித்தெடுத்தார். புகழ்பெற்ற கோடீசுவரன் வழக்கில் தமக்குச் சாதகமான தீர்ப்புக் கிடைக்காதென்கிற நிலையிலே இவ்வாறு சிறிமாவோ செய்தார். எனவே மனச்சான்றின்படி வாக்களிக்கும் உரிமை யாப்பின்படி நாடாளுமன்ற

அம்மையாரின் விசுவாசியாக அரசியல் கட்சியொன்றின் ஆதரவாளராக செயற்படுகிறாரென எவ்வாறு குற்றம் சொல்லமுடியும்? இவ் யாப்பானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முகிழ்ப்பிற்குப் பிரதான காரணமாகியதில் என்ன வியப்புள்ளது?

இத்தகைய மரபுவழி வந்த அரசியல் பண்பாட்டின் உச்சமாகவே 1978ஆம் ஆண்டு யாப்பினை ஜே.ஆர் கொண்டுவந்தார். நாடாளுமன்றத்திற்கு 1972ஆம் ஆண்டு வழங்கிய அதிகாரங்களையெல்லாம் முற்றுமாகப் பறித்தெடுத்து தனக்குத் தானே முடிசூடிக்கொண்டார் டிக்கி யங்கி புகழ் குள்ளநரி ஜே.ஆர். சட்டத்துறையாலே கட்டுப்படுத்த முடியாத நிறைவேற்றதிகாரம் கொண்ட சனாதிபதி முறை அரசியல் உறுதிப்பாடு என்கிற பெயரில் எதிர்க்கட்சி அதாவது சிறிமாவோ (அன்று) என்றுமே பதவிக்கு வராமலிருக்க விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை ஓரின, மத, மொழி இலக்குக்கொண்ட மாற்றக் கடினமான நெகிழா யாப்பு முறை, என ஜே.ஆர் புரிந்த ஆணவ வெறியாட்டத்தின் இன்றைய விளைவென்ன. இன்று யாப்பினைக் கொண்டுவந்த அணியினரையே குப்புறக்கவிழ்த்து குழியும் பறிக்கின்றது. 1978ஆம் ஆண்டின் பின் எம்மக்களைக் கொன்று குவித்து, குருதியாறு ஓடச்செய்து, ஊர்விட்டு விரட்டி உடமையழித்த இவ்யாப்பு இன்று ரணிலின் முதுகிலே குத்துகின்ற விந்தையைக் கண்டும் எம்மக்கள் கொடுப்பிற்குள் சிரிக்கின்றார்கள்.

இப்போது ரணில் எல்லாரினதும் எல்லாப்பாவங்களையும் சுமக்கின்றார். இப்போது அவருக்கு முன்னுள்ள வழி என்ன? வழிகாணாவிட்டால் அவர் நிலையென்ன? நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறும் வழி மூடப்பட்டதால் மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பிற்குச் செல்ல முடியாது. பொதுத் தேர்தல்

நாடாளுமன்றை இருமாதம் தள்ளிப்போட, ஒருவருடத்தின் பின் கலைக்க, புதிய தேர்தலுக்கு திகதி குறிக்க அனுமதி வழங்குகின்றது. விதி தொண்ணூற்றொன்பதோ கட்சி முடிவுக்கு மாறிவாக்களிக்கும் அல்லது முடிவின்படி வாக்களிக்க மறுப்போரின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறிக்க வழிவகுக்கின்றது. எனவே பொதுத்தேர்தலுக்குச் செல்வது, அதற்கு சனாதிபதி தடைபோட்டால் அவரோடு சமரச ஏற்பாடொன்றிற்குச் செல்வது - இது ரணிலின் முன்னுள்ள நிலை.

அம்மையாரும் அல்லாடுகின்றார். பொதுத் தேர்தலுக்குச் செல்லாமல் நாடாளுமன்றில் பெரும்பான்மையற்ற தனது கட்சியை ஆட்சியமைக்கக் கோருதல் எவ்வளவு கீழ்த்தரமானது. இது அவருக்கே புரியும். பொதுத் தேர்தலுக்குச் சென்றாலும் இருக்கும் ஆதரவையும் இழக்கும் நிலையே காணப்படுகின்றது. அப்படியானால் அவரும் ரணிலோடு சமரசம் செய்யப்போகின்றாரா? அவ்வாறு இருவரும் செய்யும்போது பாதிக்கப்படுவது நிச்சயம் அமைதி முயற்சியல்லவா? இது முடிவற்று நீளும் கதை. ஆனால் எரிகிற கொள்ளியை எடுத்து தமிழர் தலையில் தேய்க்கும் கதை இனி நடவாது. என்னதான் இக் குழப்பத்திற்கு முடிவென தீர்மானிக்க வேண்டியவர் சிங்கள மக்களே. எம்மைப் பொறுத்த வரையில "நினைவுகள் அழிவதில்லை, உண்மைகள் மறைவதில்லை".

> **அரசியல் விழிப்புணர்வினைப் பெற்றுவிட்ட எம்மக்கள் தம் மன வாசிப்பில் வரலாற்றினேடுகளைத் திருப்பப் புரட்டுகின்றார்கள். சிங்களத்தின் யாப்புக்களால் இழந்துபோக வைக்கப்பட்ட தமது இறந்த காலத்தை எண்ணிப் பார்க்கின்றார்கள்.**

சனாதிபதியின் அதிகாரச் சிறகுகளை நறுக்கித்தள்ள 19ஆவது திருத்தத்தினை நிறைவேற்ற எடுத்த முயற்சிகளை மக்கள் தீர்ப்பிற்கும் விடப்பட வேண்டுமென்கிற உயர் நீதிமன்றத் தீர்ப்பு சிதறடித்து விட்டது. எக்கட்சியையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இத்திருத்தத்திற்கு வாக்களிக்க ஏதுவாகக் கொண்டு வந்த திருத்த விதியினையும் மனச்சான்றின்படி உறுப்பினர்கள் வாக்களித்தல் யாப்பிற்கே முரண் எனவும் தீர்ப்பு வழங்கி சிரழித்து விட்டது. இவ்வாறு எங்கேயாவது நடக்குமா? ஒரு நாட்டின் உயர்ச்சிக்கு, வளர்ச்சிக்கு, அமைதிக்கு வழிகோலவேண்டிய அரசியல் யாப்பே இவை யாவற்றிற்கும் எதிராக அமையுமா? ஒரு நாட்டில் வாழும் பிறிதொரு இனத்தின்

1948ஆம் ஆண்டின் பின்னான இலங்கையின் முதல் யாப்பாகவும் மாற்றம் கண்டது. இவ் யாப்பில் மட்டுமே 'சிறுபான்மையினர்' என அவர்களே வரையறுத்த மக்களுக்கான சில காப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பின்வந்த 1972ஆம், 1978ஆம் ஆண்டு யாப்புக்களில் இவை அறவேயில்லை என்பதாலும் தமிழ், முசுலீம் மக்களின் அரசியல், பொருண்மிய, சமூக இருப்புக்களை யாப்புக் காப்பீடுகள் மூலம் உறுதிப்படுத்த முடியும் எனக் கூறுவோர் கருதியும் சோல்பரியின் காப்பீட்டிற்கு நடந்தது என்னவென்பதை திரும்பவும் எண்ணிப் பார்த்திடல் அவசியமாகின்றது.

சோல்பரியின் யாப்பின் 29வது பிரிவு பிரித்தானிய உயர் நீதிமன்றமான கோமறைக்

உறுப்பினர்களுக்கில்லையென்கிற தீர்ப்பில் என்ன தவறுள்ளது? ஏனெனில் மனச்சாட்சிக்கும் யாப்பிற்கும் சிறிலங்காவில் என்றுமே பொருத்தமிருந்தது கிடையாது.

இதுவரை நாம் நோக்கியது காப்புக்கள் உள்ள ஒரு யாப்புப் பற்றியது. ஆனால் சோல்பரியின் காப்புக்களையே இல்லாமல் செய்து உருவாக்கப்பட்டது 1972ஆம் ஆண்டின் குடியரசு யாப்பு. 36.9 விழுக்காடு வாக்குகளை மட்டும் பெற்ற சிறிமாவோ புதிய யாப்பினை உருவாக்க மக்களாணை கிடைத்தது எனக்கூறி மாய்மாலம் செய்துருவாக்கியது இவ்யாப்பு. முதன்முறையாக சிங்களத்தை அரசகரும மொழியாக்கி, பௌத்தத்தை அரசாங்க மதமாக்கி அட்டகாசம் செய்த யாப்பிது. அத்தோடு சனநாயகத்தின் அடிப்படைத் தத்துவமான வலு

"புதையுண்டவர்கள் இன்னும்
புதையுண்டவர்கள்.
ஆழக்கிடந்தெருத்து
அத்தனையும் புதையுண்டவர்கள்.
வானம் பொழிகின்ற,
பூமி விளைகின்ற
வளமான ஒரு நாளில்
எங்கள் வரலாற்றினைப்
புதைகுழிகள் எழுதும்."

யுதிட்டிரன் - சரிநிகர்.

நன்றிகள்: மு.திருநாவுக்கரசு
சி.அ.யோதிலிங்கம்
வி.ரி.தமிழ்மாறன்

# 'மக்களிடமிருந்து நிலங்களைப் பாதுகாத்தல்'

## — அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் —




"பாடசாலைச் சூழலுக்குள் மாணவர்கள் தவிர்ந்த ஏனைய வெளியார் பிரவேசிக்க வேண்டிய தேவை இல்லை".

இது கடந்த சில மாதங்களின் முன்னர் பருத்தித்துறையில் தமது பாடசாலைச் சூழலில் அமைந்துள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தை விலக்கி, மக்களை மீள் குடியேறி நடமாட அனுமதிக்குமாறு ஹாட்லிக்கல்லூரி, மெதடிஸ் பெண்கள்கல்லூரி மாணவர்கள் நிகழ்த்திய போராட்டத்தைக் கண்டித்து யாழ்மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா விடுத்த அறிவிப்பு.

இன்று, வடக்கு கிழக்கில் தமிழர் வாழிடங்களின் கணிசமானதொரு பகுதி இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்கள் நடமாட்டத்திற்கும், மீள் குடியேற்றத்திற்கும் தடைசெய்யப்பட்ட பகுதிகளாகக் காணப்படுகின்றன.

போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், வடக்கு கிழக்கில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் இராணுவத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்த எந்தவொரு உயர்பாதுகாப்பு வலயமும் முற்றாக விலக்கிக் கொள்ளப்படவில்லை என்பது கவனத்திற்குரியது.

இன்றும் தொடரும் செறிவான படைப் பிரசன்னமும் ஆங்காங்கே காணப்படும் இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்களும் மக்களின் மனதில் சமாதான முன்னெடுப்புக்கள் பற்றிய ஆழ்ந்த நம்பிக்கைகளைத் தோற்றுவிப்பதன் தடைக்கல்லாகவே உள்ளன. இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கின் பகுதிகளில் வாழும் மக்கள் இன்றும்கூட ஆக்கிரமிப்புப் பொறியினுள் வாழும் அச்ச உணர்வுடனேயே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

மக்களின் பாதுகாப்பையும், இறைமையையும் காப்பதற்காகவே வடக்கு கிழக்கில் பிரசன்னமாகியுள்ளோம் எனக் கூறிக்கொள்ளும் இராணுவம் மக்களின் அன்றாட வாழ்வினதும், பூர்வீக இடங்களை நோக்கிய மீள்குடியேற்றத்தினதும் அச்சுறுத்தும் சக்தியாக நிற்பது கேலிக்குரிய முரணே.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனிதநேய சட்டங்கள்கூட இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்தினதும், பாதுகாப்பான வாழ்வினதும் உறுதிப்பாட்டையே வலியுறுத்தி நிற்கின்றன. போர் ஓய்ந்து வடக்கு கிழக்கு மக்களிடையே இயல்புநிலை தோன்றுவதாகக் கூற முற்படும் போது, போர் காரணமாக இடம்பெயர்நது மீளத் தம் சொந்த இடங்களில் குடியேற படையினரால் அனுமதி மறுக்கப்பட்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களின் அன்றாட வாழ்வின் அவலங்களும் கவனத்திற்குரியவையே.

இன்று யாழ் குடாநாட்டில் ஆங்காங்கே மக்கள் வாழும் பிரதேசங்களில் காணப்படும் இராணுவமுகாம்கள், பாதுகாப்பு அரண்களைவிட மக்களின் நடமாட்டத்திற்கு முற்றாகத் தடை செய்யப்பட்ட இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகப் பதின்மூன்று பிரதேசங்கள் இனங்காணப்பட்டுள்ளன. பெருமளவில் வளமான விவசாய

**- அன்புமாறன் -**

நிலங்களையும், கடற்தொழிலுக்கேற்ற பல கரையோரப் பகுதிகளையும், குடாநாட்டின் பிரதான தொழிற்சாலைகளையும் உள்ளடக்கியிருக்கும் இவ் உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து அண்ணளவாக 24,178 குடும்பங்கள் இடம்பெயர்ந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன.

குடா நாட்டில், தெல்லிப்பளை - பலாலி இராணுவ வலயத்தின் முன்னணிப் பாதுகாப்பு நிலைகள் மக்களின் நீண்ட போராட்டத்தின்பின் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, யூனியன் கல்லூரிப் பிரதேசங்களில் பின்நகர்த்தப்பட்ட போதிலும் அப்பகுதியில் இருந்த பாடசாலைக் கட்டடங்கள் தவிர்ந்த ஏனைய கட்டடங்களும், மக்களின் வீடுகளும் புல்டோசர்கள் கொண்டு இடித்தழிக்கப்பட்டு, இன்று அவ்விரு பாடசாலைகளும், பொது மக்களின் மீள் குடியேற்றமோ, நடமாட்டமோ தடை செய்யப்பட்டதொரு நிலத்தில், இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தின் உள்ளே செயற்பட அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அண்மையில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெற இருந்த ஆசிரியர் தினமும், உதைபந்தாட்டப் போட்டியும்கூட அப்பகுதி இராணுவத் தளபதியால் தடைசெய்யப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளன.

போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு யாழ் - கண்டி A9 சாலை திறக்கப்பட்டபின், நான்கு மாதங்களில் 70,000 வரையிலான மக்கள் மீள்குடியேறச் சென்றபோதும் 35,000 வரையிலான மக்களே தமது சொந்த இடங்களில் மீள்குடியேறியுள்ளனர்.

இன்று, தென்னிலங்கையில் அமைந்திருந்த பெரும்பாலான சோதனைச் சாவடிகள், இராணுவ முகாம்கள், உயர் பாதுகாப்பு வலயங்கள் விலக்கப்பட்டு தென்பகுதி மக்களின் வாழ்வு இயல்புமயப்படுத்தப்பட்ட போதும், தொடர் யுத்த அழிவினால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து இருக்கும் வடக்கு - கிழக்கு மக்களின் அடிப்படை வாழ்வுக்கான இயல்புநிலை இன்னமும்கூட தோற்றுவிக்கப்படவில்லை. இராணுவ நிலைகளும், முகாம்களும், உயர்பாதுகாப்பு வலயங்களும் பலப்படுத்தப்பட்டும், மீள்சீராக்கம் செய்யப்பட்டும் மக்கள் நடமாட்டத்திற்கான தடை விதிக்கப்பட்டும் வரும் நிலையே ஆக்கிரமிப்பு இராணுவத்தால் சூழப்பட்ட குடாநாடு உள்ளிட்ட தமிழர் தாயக நிலப்பரப்பில் காணப்படுகின்றது.

இராணுவ முகாம்களையும், மக்களின் நடமாட்டத்திற்குத் தடைசெய்யப்பட்ட அதியுயர் பாதுகாப்பு வலயங்களையும் இணைக்கும் இராணுவப் பயன்பாட்டு வீதிகள் அமைக்கப்படுகின்றன. இதற்காகவும்கூட மக்கள் வாழிடங்களும், வயல் நிலங்களும் இன்னும் இன்னும் இராணுவ மயப்படுத்தப்பட்டு பறிக்கப்படுகின்றன.

யாழ் குடாநாட்டில் மாத்திரமன்றி வவுனியாவின் ஓமந்தை, சேமமடு, இறம்பைக்குளம் போன்ற பகுதிகளும் மன்னாரின் பல பகுதிகளும் திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் சில பகுதிகளும் மக்கள் மீள் குடியேறவோ, நடமாடவோ முற்றாகத் தடைசெய்யப்பட்ட இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக்கப்பட்டுள்ளன.

உலகின் எந்தவொரு சட்ட விரிப்பும் அங்கீகரிக்க மறுக்கும், அடிப்படையான, மக்களின் வாழ்வு, மீள்குடியேற்ற உரிமைகளை அதியுயர் பாதுகாப்பு வலயங்களின் இருப்பு மூலம் சிறிலங்கா அரசு மீறி வருகின்றது.

ஐக்கியநாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதான விதியே இடம்பெயர்ந்த மக்களைச் சொந்த நிலங்களில் மீளக் குடியமர்த்துவது என சொல்லிவரும் போதிலும், போர்நிறுத்த ஒப்பந்தம் மக்களிடையே தொடரும் இராணுவ பிரசன்னங்களையும், மக்களின் இயல்பு வாழ்வு மீதான அச்சுறுத்தல்களையும் படிப்படியாகக் குறைக்கும் எனச் சொல்லியிருந்தும், தொடரும் சமாதானப்பேச்சுக்கள், அதியுயர் பாதுகாப்பு வலயங்களின் படிப்படியான விலகல் பற்றிய ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்குமென்ற தோற்றப்பாடு நிலவி வரும் போதிலும், இன்னும்கூட வடக்கு கிழக்கின் லட்சக்கணக்கான மக்கள், தமது பூர்வீக வாழ்விடங்களை ஆக்கிரமித்து உருவாக்கப்பட்டிருக்கும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களின் இருப்பால் இடம்பெயர்ந்து, நிலமற்று, நிவாரணத்திற்கு காத்திருப்பவர்களாக அவலப்படுகின்றனர். யாழ்குடாநாடு உள்ளிட்ட வடக்கு கிழக்கின் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களினது தொடர் இருப்பும், மக்களின் சுதந்திரமான மீள் குடியேற்றத்திற்கு அவற்றால் ஏற்படும் தடைகளும் தொடரும் சமாதான முன்னேடுப்புக்களினதும், நல்லெண்ணங்களினதும் அவநம்பிக்கைத் தோற்றங்களாகவே மக்கள் முன் விரிகின்றன. ■

*யாழ் குடாநாட்டில் காணப்படும் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள்.*

| இல | | இடம்பெயர்ந்த குடும்பம் | வலயத்தில் உள்ளடங்கும் கி.சே பிரிவு |
|---|---|---|---|
| 01 | காரைநகர் | 200 | 03 |
| 02 | ஊரணி | 98 | 01 |
| 03 | வேலணை | 61 | 02 |
| 04 | மண்டைதீவு | 553 | 02 |
| 05 | ஞானம் விடுதி (யாழ்நகர்) | 125 | 01 |
| 06 | கிழக்கு அரியாலை | 2296 | 06 |
| 07 | தனங்கிளப்பு | 624 | 03 |
| 08 | எழுதுமட்டுவாள் | 651 | 03 |
| 09 | வடமராட்சி கிழக்கு (அம்பன்) | 551 | 04 |
| 10 | பலைப்பை (பருத்தித்துறை) | 10 | 02 |
| 11 | பருத்தித்துறை | 50 | 01 |
| 12 | வல்வெட்டித்துறை | 20 | 01 |
| 13 | தெல்லிப்பளை-பலாலி | 18,939 | 28 |
| | மொத்தம் | **24,178** | **67** |

# சமாதான எதிர்ப்பு வியூகங்களும் ஜனாதிபதியின் தலைமைத் தளபதியும்

சிறிலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து அமைக்கவுள்ள உத்தேச கூட்டுச் செயலணிக்குழு தொடர்பாக சந்திரிகாவின் கருத்துக்கள் இப்போது வெளிவரத் தொடங்கி விட்டன. அதாவது அவர் அதனை, வழமையாக ஒவ்வொரு சமாதான நகர்வையும் எதிர்ப்பது போன்று எதிர்க்க போவதாக அறிவித்துள்ளார்.

அதனை எப்படி எதிர்க்க போகிறார் என்றால் சட்டரீதியில் அதற்கு எதிராக வழக்கு தொடர்ந்தே எதிர்க்கவுள்ளாராம். இந்த உத்தேச செயலணிக்குழுவுக்கு அமைப்பு செயற்பாடுகளுக்கு எதிராக அதனை இடைநிறுத்தி வைக்கும் திட்டத்துடன் உச்ச நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்வது குறித்து தனது சட்ட ஆலோசகர்களுடன் தீவிரமாக ஆராய்ந்தும் வருகிறாராம்.

சரி, எதிர்ப்பதற்கான காரணம்தான் என்ன?

உத்தேச செயலணிக்குழு மட்டுமல்ல சமாதானம் தொடர்பான சகல அமைப்புகளும், சகல செயற்பாடுகளும் தனக்கும் தனது அதிகார எல்லைக்கும் கீழ்தான் இயங்க வேண்டும் என்ற நிறைவேற்று அதிகார உரிமையை அந்த அமைப்பும், அதன் நடவடிக்கைகளும் புறக்கணிக்கிறதாம்.

சமாதானம் குறித்த பொதுசன ஐக்கிய முன்னணியின் நிலைப்பாடு உலகறிந்த ரகசியமாகும்.

'போர் மூலம் சமாதானம்' என்ற சாத்தியமற்ற கோட்பாடே சந்திரிகாவின் தாரக மந்திரமாகும். அதை இன்று வரை அவர் கைவிடவில்லை. மாறாக சமாதானத்திற்கு ஆதரவு என்று சொல்லிக் கொண்டு அதன் ஒவ்வொரு கட்ட முன்னெடுப்பினையும் எப்படி குழப்புவது என்ற தீவிர சிந்தனையுடன் அவர் செயற்பட்டு வருவதும் உலகறிந்த ஒன்றே.

ஒருவேளை அவர் சமாதான நகர்வுகளுக்கு ஆதரவை வேண்டா வெறுப்பாக வழங்க முன் வந்தாலும் அவரது சக பாடிகளான ஜே.வி.பி, மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற இனவாத கட்சிகள் அதற்கு சம்மதிக்க போவதில்லை. போதாக் குறைக்கு 'சிகல உறுமயவும்' பொ.ஐ.முன்னணிக்கு தனது ஆதரவை பேரினவாத கொள்கை அடிப்படையில் தரத் தயார் என அறிவித்துள்ளது.

இந்த நிலையில் சந்திரிகாவிற்குரிய தீர்வாக இருப்பது சமாதான செயற்பாடுகளை எதிர்ப்பதும் நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி ரணிலின் ஆட்சியை எவ்வாறாயினும் கலைத்து தனது ஆதரவு சக்திகளை பதவியில் அமர்த்துவதும்தான்.

அதற்கு அவர் தனது 'எடுபிடி' யும், எஜமான விசுவாசம் கொண்டவருமான லக்ஷ்மன் கதிர்காமரையே பயன்படுத்த நினைத்துள்ளார் என்று செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன. செயலணிக்குழுவுக்கு எதிராக உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்யும் வழக்கையும் அவர் மூலமே செய்யச் சந்திரிகா



தீர்மானித்துள்ளார் எனத் தெரிகிறது.

பேரினவாதிகளின் அபிலாஷைகளை நிறைவேற்ற கதிர்காமரை விட்டால் சிறிலங்காவில் வேறு எவருமில்லை. அதனால்தான் சந்திரிகா தன்னினத்தைச் சேர்ந்த எத்தனையோ சட்ட வல்லுனர்கள் இருக்கவும் கதிர்காமரைத் தனது சட்ட மற்றும் வெளியுறவு ஆலோசகராக நியமித்துள்ளார்.

சமாதான எதிர்ப்பு வியூகத்திற்கான சந்திரிகாவின் தலைமைத் தளபதி இப்போது கதிர்காமரேதான்.

# இத்தீவின் மக்களிடமிருந்து சமாதானம் அதிக விழிப்பைக் கோருகிறது



ரணிலின் காட்டில் இப்பொழுது நல்ல மழை. ஜனாதிபதிக் கதிரையில் சந்திரிகா என்ற தடைக்கல்லை நீக்க எடுத்த 19 வது திருத்தச் சட்ட முயற்சி வெற்றியளிக்காததில் அவருக்கு விரக்தி எதுவுமில்லை. அவர் தானே தனது அரசைக் கலைத்து ஒரு புதிய தேர்தலை எதிர்கொண்டு சமாதானத்தின் பெயரால் அதிக பலத்துடன் ஆட்சி அமைத்து இதனைச் சாதித்துவிட முடியும் என்ற உற்சாகத்தில் இருக்கிறார்.

கொடிய வடுக்களைத் தாங்கியும் அதன் வேதனையைத் துய்த்தும் அந்தப் போரையே முன்னெடுத்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளான மக்களுக்கு எதிர்த்தரப்பில் இவ்வாறு சமாதானம்பற்றி எழும் எண்ணம் எந்தளவு ஆறுதலையும் மன அமைதியையும் எதிர்பார்ப்பையும் கொடுக்குமென்பதை யாரும் சொல்லத்தேவையில்லை.

ஆனால் இத்தகைய சமாதானம் உருவாக்கப்படுவதைத் தமது அரசியல் இலாபம் கருதி அதிக அக்கறையுடன் வரவேற்கின்றன.

இந்த இரண்டின் துணைகொண்டு, ஐ.தே.கட்சியை ஆட்சிப் பீடத்தில் ஸ்திரப்படுத்தவும் கட்சிக்குள் தன்னை ஸ்திரப்படுத்தவும் எதிர்க்கட்சியான பொ.ஜ.ஐ.முன்னணியையும் மற்றும் ஜே.வி.பி யையும் அரசியலிலிருந்து மிக அதிகமாக ஓரங்கட்டிவிடவும் அரசியலில் பண்டாரநாயக்கா குடும்பத்தை ஓரம்கட்டி என்று திடமாக நம்புகிறார். அவரது பேச்சும் செயற்பாடும் அதனை உறுதிப்படுத்துவதாகவே உள்ளன. சிங்கள மக்களின் இத்தகைய மனநிலையே மெய்யானதென அரசியல் உணர்வுள்ள சிங்களப் புத்திஜீவிகளும் சொல் கிறார்கள்.

தமிழர்கள் இத்தனை ஆண்டுகால நீண்ட போராட்டத்தின் பின்பு, இன்று அடைந்துவிட்ட படைப்பலத்தின் பின்பு, இத்தனை உயரிய தியாகங்களின் பின்பு சமதையற்ற ஒரு

தான் விழிப்பாக இருப்பதாகவும் சிங்கள மக்களுக்குப் பாவனை பண்ணுவதில் ரணில் மிகுந்த அக்கறையாகச் செயற்படுகின்றார். சிங்கள மக்களுக்கு அந்த விடயத்தில் தான் விழிப்பாக இருப்பதாகக் காட்டுவதே சந்திரிகாவையும் அவரது கட்சியையும் வீழ்த்த மட்டுமல்ல, தன்னையும் தனக்கு வாய்ப்பான இந்தச் சூழலையும் பாதுகாப்பதற்குள்ள ஒரே வழியென்பதை அவர் திடமாக விளங்கியுள்ளார்.

வெளிநாடுகளுக்கான

ஐக்கிய தேசிய முன்னணியின் உட்கட்சிப் பிரமுகர் ஒருவர் கூறினார், ரணில் விக்கிரமசிங்கா தாம் ஒரு புதிய தேர்தலை எதிர்கொள்ள முடிவெடுத்துள்ளதாயும் அதற்கான துரித தயார்படுத்தலில் தீவிரமாக இறங்குமாறும் அதற்குரிய உதவிகள் ஒத்துழைப்புக்களைத் தான் வழங்குவதாகவும் அவர் கூறியதாகச் சொன்னார்.

ஆக சமாதானத்தின் பெயரால் ஐ.தே.முன்னணி ஒரு பலமான அரசை ஸ்தாபிக்கவும் ஸ்திரப்படுத்தவும் அரசுக்கு வாய்ப்பான காலமாக இதை அது கருதுகிறது. உண்மையில் சூழ்நிலையும் அவ்வாறே இருக்கின்றதென நம்பலாம்.

1978ம் ஆண்டு அரசியல் யாப்பின் படியான விகிதாசாரத் தேர்தல் முறையில் இலங்கையில் ஒரு கட்சி 2/3 பெரும்பான்மை பெறுவது முடியாத காரியமென்றே திட்டவட்டமாக விளங்கப்பட்டிருந்தது. ஆனால், கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே. முன்னணி பெற்ற வாக்குகள் இத்தகைய நம்பிக்கைக்கு அடியாக விழுந்திருக்கிறது. அந்தளவிற்கு சமாதானத்தின் பெயரால் சிங்கள மக்களின் மனங்களை வெல்லக் கூடியவாறு நிலைமை உள்ளது உண்மை.

தமிழ் மக்களுக்கு ஒரு இனிப்பான செய்தி. போரின் உண்மையை விடவும் இந்தச் சமாதான எண்ணம் பற்றியும் அதைக் கையாளும் விதம் பற்றியும் இதைவிடக் கொடுமையான உண்மை இருக்கிறது. அதுதான் சமாதானத்திற்குத் தேவையானது.

யுத்தத்தில் இராணுவத்தரப்பு எதிர் கொண்ட தொடர் தோல்வியும் அதனால் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவுமாக இணைந்து சிங்கள மக்களிற்கு யுத்தத்தின் நிச்சயமற்ற வெற்றிக்காகத் தமது வாழ்வு நெருக்கடிக்குள்ளாவதான உணர்வை மேலெழ வைத்தது. தமது வாழ்வில் யுத்தம் ஏற்படுத்துகின்ற நெருக்கடிகளால் யுத்தத்தைத் தவிர்த்துவிட அவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். அதேபோல், இலங்கையுடனான இராஜதந்திர தொடர்புகளைப் பேணும் சர்வதேச அரசுகள் பல இலங்கையில் விடவும் இந்த வாய்ப்பான சூழலைப் பயன்படுத்திவிட ரணில் அரசாங்கம் சமாதானத்தை மிக இலாவகமாகக் கையாளுவதில் சிரத்தையுடன் செயலாற்றுகிறது.

ரணிலின் இத்தகைய அரசியல் சிந்தனை ஓட்டமும் அதன் யதார்த்தபூர்வமும் சந்திரிகாவிற்கு விளங்காததல்ல. தன்னை நசுக்குவதற்கான இயந்திரம் ஒன்று பொருத்தப்பட்டுக் கொண்டிருப்பதை அவர் நன்கு அறிவார். ஆனால், இவற்றையெல்லாம் உடைத்தெறியவல்ல பொருத்தமான இராஜதந்திரத்திற்கு அவர் காத்திருக்கிறார் போல தெரிகிறது.

சந்திரிகாவின் கணிப்பின்படி 'சிங்கள மக்கள் சமாதானத்தை ஆதரிக்கிறார்களேயன்றி தமிழ் மக்களுடனான சமதையை அவர்கள் ஆதரிக்கவில்லை அதனை ஆதரிக்கவும் மாட்டார்கள்' சமாதானத்தை ஏற்றுக் கொள்ளவோ ஆதரிக்கவோ போவதில்லை என்பதை சந்திரிகா அதிகம் உணர்ந்துள்ளார். இத்தகைய யதார்த்தத்தில் சமாதானப் பேச்சுக்களின் ஒரு கட்டத்தில் சிங்கள மக்களைக் கிளர்ந்தெழ வைக்கவும் தன்பால் ஈர்த்துவிடவும் ரணிலை வீழ்த்திவிடவும் முடியுமென அவர் நம்புகிறார். அதற்கு அவர் மிகப் பொருத்தமான ஒரு தருணத்திற்காகக் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

ஆனால் சிங்கள மக்களின் இந்த மெய்யான மனநிலையையும், சந்திரிகா மூலம் தனக்கு எழவிருக்கும் ஆபத்துக்களையும் ரணிலும் உணராமலில்லை.

சமாதானத்திற்கும் சமதைக்கும் உள்ள வேறுபாட்டைத் தான் உணர்ந்திருப்பதாகவும் அதில் இராஜதந்திர விஜயங்கள், பாதுகாப்பு ஒப்பந்தங்கள், சமாதானப் பேச்சில் இணங்கப்பட்டிருப்பது பற்றிய இராஜதந்திரச் சொல்லாடல்கள் என்பவற்றின் மூலம் அவர் இதனைத் தோற்றப்படுத்த விரும்புகிறார்.

தெற்கின் சமாதானம்

– பிரபுத்திரன் –

பற்றிய மிகமெய்யான பரபரப்புகள் இவையே. இதில் சமாதானத்தை விரும்புகின்ற சிங்கள மக்கள் தமிழ் மக்களின் கௌரவமான சமதையான வாழ்வையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை அடைய வேண்டும். இல்லாவிடில் அவர்கள் எதிர்பார்க்கும் சமாதானம் பற்றிய உணர்வு அவர்களின் ஆட்சியாளர்களால் அதிகாரக் கைப்பற்றுதலுக்கான இராஜதந்திரக் குண்டலத்தில் பலியிடப்பட்டுவிடும். அதில் அவர்களின் வாழ்வும்தான் பலியிடப்பட்டுக் கொண்டிருக்கும் என்பதை அவர்கள் விளங்கிவிடத் தவறக்கூடாது.

தமிழ்மக்கள் தமது அமைதி வாழ்விற்குத் தெற்கின் சமாதானம்பற்றிய இந்த மொத்த வடிவத்தையும் அதன் கையாடல்களையும் புரிந்துகொள்ளவும் அதில் விழிப்பாய் இருக்கவும் தவறக்கூடாது. ●

**தமிழர்கள் இத்தனை ஆண்டுகால நீண்ட போராட்டத்தின் பின்பு, இன்று அடைந்துவிட்ட படைப்பலத்தின் பின்பு, இத்தனை உயரிய தியாகங்களின் பின்பு சமதையற்ற ஒரு சமாதானத்தை ஏற்றுக்கொள்ளவோ ஆதரிக்கவோ போவதில்லை என்பதை சந்திரிகா அதிகம் உணர்ந்துள்ளார். இத்தகைய யதார்த்தத்தில் சமாதானப் பேச்சுக்களின் ஒரு கட்டத்தில் சிங்கள மக்களைக் கிளர்ந்தெழ வைக்கவும் தன்பால் ஈர்த்துவிடவும் ரணிலை வீழ்த்திவிடவும் முடியுமென அவர் நம்புகிறார். அதற்கு அவர் மிகப் பொருத்தமான ஒரு தருணத்திற்காகக் காத்திருக்க வேண்டியிருக்கிறது.**

# தேசிய மகளிர் மாநாடு:

## தாயகப் பெண்களின் சங்கமம்

~ சு.தமிழினி ~

இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் 15ஆவது நினைவு நாளையும் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு 2002/09/28,29,30 ஆகிய தினங்களில் கிளிநொச்சி தூயவன் அரசறிவியல் கல்லூரியில் தேசிய மகளிர் மாநாடு ஒன்றினை தமிழீழப் பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் நடாத்தியிருக்கிறது. இம்மாநாட்டில் தமிழீழத்தின் சகல மாவட்டங்களிலிருந்தும் 450 பெண்கள் கலந்து கொண்டிருந்தனர். "தமிழீழப் பெண்களின் சமகாலப் பிரச்சினைகளை இனங்காணல்" என்பதே இம்மாநாட்டின் பிரதான நோக்கமாக இருந்தது.



மிக நீண்ட ஆக்கிரமிப்புப் போரும், இடப் பெயர்வுகளும், பொருளாதாரத் தடைகளும், இராணுவ நிர்வாகமும் எமது சமூகத்தின் உயிர்க் கூட்டையே ஈடாடச்செய்யும் அளவிற்குப் பல பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. அதிலும் குறிப்பாகப் பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகள் மிகவும் மோசமானதும் ஒரு சமூகத்தின் இயக்கத்தில் நீண்டகாலப் பாதிப்புக்களை நிகழ்த்தக் கூடியதுமாகும். ஏனெனில் சமூகத்தின் தவிர்க்கவியலாத அங்கமாகத் திகழும் பெண்களின் கைகளில்தான் எதிர்காலச் சமூக மாற்றத்திற்கான கணிசமான பொறுப்புத் தங்கியுள்ளது. எனவேதான் இந்தச் சமாதானச் சூழலில் தமிழீழ மக்களின் மீளக்குடியமர்வு, அபிவிருத்தித் திட்டங்கள் என போராட்டத்தின் புதிய விரிவாக்கத்தில் பெண்களையும் பங்காளிகளாக இணைத்துக் கொள்வது மிக முக்கியான செயற்திட்டமாக உள்ளது.

பெண்களின் பிரச்சினைகளை இனங்காணல் என்ற விடயம் மிகத் தேவையானதும் முக்கியமானதுமாகும். ஏனெனில் சமூக இயக்கத்தில் பல்வேறுபட்டவர்களிலும் சேர்ந்தியங்கும் பெண்களின் சில பிரச்சினைகள் அப்பட்டமாக வெளித்தெரிபவை. சில பிரச்சினைகளாகவே இனங்காணப்படாமல் இயல்புபோலத் தென்படும் தன்மையைக் கொண்டவை. இது போலவே சில பிரச்சினைகள் அனைவருக்கும் பொதுவானவை. எனவே தமிழீழப் பெண்களின் மாநாட்டில் நிகழ்ந்த தாயகப் பெண்களின் சங்கமமானது பல முக்கிய அம்சங்களை வெளிப்படுத்தியிருக்கின்றது.

01. இதுவரை காலமும் சாத்தியப் பட்டிருக்க முடியாத ஒரு சந்திப்பைச் சாத்தியமாக்கி தாயகப் பெண்களிடையே அறுந்துபோகாத உறவுப் பாலமொன்றை நிறுவியிருக்கிறது.
02. மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் உள்ளுக்குள் புழுங்கிக் கொண்டிருந்த பிரச்சினைகளைத் துணிச்சலுடன் வெளிக்கொணர்ந்திருக்கிறது.
03. தமது பிரச்சினைகளைத் தாமே புரிந்து கொள்ளவும் மற்றவரின் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு தோள்கொடுக்கவும் கூடிய விரிந்த மனநிலையை ஏற்படுத்தியிருக்கிறது.
04. தாம் ஒரு பலம் வாய்ந்த சக்தி என்பதை உணர்ந்து கொள்ளவும் சமூக மேம்பாட்டில் தாமும் பொறுப்பெடுக்க வேண்டியவர்கள் என்ற தார்மீகப் பொறுப்பை வலியுறுத்தவும் இம்மாநாடு அவர்களுக்கு உதவியிருக்கிறது.
05. எல்லாவற்றுக்கும் மேலாக தமக்குப் பலமாக விடுதலைப் போராட்டம் என்ற சக்தி துணை நிற்கிறது என்ற உண்மையை அனைவருக்கும் ஆழமாக ஏற்படுத்தி தமிழீழத்தில் வாழும் எந்தவொரு பெண்ணும் தனியானவள் அல்ல, தமிழீழப் பெண்கள் என்ற பெருங்குடும்பத்தில் அங்கத்தவர்கள் என்ற தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறது.

இம்மாநாட்டின் மூன்றுநாள் நிகழ்வுகளையும் வரிசைப்படுத்துவதைவிட அதன் சாராம்சத்தை தெளிவுபடுத்துவதே இந்தச் சுருக்கமான கட்டுரைக்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கும். மாவட்ட ரீதியாகப் பெண்களின் பிரச்சினைகள் இங்கு ஆராயப்பட்ட போது அதன் கனதி அனைவருக்குள்ளும் ஆழமான அதிர்வுகளை ஏற்படுத்தியதை நேரடியாக உணர முடிந்தது. அந்தச் சமூகச் சூழலுக்கேற்ப பிரச்சினைகள் வேறுபட்டதாகவும் சில ஒரே மாதிரியாகவும் இருந்தன.

**பொதுவில் இனங்காணப்பட்ட பிரச்சினைகள்:-**

01. காலாகாலமாக நிலவிவரும் கருத்தியல் சார்ந்த பிரச்சினைகள்.
02. கல்வியில், வேலைவாய்ப்பில் நிலவிவரும் பால்நிலைப் பாகுபாடு.
03. கலை, இலக்கியங்களில் தொடர்பூடகங்கள் ஏற்படுத்தும் பெண்கள் பற்றிய கருத்துருவாக்கம்.
04. சம வேலைவாய்ப்பினமை, சம ஊதியமின்மை என்பவற்றுடன், மலிவுத் தொழிலாளர்களாகப் பெண்கள் பயன்படுத்தப்படுகின்றமை.
05. பணிபுரியும் இடங்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகள்.
06. பெண்களின் தங்குநிலைப் பொருளாதாரம்.
07.குடும்பத்தில், சமூகத்தில் தனித்துத் தீர்மானம் எடுப்பதில் உள்ள பிரச்சினைகள்.
08. திருமணம் தொடர்பான சிக்கல்கள்.
09. சீதனம்.
10. பாலியல் நோக்கில் மட்டுமேயான சமூகப் பார்வைகள்.
11. போரின் நேரடித் தாக்கங்கள்.
12. போரின் மறைமுகத் தாக்கங்கள்.
13.இடப்பெயர்வும், நலன்புரி நிலையங்களில் நெருக்கடி வாழ்வும்.
14. சட்டவிரோத மது விற்பனைத் தொழில்.
15. வெளிநாட்டில் பணிப்பெண்களாக வேலைக்குச் செல்வதால் ஏற்படும் பிரச்சினைகள்.
16. போதிய கல்வியறிவின்மை.
17. கல்வி அறிவிருப்பினும் போதிய சமூக விழிப்புணர்வின்மை.
18. பெண்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து ஆளுமையுடன் நடவடிக்கை எடுக்கக்கூடிய பெண்கள் அமைப்புக்களின் செயற்பாடு பரந்த அளவில் காணப்படாமை.

பொதுத் தலைப்புக்களில் இனங்காணப்பட்டுள்ள இவ்விடயங்கள் தனித்தனியாக விரிவடையும் போது அதன் முழுமை நன்கு உணரப்படும். மூன்றுநாள் மாநாட்டிலும் கலந்துகொண்ட பெண்கள் இவைபற்றிய பெருமளவு விடயங்களை வெளிப்படுத்தியுள்ளனர். அத்தோடுமட்டும் நின்றுவிடாது தாமே பிரச்சினைக்கான தீர்வுகளையும் கண்டறிந்துள்ளார்கள். அங்கு கலந்தாலோசிக்கப்பட்ட தீர்வுகளையும் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் இங்கே தருகின்றோம்.

01. கிராமிய ரீதியாகப் பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட வேண்டும்.
02. பெண்களின் பிரச்சினைகளை மேலும் நுட்பமாக ஆய்வுசெய்யும் பொருட்டுச் சமூக ஆய்வுகள் நடாத்தப்படவேண்டும்.
03. முன்பள்ளிக் கல்வியிலும் ஆரம்ப, இடைநிலை, உயர்கல்விப் பாடவிதானங்களிலும் பால்நிலைச் சமத்துவ உணர்வு வலியுறுத்தப்படும் வகையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.
04. தொழில்சார் பயிற்சி நெறிகளில் பெண்களுக்கு சமவாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.
05. பணிபுரியும் பெண்களுக்கான நலன் காப்பகங்கள் அமைக்கப்பட வேண்டும்.
06. தொழில் ஊக்குவிப்புத் திட்டங்களில் சமவாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.
07. பால்நிலைச் சமத்துவப் பரப்புரைகள் சமூகத்திலுள்ள அனைவருக்கும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
08. சமூகத்திலுள்ள அனைத்துப் பெண்களையும் உழைப்பாளர்களாக்கக் கூடிய செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.
09. பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். ஏற்கனவே உள்ள சட்டங்கள் தேவைக்கேற்ப திருத்தம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். சட்டம் தொடர்பான அறிவு அனைத்துப் பெண்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.
10. சமூகத்தின் அனைத்து செயற்பாடுகளிலும் பெண்கள் சம அளவில் உள்வாங்கப்பட வேண்டும்.
11. சமூகத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் தடையின்றி மேற்கொள்ளுவதற்கும், நிரந்தர அபிவிருத்திப் பாதையில் பெண்களை மேம்படுத்துவதற்கும் தமிழீழத் தாயகப் பகுதியில் இராணுவப் பிரசன்னம் பெருந்தடைக்காரணியாக உள்ளது. எனவே இராணுவம் முற்றாக அகற்றப்பட்டு அனைவரும் தத்தமது சொந்த இடங்களில் மீளக் குடியமரவேண்டும். அதற்கான மக்கள் போராட்டங்களைப் பெண்கள் முன்னெடுக்க வேண்டும்.

ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இம்மாநாட்டில் கலந்துகொண்ட பெண்களின் உணர்வு வெளிப்பாடுகள், கலை வெளிப்பாடுகள் என்பன வெறும் உணர்வு மயப்படுத்தப்பட்டது மட்டுமல்லாமல் புத்திபூர்வமாக ஒரு பிரச்சினையை அணுகும் விதமாகவும் அமைந்திருந்தது. திருமலை மாவட்ட அரங்க செயற்பாட்டுக்குழுப் பெண்களின் நாடகம் அந்தப் பிரதேசப் பெண்கள் இராணுவ அடக்குமுறையால் சந்தித்த பிரச்சினைகளை இரத்தமும் சதையுமாக விபரித்தது.

யாழ் பல்கலைக்கழக மாணவிகளின் அரங்காற்றுகை மிகத் தரமானதாகவும், பார்வையாளரையும் இணைத்துக்கொண்டு பிரச்சினைக்கான தீர்வைத் தேடுவதாகவும் அமைந்திருந்தது. மிக வித்தியாசமான அணுகுமுறையாக இருந்தது.

அரங்க செயற்பாட்டுக்குழுப் பெண்களின் தெளிவும், உற்சாகமும், வழிப்படுத்தலும் அங்கு வந்திருந்த பெண்கள் அனைவரின் மனங்களையும் அவரவர்களின் பிரச்சினைகளிலிருந்து விடுபடவைத்து ஒரு பொதுத் தளத்திற்குக் கொண்டு வந்தது.

துணிச்சலுடன், நம்பிக்கையுடன் அவர்கள் தம் மன வெளிப்பாடுகளை முன்வைக்க உதவி செய்தது. அங்கு கலந்துகொண்ட பெண்கள் அனைவரும் மூன்றுநாள் மாநாட்டில் கலந்துகொண்டார்கள் என்பதைவிட மூழ்கித் திளைத்தார்கள் என்பதே மிகவும் பொருத்தமானது. அத்தனைபேரின் மனங்களிலும் மாற்றம் என்ற நெருப்பைப் பற்றவைத்துக்கொண்டு திரும்பினார்கள். அந்த நெருப்பு தாயகம் முழுவதும் மூண்டு மூண்டு எழுந்து பிற்போக்குத் தளைகளை எரிக்கும். இருள்சூழ்ந்த தமிழீழப் பெண்களின் வாழ்வுக்கும் ஒட்டுமொத்தச் சமூகத்திற்கும் ஒளி வெள்ளத்தை அள்ளி வழங்கும்.

## காஞ்சுரன்குடா; திருகோணமலை

# சமாதானகாலப் படுகொலைகள்





'விசேட அதிரடிப்படை' என்ற பெயரிலான STF என்றாலே, குரூரமான கொலை வெறிப்படை என்பதே கிழக்கு மாகாணம் வாழ் தமிழ் மக்களது அனுபவமாகும்.

கூட்டம் கூட்டமாகத் தமிழ் மக்களைப் படுகொலை செய்வது STF இனரின் போர்க்கால நடவடிக்கைகளில் முக்கியமானதாகும்.

இதன் வாயிலாக, தமிழர்களை மிரட்டிப் பணிய வைப்பதும் - அவர்களின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க முயல்வதும் STF இன் சதித்தனமான இராணுவ தந்திரோபாயமாகும்.

இந்த இனக்கொலை யுக்தியில் STF வெற்றி பெறவும் இல்லை, அதற்காகத் தனது படுகொலை முயற்சிகளை அது நிறுத்தவும் இல்லை.

இஸ்ரேலிய நாசகாரப் படைப்பிரிவிடம் கொலைப் பயிற்சிகளைப் பெற்ற STF, கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் பல்லாயிரக்கணக்கான தமிழர்களை, கடந்த 16 வருட காலத்தில் கொன்றொழித்துள்ளது.

1990 யூனில், இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானபோது, கிழக்கு மாகாணம் வாழ் தமிழ் மக்களைக் கிராமம் கிராமமாகக் கொன்றொழித்து இனக்கொலை புரிவதில் இக் கொலைப்படை தீவிரம் காட்டியது.

இந்தக் கொலைப் படைக்கு ஜே.ஆரின் அரசும், பிரேமதாசா அரசும் - சந்திரிகா அரசும் அபரிதமான அதிகாரங்களை வழங்கி - தமிழினப் படுகொலையை ஊக்கப்படுத்தி வந்தன.

STF படைமுகாம்கள் அமைந்துள்ள தமிழ்க் கிராமங்களை இக் கொலைப் படையினர் தமது அடிமைகளாகவே வைத்திருந்தனர். தமிழரின் வாகனங்களை - கால்நடைகளை - உற்பத்திப் பொருட்களை பலவந்தமாகப் பறித்தெடுப்பதும், அம்மக்களைக் கொண்டே தமது முகாம் வேலைகளை செய்விப்பதும் STF இனரின் வழமையாகும்.

சமாதான முயற்சிகள் ஆரம்பமான கடந்த 10மாத காலப்பகுதியில் STF இனர் பல டசின் ஒப்பந்த மீறல்களைச் செய்துள்ளனர்.

சமாதான காலத்திலும் தமிழ்மக்கள் மீது அதிகாரம் செலுத்துவதில் அவர்கள் பின்நிற்கவில்லை.

அரசியல் வேலை செய்யச் செல்லும் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் மீதும் தமது அதிகார அணுகு முறைகளை அவ்வப்போது பிரயோகித்து வந்தனர்.

கடந்த 09.10.2002 அன்று காலை 10.30 மணியளவில் பொத்துவில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு.விஸ்வநாதன் அவர்கள், உதவியாளர்கள் இருவருடன் உழவு இயந்திரம் ஒன்றில் திருக்கோவிலை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்தார்.

இவர்களை இடைநடுவில் வழிமறித்த காஞ்சுரன்குடா STF படையினர் உழவு இயந்திரத்தைப் பலாத்காரமாகப் பறித்தெடுக்க முயன்றனர். இந்த அடாவடித்தனத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த பிரதேசப் பொறுப்பாளரையும் அவரது உதவியாளர்களையும் படையினர் கடுமையாகத் தாக்கினர். இவர்கள்

**— எல்லாளன் —**

சிகிச்சைக்காகத் திருக்கோவில் அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கட்டுமீறிப் போய்க் கொண்டிருந்த இத்தகைய அடாவடித்தனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடன் அப்பிரதேசம் வாழ் தமிழ்மக்கள் ஒன்றுதிரண்டு காஞ்சுரன்குடா முகாம்வரை கண்டனப் பேரணி ஒன்றை நடாத்தினர்.

மக்கள்பேரணி, காஞ்சுரன்குடா STF முகாமின் முன்னால் நின்று கண்டனக் கோசம் எழுப்பியது.

போர்க்காலத்தில் தமது அடிமைகளாக இருந்த அப்பகுதி தமிழ்மக்கள், தமது முகாமின் முன்னால் நின்று ஆக்ரோசத்துடன் எதிர்ப்புப் போராட்டம் நடத்தியதை சகித்துக் கொள்ள விரும்பாத STF இனர் மக்கள்மீது பாரிய படுகொலைத் தாக்குதலை நடாத்தினர்.

இதில் 9 தமிழர்கள் பலியாகினர், 30பேர் படுகாய மடைந்தனர்.

பேரணிமீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டபோது மக்கள் சிதறி ஓடினர். சூட்டுக் காயங்களுடன் முகாம் முன்னால் உள்ள வீதியில் வீழ்ந்துகிடந்த நான்கு தமிழர்களை முகாமினுள் இழுத்துச்சென்ற படையினர் அங்குவைத்து அவர்களைச் சுட்டுக்கொன்றனர். தமது முகாமைத் தாமே சேதப்படுத்திவிட்டு மக்களால் முகாம் தாக்குதலுக்குள்ளானது என்று உலகிற்கு திரித்துக் கூறினர். மக்கள் கொண்டு வந்தது எனக்கூறி ஒரு துப்பாக்கியை பலியான ஒருவரின் சடலத்தின் மேல் வைத்தனர்.

பின்னர், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அவ்விடத்திற்கு விஜயம் செய்தபோது தமது முகாம் ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக்கப்பட்டதாகவும், அதைத் தடுப்பதற்காகத் தாம் தற்காப்புச்சூடு நடாத்தியதாகவும் விளக்கமளித்திருந்தனர்.

படையினரின் கருத்தை அப்படியே உள்வாங்கிய கண்காணிப்புக் குழுவினர், அதன் நம்பகத் தன்மையை பரீட்சிக்காது அதையே சம்பவ விளக்க அறிக்கையாகப் பகிரங்கப்படுத்தினர்.

STF இனரின் அடாவடித்தனங்களுக்கு - ஒப்பந்த மீறல்களுக்கு எதிராக சாத்வீக முறையில் எதிர்ப்புக் காட்ட முற்பட்ட தமிழ் மக்களையே அப் படுகொலைக்கான காரணிகளாகக் குற்றம்சாட்ட முற்படும் வகையில் கண்காணிப்புக் குழுவின் சம்பவ விளக்க அறிக்கை அமைந்திருப்பது தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியையும் - வேதனையையும் வழங்கியுள்ளது.

போர்க்காலத்தில் தாம் அனுபவித்த காட்டாட்சி அதிகாரங்களை சமாதான காலத்திலும் இழந்துவிடாதிருக்க STF இனர் மேற்கொண்ட சர்வாதிகார மனோநிலையுடனான இனவெறி நடவடிக்கை கண்காணிப்புக் குழுவினரது அவசர அறிக்கையால் மூடி மறைக்கப்பட்டுவிட்டது.

காஞ்சுரன்குடா படுகொலையைக் கண்டித்து 11.09.2002 அன்று திருகோணமலை நகர்வாழ் தமிழர்கள் அமைதியான வகையில் ஓர் கண்டனப் பேரணியை நடாத்தினர்.

இப்பேரணி மீது, திருக்கடலூர் பகுதியில், சிங்கள ஊர்காவற் படையினர் தாக்குதல் நிகழ்த்தினர். இதில் மூன்று தமிழர்கள் காயமடைந்தனர். மீண்டும் ஊர்வலம் மீது அனுராதபுரம் சந்தியில் வைத்து சிங்களப் பொலிசாரும் - ஊர்காவற் படையினரும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு - கைக்குண்டுத் தாக்குதலையும் நடாத்தினர். இத்தாக்குதலில் மூன்று தமிழர்கள் கொல்லப்பட்டனர். 38பேர் காயமடைந்தனர்.

இவ்வாறு, இரண்டு வெவ்வேறு இடங்களில் நடந்த கண்டனப் பேரணிகள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்களில் எதிர்த் தரப்பில் எவருமே காயப்படவோ! கொல்லப்படவோ இல்லை.

நிராயுத பாணிகளான தமிழ் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது ஆயுத பாணிகளான படையினர் மேற்கொண்ட தாக்குதல்களை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கண்டிக்காமல் விட்டது தமிழ் மக்களை ஆச்சரியத்திற்குள்ளாக்கியுள்ளது.

படையினரது அடாவடித்தனங்களை தமிழ்மக்கள் பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டும் என்று கண்காணிப்புக்குழு கருதுவது போல அது நடந்து கொள்வது அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

இது ஒரு வகையில் சிங்களப் படையினரது கொலைத் தாக்குதல்களை மறைமுகமாக நியாயப் படுத்துவது போலுள்ளது.

சிங்களப் படையாட்களிடமுள்ள தமிழின விரோதப் போக்கு யாவரும் அறிந்ததே. அதிலும் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் நிலைகொண்டுள்ள STF, மற்றும் ஊர்காவற்படையினர் ஒரு இன அழிப்புப் படையாக செயற்பட்டு வருவதும் வெளிப்படையான ஒன்றேயாகும்.

இந்தச் சமாதான காலத்திலும் குறித்த இப்படையினர் தமது படுகொலை முயற்சிகளை தொடரவே முயற்சிக்கின்றனர்.

சிங்களப் படையாட்களிடமுள்ள தமிழின விரோதப்போக்கு யாவரும் அறிந்ததே. அதிலும் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் நிலைகொண்டுள்ள **STF**, மற்றும் ஊர்காவற்படையினர் ஒரு இன அழிப்புப்படையாகச் செயற்பட்டு வருவதும் வெளிப்படையான ஒன்றேயாகும்.

இக் கொலைப் படையினரை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க அரசாங்கத்தாலும் முடியவில்லை. இவர்களது அராஜகங்களைக் கண்டித்து - உலகறியச் செய்விக்க கண்காணிப்புக் குழுவினரும் முயலவில்லை.

சமாதானம் பற்றிய தமிழ் மக்களின் நம்பிக்கையை - எதிர்பார்ப்பை இவை சிதைத்துவிடும் சாத்தியங்களும் உண்டு. ●

# ஓர் இரகசிய ஆளுமையின் அதிர்ச்சியான இழப்பு




அந்தச்செய்தி புற்றுநோய்போல மெல்லமெல்லத் தமிழீழத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கியது. அதைக் கடல்கடந்து காவிவந்த காற்று எம்தேசத்தின் தேகத்தை வாட்டியது. " யாராம்? " இந்த வினாவிற்கு விடைகாண எம்மக்கள் தவித்துக்கொண்டிருந்தனர். எல்லாம் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தன.

எங்கள் போரியற் சாதனைகளையெல்லாம் நாங்கள் பேசும்போதும் எழுதும்போதும் வெளித்தெரிந்து விடாதபடி பக்குவமாய் மறைத்து வைத்திருந்த ஈடிணையற்ற போரியலாளனின் பிரிவைச் செரிக்க முடியாது நாங்கள் தவித்துக் கொண்டிருந்தோம்.

எங்கள் கேணல் ராயு அவர்கள் பதற்றமற்ற, அமைதியான, திடகாத்திரமான இரும்பு மனிதன். புலிகள் இயக்கத்தின் புதிரான பக்கங்களின் பின்னால் வைக்கப் பட்டிருந்த இரகசிய மனிதன். நாளும் பொழுதும் உயிர்தின்னும் களங்க ளுக்குள்ளேயே அவர் வாழ்ந்தபோதும் தமிழீழத்தேசம் விடியும் நாள்வரை வாழ்வாரென்றே நம்பியிருந்தோம். இயக்கத்தின் இரகசியத் தன்மைகருதி வெளித்தெரியாது வைக்கப்பட்டிருந்த எங்கள் தளபதியைப் போர்க்களங்களிலும் பொத்திப் பொத்திப் பாதுகாத்தோம். இப்போது அவரை அவர் நேசித்த மக்களுக்கு ஒரே இரவில் அறிமுகம்செய்ய எப்படி முடியும்? ஓய்வு ஒழிச்சலற்ற உழைப்பிற் கழித்த பத்தொன்பது வருடங்களின் நினைவுகளும் காட்டாற்று வெள்ளம் போல் எம்முட் பாய்கின்றன.


பொறியியலாளனாவதற்குத் துடித்த இளைஞனின் கல்வி தரப்படுத்தலால் வீழ்த்தப்பட்டது. இலண்டன் பல்கலைக்கழகம் ஒன்றினூடாக அந்த இலக்கை அடைந்துவிடும் அவாவுடன் 1983 ஆம் ஆண்டு தனது இருபத்து இரண்டாவது வயதிற் சிங்களத்தின் தலைநகரில் வாழ்ந்து கொண்டிருந்தான் அவன். அப்போது சிங்களம் பெரும் கொலைவெறிகொண்டு ஆடியது. குழந்தைகள், பெரியோர், பெண், ஆண் என்ற வேறுபாடின்றித் தமிழர் வெட்டிச் சாய்க்கப்பட்டனர். தமிழரின் உடைமைகள் சூறையாடப்பட்டன. தீக்கிரையாக்கப்பட்டு அழிக்கப்பட்டன. தனக்கும் எதுவித பாதுகாப்புமில்லையென உணர்ந்த ராயு எவ்வாறோ தாயகம் வந்து சேர்ந்தார். சிங்களத்தின் கொடுமைகளிலிருந்து தமிழர் மீட்சி பெறவேண்டுமென்றெண்ணிய அவர் விடுதலைப் போராட்டத்தில் இணைந்தார்.

இந்தியாவில் மூன்றாவது பயிற்சிமுகாமிற் பயிற்சிபெறும்போது பொன்னம்மானால் இனங்காணப்பட்டார். ஐந்தாவது பயிற்சிமுகாமின் பொறுப்பாளர் லெப் கேணல் ராதா அவர்களின் துணைவனாகச் செயற்பட்டார். ஈற்றில் அவருடனேயே தமிழீழத்திற் கால்பதித்தார். அன்றிலிருந்து இயக்கம் பெற்ற வெற்றிகள் பலவற்றிலும் அவர் ஆற்றிய பங்கு அளப்பரியது.

தொலைத் தொடர்பு, இலத்திரனியல், வெடிமருந்து ஆகியவற்றில் ராயு கொண்டிருந்த ஆற்றல், தளபதி விக்ரரின் வழிகாட்டலில் மன்னாரில் நாம் பெற்ற பல பெறுமதியான வெற்றிகளுக்கு வழிகோலியது. களங்களில் நேரடியாகவும் போரிட்டார். திருகோணமலைக்குத் தாக்குதலுக்காகச் சென்ற அணியில் இடம்பெற்ற அவர் தன்மார்பில் விழுப்புண் அடைந்தார். பின்னர் மன்னாரில் நடந்த சண்டை ஒன்றிலும் தன்கால்களிலொன்றில் எதிரியின் குண்டுபட்டுப் பெரிய விழுப்புண்ணைத் தாங்கினார். தளபதி விக்ரர் அடம்பனில் வீரச்சாவடைந்த பின்னர் தளபதி ராதாவின் தலைமையிற் பணியாற்றினார்.

துரோகி ஒருவன் வீசியகுண்டினால் கேணல் கிட்டு அவர்கள் தன் காலை இழந்த பின்னர், ராதாவின் தலைமையில் யாழ்ப்பாணத்தில் ராயுவின் பணி தொடர்ந்தது. ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட தொலைத் தொடர்புப் பிரிவு ராயுவின் பொறுப்பில் மேலும் வளர்ந்தது. அவரின் வெடிக்குண்டு நுட்பங்களுக்குப் போர்க் களங்களில் எதிரி அதிக விலைகொடுத்தான். பலாலி - காங்கேசன்துறை வீதியில் எதிரியின் விநியோக அணிகள் மீது ராயுவால் நடத்தப்பட்ட தாக்குதல்கள் பலராலும் அறியப்பட்டவை. அப்போதெல்லாம் ஒரு தோட்பை நிறைந்த வெடிப் பொருட்களுடன் எதிரியைத் தேடிப்போகும் தாடிக்கார ராயு மக்களால் நன்கு அறியப்பட்டிருந்தார்.

பல்வேறு துறைகளிலும் ராயு வெளிப்படுத்திய ஆற்றலைத் தலைவர் அவர்களும் அறிந்திருந்தார். எமது விடுதலை இயக்கத்தை வலுவான மரபுப்படையுடன் கூடிய வலிமைமிக்க அமைப்பாகக் கட்டி எழுப்ப வேண்டுமென்ற தன்கனவை நனவாக்கக் கூடியவர்களுள் ஒருவராக ராயுவையும் அடையாளங்கண்டார். அவரை மேன்மேலும் வளர்த்தெடுப்பதில் அதிக கவனம் செலுத்தினார். தளபதி லெப்.கேணல் ராதா வீரச்சாவடைந்தபின் ராயுவைத் தன் நேரடிப்பணிகளில் ஈடுபடுத்தினார். அன்றிலிருந்து தன் இறுதி நாள்வரை தலைவரின் அருகிலிருந்தே ராயு செயற்பட்டார். தலைவரின் அருகிலிருந்து ராயு செயற்பட்ட காலத்தில் போரியலிற் பலமுன்னேற்றங்கள் ஏற்பட்டன. எமது இனத்திற்குப் பெரும் கேடுகளை விளைவிக்கக் கூடிய தடைகளை உடைக்கும் போதெல்லாம் அவரின் அறிவும் ஆளுமையும் கடின உழைப்பும் பெரும்பங்கு வகித்தன. எமது படைத்துறையின் ஒவ்வொரு வளர்ச்சிப்படிநிலைக்கும் ராயு வலுச்சேர்த்தார். தலைவரின் மீக்கவனத்துக்குள்ளாகும் படைத்துறைப் பணிகள் ராயுவிடமே ஒப்படைக்கப்பட்டன. படைத்துறை வளர்ச்சிக்கு இன்றியமையாதனவான தொலைத்தொடர்பு, வெடிமருந்து, இலத்திரனியல் ஆகிய பகுதிகளைப் பொறுப்பெடுத்து பெரும் வளர்ச்சி நிலைக்கு இட்டுச்சென்று எமது விடுதலை அமைப்புப் பேரியக்கமாக வளர வழிவகுத்தார்.



கேணல் கிட்டுப் பீரங்கிப் படையணி சிறப்புத் தளபதி
கேணல் ராயு/குயிலன்
(அம்பலவாணன் நேமிநாதன்)
ஏழாலை தெற்கு – சுன்னாகம்
யாழ்ப்பாணம்

இந்தியப்படைகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட "ஜொனி" மிதிவெடியிலிருந்து சிங்களப்படைகளின் "அக்கினிக்கேலா" நடவடிக்கையை முறியடிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மிதிவெடி, பொறிவெடி வரை, இரண்டாம் ஈழப்போரில் எதிரிகளைக் கலங்கச் செய்த பசீலன் 2000 முதல் மூன்றாம் ஈழப்போரில் எமது மோட்டார், ஆட்லறிப்படைகளைச் செயற்றிறன் மிக்கனவாய் வளர்த்தெடுத்தது வரை, எம்மால் நடத்தப்பட்ட முதலாவது கரும்புலித்தாக்குதலுக்கான வெடிக்குண்டுத் தயாரிப்பிலிருந்து கடற்புலிகளின் இன்றைய வளர்ச்சி நிலைவரை குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவற்றிலும் இங்கு குறிப்பிட்டுச் சொல்லமுடியாத படைத்துறைப் பணிகள் பலவற்றிலும் தலைவருக்குப் பக்கபலமாய் நின்று செயற்பட்டார்.

இந்திய அமைதிப்படைகளின் வன்கொடுமைக்காலத்தில் விசேட பணிக்காக வெளிநாடொன்றுக்கு ராயு தலைவரினால் அனுப்பப்பட்டார். அவர் திரும்பி வந்த போது மணலாற்றுக் காட்டுக்குள் தலைவர் இருந்த பகுதியை இந்திய இராணுவத்தினர் சுற்றிவளைத்திருந்தனர். இறுதிப்போர் என மார்தட்டியபடி பெரும்போருக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டனர். தலைவரை அடைந்த ராயு ஆற்றிய பணிகள் அப்போரின் முடிவைத் தீர்மானிக்கும் காரணிகளுள் முக்கியமானவையாக அமைந்தன.

இந்தியப்படைகளைப் புறமுதுகிட்டோடவைத்த "ஜொனி" மிதிவெடியைத் தலைவரின் வடிவமைப்புக்கேற்ப ராயு உருவாக்கியமை வரலாற்றில் என்றும் அவரை நிலைநிறுத்தும். ஜொனி மிதிவெடியை உருவாக்கியபோது ராயுவின் அருகிலிருந்த போராளி அந்த நாட்களை நினைவு கூருகிறான்.

"அப்போது அவரிடம் ஒரு சுவிஸ்நைவ் மட்டும்தான் இருந்தது. அதைவிட வேறு எந்த அடிப்படை வசதியும் இருக்கவில்லை. தலைவர் அவர்கள் திட்டத்தைக் கூறி அதன்மூலம் போரில் எவ்வாறு வெற்றிகளை ஈட்டலாம் என விளக்கியபோது அதன்முக்கியத்துவத்தை ராயு அண்ணை புரிந்து கொண்டார். ஜொனியை உருவாக்குவதற்காகத் தன்நித்திரையை மறந்தார். வாளில்லை, உளியில்லை, கத்தியில்லை எனக் காரணங்களைத் தேடாமல் வெற்றியைத் தேடினார். பலமுறை தோற்ற போதும் விடாமல் முயன்று வெற்றி பெற்றார்."

இந்தியப்படை வெளியேற்றப்பட்ட பின் இரண்டாம் ஈழப்போர்க்காலத்தில் ஆயுதத் தொழிற்சாலைகளுக்குப் பொறுப் பாகவிருந்து பலவெற்றிகளுக்குக் காரண மான உற்பத்திகள் பலவற்றை மேற் கொண்டார். பல இராணுவ முகாம்களின் வீழ்ச்சிக்குக் காத்திரமான பங்களித்த "பசிலன் 2000" அவ்வுற்பத்திகளில் ஒன்றாகும். கோட்டை, மாங்குளம், ஆனையிறவு ஆகிய படைத்தளங்களிலிருந்து தப்பிப்பிழைத்த சிப்பாய்களின் மனத்தில் "பசிலன் 2000" இன் வெடிப்பதிர்வு எப்போதும் அச்சத்தை ஏற்படுத்தும். கரும்புலித் தாக்குதல் நடவடிக்கைகளிலும் ராயுவால் உருவாக்கப்பட்ட தொழினுட்பங்கள் கடலிலும் தரையிலும் இப்போதும் எதிரியை அச்சுறுத்தியபடியே இருக்கின்றன. இவற்றைவிட இயக்கத்தில் அவ்வப்போது அறிமுகமாகும் புதிய வகை ஆயுதங்கள் ராயுவின் கைபட்டுத்தான் வெளியே வரும்.

இயக்கத்தின் படைத்துறை வளர்ச்சியில் செலுத்திய அதே அக்கறையைத் தன்பொறுப்பின் கீழ்ச் செயற்பட்ட போராளிகளின் நலனிலும் செலுத்தினார். நாள்தோறும் வெடி மருந்துகளுடன் பணியாற்றும் போராளி களைப் பாதுகாப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காகப் புத்தகங்களைத் தேடிப்படித்து விடயங்களை நுணுகி ஆராய்ந்து சரியான நடைமுறைகளைச் செயற்படுத்துவதிற் கண்ணாயிருந்தார். எம்மால் உற்பத்தி செய்யப்படும் வெடி மருந்துக் கருவிகள் எமது போராளிகளின் சாதனைக் கானவையாக இருத்தல் வேண்டும். மாறாக எமது அழிவிற்குக் காரணமாக அமையக்கூடாது என்பதில் எப்போதும் அக்கறையாக இருந்தார். குறிப்பாகக் கரும்புலிகளுக்கான வெடிப் பொருட்களைத் தயாரிக்கும் போது, "நாங்கள் ஒவ் வொருவருமே கரும்புலிகள் என்ற உணர்வோடு இருந் துதான் அந்த உற்பத்திகளைச் செய்யவேண்டும். ஒரு கரும்புலியின்ர உயிர் அநியாயமாகப் போகக்கூடாது. அவர்களுக்கான உற்பத்திகள் துல்லியமானவையாக இருக்க வேண்டும் " என்று தன் போராளிகளுக்கு அடிக்கடி கூறுவார். போரில் எமது இழப்புக்களைக் குறைத்து எதிரிக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்துவதில் ராயுவின் உழைப்புப் பெரிதும் உதவியது. போருக்கான திட்டங்களை வகுக்கும் போது ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தலைவர் தெரிவிக்கும் தீர்வுகளை நிறைவேற்றும் வரை அவர் ஓய்வதில்லை. சில வேளைகளில் ராயு தெரிவிக்கும் தீர்வு எளிதானதாகவும் சிக்கனமானதாகவும் இருக்கும்.

1992 ஆம் ஆண்டு ஆயுத வெடிப்பொருட் பற்றாமையுடன் மற்றும் சில நெருக்கடிகளையும் சந்தித்த காலம். நாம் நடத்தும் ஒவ்வொரு தாக்குதலிலும் எமது ஆள், ஆயுத இழப்புகளைக் குறைத்து எதிரிக்கு அதிக இழப்புகளை ஏற்படுத்தி ஆயுதங்களையும் வெடிப்பொருட்களையும் பெருமளவிற் கைப்பற்றவேண்டும் என்பதில் தலைவர் கண்ணும் கருத்துமாக இருந்து நடவடிக்கைகளை மேற்கொண்டார். அப்பொழுது பலாலி முன்னரங்க நிலைகள் மீது ஒரு தாக்குதலை நடத்தத் திட்டம் தீட்டப்பட்டது. எதிரியின் முன்னரண்களை எளிதாகத் தாக்கியழிப்பதற்காகக் கடல்வழியால் முகாமிற்குள் இரகசியமாக நுழைவதற்கான திட்டம் ஒன்று முன் வைக்கப்பட்டது. ஆனால் கடல்வழியால் ஆயுதங்களை நகர்த்துவதில் எதிர் பார்க்கப்பட்ட சிக்கல்கள் அதை நடை முறைப்படுத்துவதற்குத் தடையாக இருந்தன. அத்தடையை நீக்குவதற்கு ராயுவால் முன்மொழியப்பட்ட தீர்வு, திட்டத்தைச்

செயற்படுத்த உதவியது. தாக்குதல் இழப்புக்கள் குறைந்த வெற்றியான நடவடிக்கையாக நிறைவடைந்தது. அதற்குப்பின் நடந்த பல தாக்குதல் நடவடிக்கைகளிலும் ராயுவின் கண்டுபிடிப்புப் பயன்பட்டது.

அந்நாட்களில் ராயுவை அவர் நேசித்த மக்களோ பெரும்பாலான போராளிகளோகூட அறிந்திருக்கவில்லை. குறிப்பிட்டுக்கூறக்கூடிய போராளிகள் சிலருக்கு மட்டுமே அவர் அறிமுகமானவராக இருந்தார். ஆனாலும் செயல்களினூடாக எல்லோருக்குள்ளும் அவர் வாழ்ந்தார். இரண்டாம் ஈழப்போர் வெடித்த சில ஆண்டுகளிற் பலநூற்றுக்கணக்கான போராளிகளை உள்ளடக்கிய புதிய படைப்பிரிவொன்றின் உருவாக்கத்திற்குப் பொறுப்பாக ராயு நியமிக்கப்பட்டார். உயர் செயற்றிறன் மிக்க மரபுவழிப் படையாக அதை உருவாக்க வேண்டுமென்று தலைவர் எண்ணினார். அதற்கான தொடக்கப்பணிகளே பாரிய அளவிலானவையாக இருந்தன. பகல் இரவு என்று பாராமல் ஓய்வு ஒழிவின்றிக் கடுமையாக உழைக்கவேண்டியிருந்தது.

> நாளும் பொழுதும் உயிர்தின்னும் களங்களுக்குள்ளேயே அவர் வாழ்ந்தபோதும் தமிழீழத்தேசம் விடியும் நாள்வரை வாழ்வாரென்றே நம்பியிருந்தோம். இயக்கத்தின் இரகசியத்தன்மைகருதி வெளித்தெரியாது வைக்கப்பட்டிருந்த எங்கள் தளபதியைப் போர்க்களங்களிலும் பொத்திப் பொத்திப் பாதுகாத்தோம். இப்போது அவரை அவர் நேசித்த மக்களுக்கு ஒரே இரவில் அறிமுகம்செய்ய எப்படி முடியும்?

சிறுத்தைப் படைப்பிரிவில் முதலிற் பெண் போராளிகளே இணைக்கப்பட்டனர். பெண் போராளிகளுக்கு அவர்களின் திறமைகளையும் ஆற்றலையும் உணர்த்தி தம்மால் எதையும் செய்யமுடியும் என்ற நம்பிக்கையை வளர்த்துத் தனிச்சிறப்புமிக்க அதிரடிப்படையை உருவாக்கவேண்டுமெனத் தலைவர் திட்டமிட்டார். அதற்கான பயிற்சித் திட்டங்களையும் நல' (முறைகளையும் வகுப்பதில் அதிக அக்கறை செலுத்தினார். தலைவரின் எண்ணத்தை முழுமையாக உணர்ந்த ராயு தன் முழு ஆற்றலையும் அர்ப்பணித்து உழைத்தார். பின்னர் சிறுத்தைப் படையில் ஆண்களுக்கான பிரிவு உருவாக்கப்பட்டபோது ராயுவின் மீதான சுமை இரட்டிப்பானது.

பயிற்சிப் பாசறையில் போராளிகளுடன் ராயு எப்படி வாழ்ந்தார் என்பதை போராளி ஒருவர் நினைவு கூர்ந்தார். "சிறுத்தைப் படையணியிற் கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டோம். வெளித்தொடர்பு ஏதுமின்றி ஆண்டுக் கணக்காக எமது பயிற்சி தொடர்ந்தது. தொடக்கத்தில் எல்லாமே எங்களின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டனவாக வேயிருந்தன. நாங்கள் எல்லாவற்றிலுமே கடுமையாக எங்களை வருத்தினோம். அப்போதெல்லாம் எங்களுக்கு மேன்மேலும் உறுதியூட்டியவை ராயு அண்ணையின் செயல்கள்தாம். அவர் எமது அடிப்படைத்தேவைகளை தந்தை ஒருவருக்குரிய அக்கறையோடு கவனித்தார். போராளிகள் அனைவரிலும் அன்பும் அக்கறையும் செலுத்தினார். ராயு அண்ணை பயிற்சி செய்வதைப் பார்த்தாலே எங்களுக்கும் அதில் ஆர்வம் வந்துவிடும்."

ராயுவால் வளத்தெடுக்கப்பட்ட ஆற்றல் நிறைந்த சிறுத்தைப் படையணி மூன்றாம் ஈழப்போரில் முக்கியமான பணிகளில் ஈடுபடுத்தப்பட்டது. போர்க்களங்களில் நேரடிச் சண்டை அணிகளாக ஈடுபடுத்தப்பட்டதுடன் சிறுத்தைப்படையணிப் போராளிகளாற் படைத்துறை உட்கட்டமைப்புகள் பலவும் ஏற்படுத்தப்பட்டன. இக்காலகட்டத்தில் ராயுவின் பொறுப்பிலிருந்த பொறியியற்றுறை மேலும் பெரிய அளவில் விரிவுபடுத்தப்பட்டது. இயக்கத்தின் சுமைகளை மேலும் மேலும் தாங்கியபடியே ஒரு சுமைதாங்கிபோல அவர் வாழ்ந்தார். இன்னுமின்னும் சுமைகளைத் தாங்குவதற்காகத் தன் அறிவையும் ஆளுமையையும் வளர்த்த படியேயிருந்தார். இப்பொழுது நினைத்துப்பார்க்கையில் பிரமிக்கவைக்கும் பணிகளையெல்லாம் அந்த மனிதர் எப்படிச் செய்து முடித்தாரென்பதை அவரோடு நீண்டகாலம் வாழ்ந்த போராளியொருவர் நினைவு கூருகிறார்.

"ராயு அண்ணையிடம் தனித்துவமான பல திறமைகளும் குணாதிசயங்களும் இருந்தன. அவர் ஞாபகப்படுத்துவதற்காகப் பெரும்பாலும் எதையும் குறித்துவைப்பதில்லை. எப்படியோ எல்லாவற்றையும் அந்த மூளையிற் பதித்துவைத்துவிடுவார். தேவைப்படும்போது எல்லாவற்றையும் உடனுக்குடன் அவரால் ஞாபகப்படுத்திக்கொள்ள முடியும். எங்காவது தூரத்துக்குப் புறப்படுவதென்றால் சாரதிக்குப் பக்கத்திற் புத்தகத்துடன் அமர்ந்துவிடுவார். தான் வாகனத்தை ஓட்டும்போது பக்கத்தில் இருப்பவரை வாசிக்கவைத்துக் கேட்டுக் கொண்டிருப்பார். அப்படியுமில்லாவிட்டால் போராளிகளுக்கான விரிவுரைக் கூடமாக அது மாறும். கடினமான காலங்களில் ராயு அண்ணை சிறிது நேரமாவது நித்திரை கொள்வது வாகனத்திற் செல்லும் வேளையிலாகத்தானிருக்கும். வாகனம் சென்றடைந்ததும் தன் மீதிப்பணிகளை ஆரம்பித்துவிடுவார். எப்போதும் அதிகாலைவேளையில் எழுந்துவிடுவதைக் கண்டிப்பான பழக்கமாக வைத்திருந்தார். காலைக்கடன்களின் போதே தன் பொறுப்பாளர்களுக்கு வேலைகளைப் பகிர்ந்தளித்துவிடுவார். இப்படியான இயல்புகளாற்றான் அவரால் இவ்வளவு சுமைகளையும் சுமக்கமுடிந்தது."

உண்மையில் அவர் அப்படி வாழ்ந்ததாற்றான் போராட்டத்தளம் யாழ்க்குடாநாட்டிலிருந்து வன்னிக்கு மாறிய பின்னரும் எமது இயக்கத்தின் வேகமான வளர்ச்சிக் காலத்தில் கூடுதலான பணிகளை அவராற் சுமக்கமுடிந்தது.

வன்னிப்போர்க்களத்தில் எமது படைத்துறை பீரங்கி, மோட்டர் உள்ளிட்ட பல நவீன படைக்கலங்கள் புகுத்தப்பட்டு வலுவூட்டப்பட்டது. எமது படைக்கட்டமைப்புகளுக்கும் தந்திரோபாயங்களுக்குமேற்ப பீரங்கிகளையும் மோட்டர்களையும் பயன்படுத்துவதற்கு ராயு வழிவகுத்தார். எதிரிக்கும் உலகுக்கும் புலிகளின் உண்மைப்பலத்தை உணர்த்திய ஓயாத அலைகள் ஒன்றின்போது எதிரிக்குத் திகைப்பை ஏற்படுத்தும் வகையில் எமது மோட்டர்களின் தாக்குதல் அமைவதற்கு ராயுவின் உழைப்பே காரணமாகும்.

முல்லைப் படைத் தளத்திலிருந்து கைப்பற்றப்பட்ட ஆட்லறிகள் எமது பீரங்கிப்படையை உருவாக்க வழிவகுத்தன. ஆனாலும் அவற்றைப் போர்க்களங்களில் நுட்பமாகப் பயன்படுத்தும் தொழினுட்பத்தையும் பட்டறிவையும் பெறுவது எளிதானதாக இருக்கவில்லை. எதிரியும் எமக்கு நீண்டகால இடைவெளியைத் தருவானெனத் தென்படவில்லை. எல்லாப் பொறுப்புகளும் ராயுவிடமே விடப்பட்டன. "ராயு எப்படியோ செய்து முடிப்பார்" என்று தலைவர் நம்பினார். அதனாலேயே விரைவில் நடக்கவிருந்த ஆனையிறவு-பரந்தன் ஊடறுப்புச் சமரைத் தலைவர் ஒத்திவைத்துக் காத்திருந்தார். ராயுவும் அவரது போராளிகளும் சூறாவளியாகச் சுழன்றுழைத்த அந்த நாட்களைப் பீரங்கிப்படையணியின் தளபதியொருவர் நினைவு கூருகிறார்.

"எங்களைப் பொறுத்தவரை அப்போது எமது கைகளில் இரண்டு இரும்புக்குத்திகள் இருந்தன. ஏனெனில், அப்போது ஆட்லறிபற்றிய அறிவு எமக்கு இருக்கவில்லை. தெரியாத்தனமாக ஏதும் செய்துவிட்டால் அவற்றை நாங்கள் இழந்துவிடக்கூடும். அல்லது அவற்றின் செயற்றிறன் குறைந்துவிடக்கூடும். நாம் இக்கட்டான நிலையில் இருந்தோம். ராயு அண்ணை அந்த இரும்புக் குத்திகள் மீதிருந்த ஒவ்வொரு புதிரையும் விடுவித்துக் கொண்டிருந்தார். சில கட்டங்களில் அப்பால் நகரமுடியாமல் முடங்கிவிடுவோம். சிலவேளைகளில் நம்பிக்கையின்மைகூட ஏற்படும். "ராயு அண்ணை எப்படியும் கண்டுபிடித்துவிடுவார்" அந்த நம்பிக்கைதான் எல்லோரையும் தூக்கி நிறுத்தும். நம்பிக்கை வீண்போகவில்லை. இரும்புக் குத்திகள் விரைவிலேயே எமது கைகளில் ஆட்லறிகளாக மாறின. எல்லாவற்றையும் கடந்து துல்லியமான சூடுகளை வழங்கக்கூடிய நிலைக்கு ராயு அண்ணை எங்களை முன்னேற்றினார். தலைவரின் எதிர்பார்ப்பின்படியே ஆனையிறவு-பரந்தன் ஊடறுப்புச் சமரின்போது எமது ஆட்லறிகள் துல்லியமான சூடுகளை வழங்கின."

ஆட்லறிப் பிரிவின் செயற்றிறன் மேலும் மேலும் வளர்க்கப்பட்டுக் கொண்டேயிருந்தது. ஒரு வழமையான மரபுவழி இராணுவக் கட்டமைப்பைப் போலல்லாது எமது படைக்கட்டமைப்புத் தனித்துவமான அம்சங்களைக் கொண்டது. எமது வியூகங்களும் தனித்துவமானவை. இவற்றுக்கு அமைவாக எமது ஆட்லறிப்பிரிவைப் பயன்படுத்துவதில் ராயு வெற்றிகண்டார். பாதகமான காலநிலைகளின்போது ஆட்லறி, மோட்டர் போன்ற மரபுவழி ஆயுதங்களைப் பயன்படுத்த முடியாமையால் மரபுவழிப் படைகள் அக்காலநிலைகளிற் பாரிய அளவிலான சமர்களைத் தவிர்த்தன. ஆனால் எமது ஆட்லறிப் பிரிவை அத்தகைய காலநிலைகளிலும் பயன்படுத்தக் கூடியதாக ராயு அமைத்திருந்தார். ஜயசிக்குறுவிற்கு எதிரான சமர்க்களத்தில் சில இடங்களில் துல்லியமான ஆட்லறிச் சூடுகள் மூலம் இலகுவான வெற்றிகள் பெறப்பட்டன. எல்லாவற்றுக்கும் மேலாக ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையின்போது எமது ஆட்லறிப் பிரிவான கேணல் கிட்டு பீரங்கிப் படையணி தனது முழு ஆற்றலையும் வெளிப்படுத்தி உழைத்தது. அதனை ராயுவே தலைமைதாங்கி வழிநடத்தினார்.

எல்லா முனைகளிலும் தொடர்ச்சியாக நீண்டு சென்ற அந்த மீட்புச் சமரிற் பல சோர்வான கட்டங்களிற் போராளிகளுக்கு உற்சாகமூட்டி வேகமான வெற்றிகளுக்கு வழிவகுத்தார். களத்தில் ஏற்படும் நெருக்கடியான கட்டங்களிலெல்லாம் எதிரியின் ஆட்லறிப்பிரிவால் நினைத்துப்பார்க்க முடியாத அளவிற்கு விரைவான சூட்டு ஆதரவை வழங்கக்கூடிய நிலைக்கு எமது ஆட்லறிப் பிரிவை வளர்த்தெடுத்தார். அதனாற் பல பாதகமான களச்சூழல்களிலும் நாம் வெற்றிபெற முடிந்தது. போராளிகள் பலரும் காப்பாற்றப்பட்டனர். தலைவரின் புதிய திட்டமிடலின்கீட் பரந்தன் சமரில் கனரக ஆயுதங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு பகர் சண்டையில் நாம் குதித்தபோது தலைவரின் எதிர்பார்ப்புக்கேற்ப ஆட்லறிகளை ஒருங்கிணைத்துச் சூடுகளை வழங்கி வெற்றிக்கு வழிசமைத்தார். இந்த நம்பிக்கையுடனேயே மேலும் தொடர்ந்த நடவடிக்கைகளில் எம்மால் வெற்றியீட்ட முடிந்தது.



வரலாற்றுப் புகழ்மிக்க இத்தாவிற் சமரின் போதும் ஈற்றிற் சிங்களம் தொடுத்த பாரிய "அக்கினிக்கேலா" நடவடிக்கையை முறியடித்த சமரின் போதும் களத்தில் நின்ற போராளிகளுக்குப் பீரங்கிகளால் உற்சாகமூட்டி அவர்களின் உயிரைக்காத்து ஓயாது பணியாற்றி வெற்றிகளுக்கு வழிசமைத்தமை ராயுவின் தலைமையில் எமது ஆட்லறிப் பிரிவு ஈட்டிய சாதனைகளில் முக்கியமானதாகும். ராயுவின் பொறுப்பிலிருந்த பொறியியற்றுறையால் "அக்கினிக்கேலா" நடவடிக்கைக்கெதிரான சமரில் அறிமுகம் செய்யப்பட்ட வெடிக்கருவிகள் எதிரி அணிகளைச் சிதறடித்து வெற்றிக்கு வழிகோலின.

போர்க்களங்களில் ஆயுதவலுவைப்பயன்படுத்தி எமது இலகுவான வெற்றிகளுக்கு வழிகோலி, போராளிகளின் உயிர்காத்த எமது தளபதியைப் போர்க்களங்களிற் காப்பதில் எல்லோருமே அக்கறை கொண்டிருந்தோம். ராயுவுக்கு ஏதும் நடந்து விட்டால் அது ஈடுசெய்யப்படமுடியாததென்பதை எல்லோரும் உணர்ந்திருந்தோம். ஆனால் போர் முழக்கங்கள் தணிந்துவிட்ட ஒருநாளிற்றான் எங்களுக்கு இடி காத்திருந்தது. நோயென்று பாயிற் படுத்தறியாத எங்கள் தளபதி ராயு கொடும் நோயினால் வதையுறுவதாகச் செய்தி வந்தது. அவராற் பிள்ளைகள்போல் வளர்க்கப்பட்ட போராளிகளும் அவரை அறிந்தவர்களும் துயரத்தால் வாடினர்.

ராயுவின் நோயின் கடுமை அதிகரித்துக்கொண்டேபோனது. சத்திரசிகிச்சை முடிவுகள் புற்றுநோய் என்பதை உறுதிப்படுத்தின. ஏற்கனவே அவை அவரது உடலில் வலுவாக நிலைபெற்றுவிட்டன. எங்கள் அன்புக்குரிய ராயு மீட்கப்படமுடியாதநிலைக்குச் சென்று கொண்டிருந்தார். படுக்கையில் நாட்கள் கழிவதைச் சேர்க்க முடியாதவராக இருந்தார்.

"வருத்தமென்று சும்மா படுத்துக்கொண்டு வேலையும் செய்யாமல் நல்ல சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டு இருக்க ஒரு மாதிரிக் கிடக்கு" என்று தன் போராளிகளுக்கு அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார். படுக்கையில் இருந்தபடியே தனது போராளிகளுக்கு முக்கியமான விடயமொன்றைக் கற்பிப்பதில் ஈடுபட்டார். அதனால் அவர் தேறிவருவதாக எல்லோரும் நினைக்கத் தொடங்கினர். ஆனால் ராயுவின் வயிறு கல்லாகிக்கொண்டே போனது. தாங்கமுடியாத வயிற்றுவலிக்கு உள்ளாகும் அவரை மயக்கநிலைக்குட்படுத்த வேண்டியிருந்தது. ஈற்றில் மருத்துவத்திற்காக வேறிடத்துக்கு அனுப்ப முடிவுசெய்யப்பட்டது.

ஆட்கொல்லி நோயென்றாலும் இரும்பு மனிதரென்று நாங்கள் எல்லோரும் அடிக்கடி கூறிக்கொள்ளும் கேணல் ராயு அவர்கள் சில காலத்துக்காவது வாழக்கூடிய நிலையில் திரும்பிவருவாரென்று எதிர்பார்த்தோம். அடுத்த மாவீரர் நாளில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக ராயு நட்டுவைத்த பூங்கன்றுகளும் அவ்வாறுதான் எண்ணியிருக்கும். ஆனால் 25.08.2002 ஆம் நாளன்று எல்லாமே பொய்த்துப்போயின. ◆

# விடுதலைப் போரும் பெண் விடுதலையும்

**பெண்** விடுதலை தேசிய விடுதலையின் முக்கிய அங்கமாக அமைகின்றது. தேசிய விடுதலைப்போர் தன்பால் பெண் விடுதலையையும் உள்ளடக்கிச் செல்கின்றது. தேசிய விடுதலைப்போரின்போது பெண் விடுதலை விரிவடைந்து வலுப்பெறுகின்றது. ஆணுக்குச் சரிநிகராகப் பெண் பங்களிப்புச் செய்யும்போது போராட்டம் முழுவடிவம் பெறுகின்றது.

போர்ச்சூழலில் வாழ்ந்து கொண்டு போர்முனையில் இருந்து விடுபட்டுத் தனித்து நிற்க முடியாது. பெண்ணினத்தால் விலகி நிற்க இயலாது. எதிரி பெண்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்துகிறான். ஒரு இனத்தின் தேசிய விடுதலைப்போரை அவ்வினப் பெண்ணின் வாழ்வுரிமைப் போராகப் பார்க்க முடியும்.

எமது தேசிய விடுதலைப்போர் முனைப்புப் பெறமுன்பே புரட்சிகரமான சமூகப் பணிகளில் தமிழீழப் பெண்கள் முன்னின்று உழைத்துள்ளனர். மக்கள் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் இலட்சிய தாகத்துடன் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். தீண்டாமை ஒழிப்பு, ஆலயப் பிரவேசம் போன்ற போராட்டங்களில் பெண்களின் ஈடுபாடு ஆண்களுக்கு நிகரானது. பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசத்தின்போது சிறிலங்காப் பொலிசாரின் கெடுபிடிகளை மீறி எமது பெண்கள் முன்னேறியுள்ளனர். தமிழீழப் பெண்களின் போராட்ட வரலாறு நெடிய பாரம்பரியத்தைக் கொண்டது.

தேசிய விடுதலைப் போருடன் ஒத்துப்போகாத மரபுகள், பழக்க வழக்கங்கள், வரன்முறைகள் போரின் காலத்திலும் அதற்குப் பின்பும் வழக்கொழிந்து போகின்றன. பெண்கள் கடலில் இறங்கித் தொழிலோ, நீச்சலோ செய்யக் கூடாது என்ற கட்டுப்பாடு தமிழீழத்தின் கரையோரப் பகுதிகளில் முன்னொரு நாள் இருந்தது. இன்று பெண் கடற்புலிகள் கடலிற் காவியம் படைக்கின்றனர்.

மொசாம்பிக் நாட்டின் பான்ரு (BANTU) இன மக்கள் மத்தியில் பெண்கள் ஆயுதம் தரிக்கக்கூடாது என்ற இறுக்கமான கட்டுப்பாடு இருந்தது. இந்த மக்களின் விடுதலைப்போர் தீவிரமடைந்த போது இக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது. போர்த்துக்கல் நாட்டின் காலனித்துவ நாடாக ஆபிரிக்காவின் தென்கிழக்கு மொசாம்பிக் 470 (1498-1975) வருடகாலம் இருந்தது.

பிறிலிமோ (FRELIMO) எனப்படும் மொசாம்பிக் தேசிய விடுதலை முன்னணி சமோரா மசல் (SAMORA MACHAL) என்பவரின் தலைமையில் விடுதலைப் போரை முன்னெடுத்தது. சமோரா மசலின் மனைவி கிராசா மசல் கணவனோடு இணைந்து போரை வழிநடத்தினார். 1968-1969 காலப்பகுதியில் மொசாம்பிக் நாட்டில் பெரும்பான்மையினராக வாழ்ந்த பான்ரு இனப் பெண்களை போராளிகளாக இணைக்கும் தீர்மானத்தை பிறிலிமோ எடுத்தது. இத்தீர்மானம் முழு ஆபிரிக்காவுக்கும் முன்மாதிரியாக அமைந்தது.

இதற்கான காரணத்தை நியூஸ்வீக் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் கிராசா மசல் பின்வருமாறு விளக்கிக் கூறினார்: "ஆணும் சரி பெண்ணும் சரி ஒவ்வொருவரும் தனது விடுதலையைத் தானே போரிட்டு நிலைநிறுத்த வேண்டும். ஒருவர் விடுதலையை இன்னுமொருவர் பெற்றுக் கொடுக்க முடியாது". நியூஸ்வீக் ஜூன் 30.1997.

இதுவொரு காத்திரமான தத்துவ விளக்கமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. கொழும்புவாழ் பெண்ணியத் தலைவிகள் இதை நிராகரிக்கின்றனர். அத்துடன் பெண் புலிகள்மீது கடும் விமர்சனக் கணைகளையும் தொடுக்கின்றனர்.

விமர்சனங்கள் பொதுவாக முத்திறத்தன. ஒரு அமைப்பின் அங்கத்தவர் அதன் வளர்ச்சிக்கு உதவும் வகையில் செய்யும் ஆக்கபூர்வமான விமர்சனம் முதல் வகை. அமைப்புடன் நெருங்கிப் பழகிய காரணத்தால் அவதானிப்பு அடிப்படையில் திறனாய்வு நோக்குடன் செய்யும் விமர்சனம் இரண்டாம் வகை. தூர இருந்தவாறு முன்கூட்டிய தெரிவு செய்யப்பட்ட இலக்கை நிறைவு செய்யும் நோக்குடன் செய்யப்படும் விமர்சனம் மூன்றாம் வகை - இது பெரும்பாலும் ஆதாரமற்ற உண்மைக்குப் புறம்பான கண்டனமாக அமைவதுண்டு.



விடுதலை அடைந்த மொசாம்பிக்கின் முதலாவது கல்வி அமைச்சராகப் பதவி வகித்தவர் கிராசா மசல். தீவிர அரசியலிலிருந்து விலகியபின் அவர் ஐ.நா பணியாளராக நியமனம் பெற்றார். சிறுவர் நலன், பெண்கள் நலன் போன்ற விவகாரங்களில் ஐ.நா ஊடாகக் கவனம் செலுத்தினார். சிறுவர் மீதான போரின் பாதிப்பு என்ற தலைப்பில் அவர் எழுதிய ஆய்வறிக்கை ஓலாரா ஒற்றுனு போன்ற பிற்கால சிறுவர் நல ஆர்வலர்களுக்கு வழிகாட்டியாக அமைந்தது. விமான விபத்தில் சமோரா இறந்தபின் நெல்சன் மண்டேலாவை இரண்டாம் தாரமாக கிராசா திருமணம் செய்துள்ளார்.



கொழும்பின் பிரபல பெண்ணிய ஆர்வலர் டாக்டர் நெலூபர் சென்ற வருடம் வெளியிட்ட நூல்மூலம் பல மாறுபட்ட கருத்துக்களை முன்வைக்கிறார். தமிழீழத் தேசிய விடுதலைப்போர் தமிழ்ப் பெண்களின் சமூக விடுதலையைப் பெற்றுக் கொடுக்கவில்லை என்பது அவருடைய குற்றச்சாட்டு- எல்.ரி.ரி.ஈ தலைமையில் நடக்கும் தேசிய விடுதலைப்போர் பெண் விடுதலையையும் முன்னெடுக்கின்றதாக அடேல் பாலசிங்கம் கூறுவதை ஏற்க நெலூபர் மறுக்கிறார்.

ஆண் போராளிகளின் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காகவே பெண் போராளிகள் போராட்டத்தில் இணைக்கப் பட்டுள்ளனர் என்பது நெலூபரின் வாதம். போராட்டம் நடக்கும் வரை பெண் போராளிகளுக்கு வெளிப்படையான அந்தஸ்து வழங்கப்படுகின்றது. போர் முடிவுற்றபின் அவர்கள் மீண்டும் தமது முன்னைய குறுகிய வட்டத்திற்குள் தள்ளப்படுவார்கள் என்று அவர் ஆரூடம் கூறுகிறார். தேசத்தின் தாய் என்று அவர்களைப் போற்றிப் புகழ்வதை நம்ப முடியாது என்று டாக்டர் நெலூபர் பொரிந்து தள்ளுகிறார்.

தேசத்தின் வரலாறும் பெண்களும்: இருபதாம் நூற்றாண்டில் தேசியமும் பெண்களும் என்பதே நெலூபரின் நூல் தலைப்பு. பிரசுரித்தோர் கொழும்பு சமூக விஞ்ஞானக் கழகம், 2001. - WOMEN AND THE NATION'S NARRATIVE; GENDER AND NATIONALISM IN THE TWENTIETH CENTURY. BY Dr. NELOVFER DEMEL. SOCIAL SCIENTISTS ASSOCIATION, 2001.

மனித உரிமைகளை மனிதனே ஆக்கினான். மனிதத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது உரிமைகள் பற்றிய குரலை மனிதன் எழுப்பினான். உயிருக்கு உத்தரவாதம், இதுதான் மனித உரிமைகள் யாவற்றிற்கும் அடிப்படை. பெண்ணியத்தின் ஆன்மா பெண்ணின் உயிர் வாழும் உரிமை. உயிர்வாழும் உரிமை மறுக்கப்படும்போது பெண் ஆயுதம் ஏந்துகிறாள். இதற்குப் பிறர்தூண்டுதல் தேவையில்லை. பெண்ணின் உயிர்வாழும் உரிமைபற்றிப் பேசாத பெண்ணியம் அர்த்தமற்றது. தமது வாழ்வுரிமைக்காகப் போரிடும் பெண்ணைத் தரக் குறைவாக விமர்சிக்கும் பெண்ணியம் போலியானது.

சிறிலங்கா ஆயுதப் படைகள் தமிழீழப் பெண்கள்மீது தொடர்ச்சியாக நடத்தும் வன்முறைகளைக் கண்டித்து டாக்டர் நெலூபர் தமெல் போன்ற பெண்ணியவாதிகள் கண்டனக் குரல் எழுப்பியதுண்டா? எம்மை விமர்சிக்க இவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

தனது நச்சுக் கருத்துக்களை டாக்டர் நெலூபர் பல வருடங்களாகத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறார். சுய விருப்புடன் போராடுகிறார்களா? அல்லது பலிகடாவாக ஆக்கப்படுகிறார்களா? ஆயுதம் தரித்த சிறிலங்காப் பெண்ணின் இடைக்காலம் என்ற தலைப்பில் அவர் 1998 இல் ஒரு ஆய்வு நூலைப் பதிப்பித்தார். - AGENCY OR VICTIM? THE SRI LANKA WOMEN MILITANT IN THE INTERREGNUM. வேலிக்கு ஓணான் சாட்சி என்பதுபோல் இந்த நூல் சம்பந்தமான திறனாய்வுக் கட்டுரையை செல்வி.ராதிகா குமாரசுவாமி 1998 யூலை 17ம் திகதி டெயிலி நியூஸ் பத்திரிகையில் பிரசுரித்தார்.

இந்த நூலும் அதன் திறனாய்வும் அடேல் பாலசிங்கத்தை மறுத்துரைப்பதையே தமது முழுமுதற் குறிக்கோளாக கொண்டுள்ளன. போராட்டத்தில் இணைவது சுயவிருப்பில் அல்ல, நிர்ப்பந்தம் காரணமாகவே என்ற நிலைப்பாட்டை முன்கூட்டியே எடுத்துக்கொண்டு, அதற்கமைவாக இந்த நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. எமது தேசியப்போரை கொச்சைப் படுத்த வேண்டும் என்ற அவருடைய அடிப்படை நோக்கம் தெற்றெனத் தெரிகின்றது. போரியல் துறையில் பெண்கள் பங்களிப்பு என்ற பரந்த கற்கையை டாக்டர் நெலூபர் அர்த்தமற்றதாக்குவதோடு வரலாற்றையும் இருட்டடிப்புச் செய்துள்ளார்.

மூன்றாம் உலக நாடுகளில் நடைபெறும் தேசிய

விடுதலைப் போராட்டங்கள் வாயிலாகப் பெண்விடுதலை முன்னெடுக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளும் நூலை குமாரி ஜெயவர்த்தனா பிரசுரித்துள்ளார். கொழும்பின் பெண்ணிய வாதிகளில் இவர் வித்தியாசமானவராகத் தோற்றமளிக்கிறார். இனவாதத்திற்கு அப்பால் நின்று பெண்ணியம் பேசும் திறன் கொழும்புவாழ் பெண்ணியவாதிகளுக்கு இன்னும் கைவரவில்லை. இனவாதத்தின் இன்னுமொரு வெளிப்பாடாகவே டாக்டர் நெலூபர் போன்றோரின் எழுத்துக்களைப் பார்க்க முடிகின்றது.

சென்ற நூற்றாண்டின் தொண்ணூறு நடுப்பகுதியில் எமது விடுதலைப் போர் கூர்மையடைந்த போது சிறிலங்கா அரசு ஒரு பன்முகப் படுத்தப்பட்ட பிரச்சாரப்போரை எம்மீது தொடுத்தது. பிரசாரத்தின் தலைமகளாகச் செல்வி. ராதிகா குமாரசுவாமி என்ற ஐ.நா அதிகாரி இடம்பெற்றார். ஐ.நா சாசனத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மனித உரிமை ஆணையகம் தனது செயற்பாடுகளை விரிவாக்குவதற்காகப் பதினைந்திற்கும் மேற்பட்ட அதிகாரிகளை நியமித்துள்ளது. இவ்வதிகாரிகள் 'றப்போத்துவாக்கள்' RAPPORTEUR என்று அழைக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு றப்பொத்துவாவுக்கும் ஒவ்வொரு துறை ஒதுக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான வன்முறை என்ற விசேடதுறை ராதிகா குமாரசுவாமிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சித்திரவதை, சிறுவர்களுக்கு எதிரான வன்முறை, பெண் வர்த்தகம் போன்ற துறைகள் வேறு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. துறைகள் வித்தியாசப்பட்டாலும் கடமைகள் யாவும் ஒரே மாதிரியானவை. இவர்கள் "உண்மையை அறியும் நிபுணர்கள், குறிப்பிட்ட நாடுகளின் மனித உரிமை நிலவரத்தை அறிந்து மனித உரிமை ஆணையத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கும் கடப்பாடுடையவர்கள்''. என்று மனித உரிமை ஆணையகம் கூறுகின்றது.

அமெரிக்க நிதி உதவியோடு இயங்கும் கொழும்பின் அனைத்துலக இனவிவகாரக் கற்கைகள் மையத்தின் (INTERNATIONAL CENTRE FOR ETHNIC STUDIES) இயக்குநராகவும் ராதிகா கடமையாற்றுகிறார்.

பெண் புலிப்போராளிகளுக்கு எதிரான முதல் பிரச்சாரத் தாக்குதலை 1995இல் ராதிகா தொடக்கி வைத்தார். அதன் எதிரொலி தமிழ்கூறும் நல்லுலகின் எல்லா மட்டங்களிலும் ஒலித்தது. அவர் ஆரம்பித்து வைத்த இப்பணி இடையறாது தொடர்கின்றது. மிக அண்மையில் 'பூனைக் கண்ணன்' என்ற புனைபெயரில் எழுதும் ஐலண்ட் பத்திரிகையின் பத்தி எழுத்தாளன் தமிழ்ப் பெண்களின் எதிர்காலம் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்.

பாவம் தமிழீழப் பெண்கள்! புலிகளின் இடைக்கால நிர்வாகத்தில் அவர்கள் பல துன்பங்களை அனுபவிக்கப் போகிறார்கள். சேலை ஒன்றைவிட மனதுக்குப்பிடித்த வேறு ஆடைகளை அணிய முடியாது. புலிகள் ஆட்சியில் பெண்கள் மிதிவண்டிகளைப் பயன்படுத்த முடியாது. அவர்களுடைய பேச்சுச் சுதந்திரம் பறிக்கப்பட்டுவிடும். ஆணாதிக்கம் பரவலாகக் காணப்படும். இவ்வாறு பூனைக்கண்ணன் தமிழீழப் பெண்களுக்காகக் கண்ணீர் சிந்துகிறார்.

தமிழர்கள் ஒரு போர்க் குணமுள்ள இனம் (MARTIAL RACE) என்பதை உலகம் அறியும். ஏதோ இன்று நேற்றுப் போரிடத் தொடங்கியவர்கள் அல்ல. கி.மு இரண்டாம் நூற்றாண்டின் அகநானூறுப் பாடலில் ஒரு தமிழிச்சி, ''சோழர்களின் வல்லம் கோட்டைக்கு முன்னால் சிதறடிக்கப்பட்ட ஆரியப்படைகள் போல் என் கைவளையல்கள் நொருங் கட்டும்'' என்றாள். துருவக் கரடியின் தூக்க நிலைக்குச் சென்றிருந்த எமது வீரப்பாரம் பரியத்தை மீளக்கட்டியெழுப்பிய பெருமை புலிகள் அமைப்பைச் சாரும்.

பயனற்ற பழக்க வழக்கங்களைச் சுமப்பதில் அர்த்தமில்லை. முதலாம் உலக நாடான ஜப்பானில் சாக்கி மது வடிசாலைகளில் பெண்கள் சம்பந்தமான ஒரு பாரம்பரியம் உண்டு. சாக்கி ஜப்பானில் தேசிய மதுபானம். இது அரிசியிலிருந்து தயாரிக்கப்படுகின்றது. 1800 வரையிலான ஜப்பானியக் குடும்பங்கள் கடந்த 800 வருடங்களாக இப்பாரம்பரியத் தொழிலில் ஈடுபடுகின்றன. சாக்கி வடிசாலைக்குள் பெண்கள் பிரவேசிக்கக்கூடாது என்ற இறுக்கமான கட்டுப்பாடு ஜப்பானில் உண்டு. ஜப்பானிய மொழியில் இத்தடையை 'நியோனின் கின்செல்' என்று அழைக்கிறார்கள். பெண்களின் உட்பிரவேசம் தெய்வ நிந்தனை என்பது பொருள். அப்படி யாரேனும் நுழைந்துவிட்டால் நுழைந்த பெண்ணின் மீது, நுழைவாசல் மீதும் கறியுப்பைத் தூவி வடிசாலைக்கு ஏற்பட்ட களங்கத்தைப் போக்குவார்கள்.

1950இல் சீன ஆட்சி திபெத்தில் நிறுவப்பட்டபின் மூன்று புரட்சிகர மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. நிலமானிய சமுதாயத்திற்கும், நிலப்பிரபுத்துவ ஆட்சிக்கும் முடிவு கட்டப்பட்டது. பன்னெடுங்காலமாக நிலவிய பெண் அடிமைவழக்கு நிறுத்தப்பட்டது. லாமாக்களின் மத

**– கலாநிதி க.சோமாஸ்கந்தன் –**

அடிப்படையிலான அரசியல் நீக்கப்பட்டது.

படுமோசமான, பெண்ணுக்கு எதிரான பாரம்பரியங்கள் நிலவிய நாடாகத் திபெத்து முன்பு விளங்கியது. ஆணை இறைவனும், பெண்ணைப் பிசாசும் படைத்தனர் என்பது திபெத்திய நம்பிக்கை. அடுத்த பிறவியிலாவது ஆணாகப் பிறப்பதற்கு இறைவனை வேண்டிக்கொள் என்று லாமாக்கள் போதனை செய்வார்கள். இன்று சீனத் தலையீட்டில் பெண்கள் நிலை மாறிவிட்டது.

சீனாவைப் பிரச்சார ரீதியாகத் தாக்க விளையும் மேற்கு நாடுகள், திபெத்திய கலாச்சாரத்திற்கு ஆபத்து என்று குரல் கொடுக்கின்றன. கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றைத் தூக்கிப் பிடிக்கும் செயற்பாடுகளில் நேர்மையில்லை. தமிழ்ப் பெண்களின் பாரம்பரியம் பற்றிப்பேசும் ராதிகா குமாரசுவாமியும் அவருடைய தோழிகளும் செய்யும் பிரச்சாரத்தில் அரசியல் வாடை வீசுகின்றது.

சிறிலங்காவின் முப்படைகளிலும் பெண்கள் சீருடையணிந்து பணி செய்கின்றனர். 'அன்டி ரோஜினி' (ANDROGYNY) என்ற குற்றச் சாட்டை தமிழ்ப்பெண் போராளிகள் மீது சுமத்தும் விமர்சகர்கள் அதே குற்றச் சாட்டை முப்படையிலும் இணைந்துள்ள சிங்களப் பெண்கள் மீது சுமத்துவதற்குத் தயங்குவது ஏன்? ஆண் செய்யும் பணியைப் பெண் செய்வதை 'அன்டிரோஜினி' என்பார்கள்.

உலகின் முன்னணி இராணுவங்கள் யாவற்றிலும் பெண்கள் பணியாற்றுகின்றனர். இந்திய இராணுவம் பெண் விண்ணப்பதாரிகளை வரவேற்கின்றது. மேட்டுக்குடி ஆண்கள் இராணுவத்தில் சேரப் பின்னடிப்பதாகவும், மேட்டுக்குடிப் பெண்கள் இந்திய இராணுவத்தில் இணைய ஆர்வம் காட்டுவதாகவும் இந்தியா ருடே சஞ்சிகை தெரிவிக்கின்றது. பெண் விடுதலை உணர்விற்கு இராணுவ சேவைக்களம் அமைப்பதாக இந்திய இராணுவப் பெண்கள் கூறுவதாக அதே சஞ்சிகை கூறுகின்றது. நாளொன்றுக்கு 2.4 கி.மீ தூரம் ஓடும் பயிற்சி இந்திய இராணுவப் பெண்களுக்கு வழங்கப் படுகின்றது. ஆயுதப் பயிற்சியும் பெறுகின்றனர். மருத்துவம், சமிஞ்ஞை வழங்கல் ஆகிய முக்கிய பிரிவுகளில் கூடுதலான இந்தியப் பெண்கள் அதிகாரி நிலையில் உள்ளனர். அதி உயர் கட்டளைப்பிரிவில் நுழையும் அளவிற்கு அவர்கள் இன்னும் உயரவில்லை, ஆனால் சாத்தியம் எதிர்காலத்தில் உண்டு.

அமெரிக்க இராணுவத்தில் அட்மிரல் தர கடற்படை அதிகாரிகளாகவும், அதிநவீன குண்டுவீச்சு விமானம் ஓட்டுபவர்களாகவும் பெண்கள் பதவி வகிக்கின்றனர். ஆனால், அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றும் பெண்கள் பாலியல் துன்புறுத்தல் பிரச்சினையை பெருமளவில் எதிர்கொள்கின்றனர். அமெரிக்க இராணுவ மேஜர்தரப் பெண் லில்லியன் ஏ.புளுக் (MAJ.LILIAN A.PFLUKE) நவம்பர் 25.1996 நியூஸ்வீக் சஞ்சிகைக்கு வழங்கிய தனது கட்டுரையில் மானத்தைக் காப்பாற்ற "ஒவ்வொரு நாளும் சண்டை" என்ற தலைப்பைக் - EVERY DAY IS A FIGHT- கொடுத்துள்ளார். பாலியல் வல்லுறவுதான் அமெரிக்க இராணுவம் எதிர்நோக்கும் மிகப்பெரிய பிரச்சினை என்கிறார் லில்லியன்.

பாலியல் துன்புறுத்தல்கள் சம்பந்தமான பின்வரும் தரவுகளை அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம் வழங்கியுள்ளது. இவை 1995ஆம் வருடத்திற்குரியவை. மேற்கூறிய சஞ்சிகையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

- நிறைவேறிய அல்லது முயற்சி செய்யப்பட்ட பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் - 04%
- பாலியல் வல்லுறவுக்குச் சம்மதிக்கும்படி துன்புறுத்தல்கள் - 11%
- தொடுதல், வழிமறித்தல் - 29%
- கெட்டபார்வை மற்றும் சைகைகள் - 37%
- கடிதங்கள், தொலைபேசி மூலம் அழைப்பு - 12%
- வெளியே சுற்றித்திரிய வரும்படி அழைப்பு - 22%
- பாலியல் பகிடிகள் - 44%
- விசிலடித்தல், பூனைக்குரல் கொடுத்தல் - 23%

தமிழீழப் புலிகள், உயிரினும் மேலாக ஒழுக்கத்தை மதிக்கின்றனர். திருமணத்தில் முடியும் காதலை வரவேற்கின்றனர். திருமணம் செய்து வைப்பதற்கும், போராளிகளின் சிசுக்களைப் பராமரிப்பதற்கும் நிறுவனமயமாக்கப்பட்ட ஒழுங்கைப் புலிகள் இயக்கம் கொண்டுள்ளது. சமூக சீரழிவுக்கு வழிகோலும் தங்கு தடையற்ற உறவுகளுக்கு புலிகள் அமைப்பில் இடமில்லை. இது தமிழ்ப் பண்பின் வெளிப்பாடு என்று விளங்கிக்கொள்ள வேண்டும்.

**போர்ச்சூழலில் வாழ்ந்துகொண்டு போர்முனையில் இருந்து விடுபட்டுத் தனித்து நிற்க முடியாது. பெண்ணினத்தால் விலகி நிற்க இயலாது. எதிரி பெண்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்துகிறான். ஒரு இனத்தின் தேசிய விடுதலைப்போரை அவ்வினப் பெண்ணின் வாழ்வுரிமைப் போராகப் பார்க்க முடியும்.**





# களமருத்துவ அதிர்வுகள்

ஜெயசிக்குறு பெருஞ்சமர் ஆரம்பித்து அரையாண்டு கழிந்துவிட்டிருந்தது. அந்தப் பிரதான மருத்துவமுகாம் முன்னரணில் இருந்து 1.5km பின்னாலும் கண்டிவீதிக்கு மேற்காக 1km விலத்தியும், பாரிய நிலக்கீழ் அறையும் அதனுள் சத்திர சிகிச்சைக்கான மேசை, குளிர்சாதனப்பெட்டி, 15 காயக்காரர்களை வைத்துப் பார்ப்பதற்கான இடவசதி, அவசியமான மருத்துவப் பொருட்கள் என்பன உரிய முறையில் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தன. வெளிப்புறமாக சிலமீற்றர் இடைவெளிகளில், திறந்த பதுங்கு குழிகள் பாரிய மரங்களின் கீழ் வெட்டப்பட்டிருந்தன. காட்டுத்தடிகள் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும் இருக்கைகள் சூழலை இசைவாக்கும் மனப்பாங்கை வெளிப்படுத்தின. முகாமைச் சுற்றிவர இரகசியப் பதுங்கு குழிகளும், காவலரண்களும் அமைக்கப்பட்டிருந்தன. இவை அம்முகாம் முற்றுகைக்கு உள்ளாகலாம் எனும் அபாயத்தையும், அதனை முறியடிப்பதற்கான முன்னேற்பாட்டினையும் புலப்படுத்தின.

அதிகாலை அமைதியாகத்தான் விடிந்திருந்தது. எனினும் இது வெப்பமேற்றும் வெடிமருந்துக் குவியல்மேல் அமர்ந்திருப்பது போன்ற மனநிலையையே ஏற்படுத்துகின்றது. "நீயா", "நானா" எனும் இச்சமர் ஒவ்வொரு முறையும் பெருமெடுப்பில் வெடிப்பதும், பாரிய உயிரிழப்புக்கள், காயங்கள், தகர்ப்புகள் எனத் தொடர்வதும், பின்வாங்கல்கள், முன்னேற்றங்கள், சுற்றிவளைப்புக்கள் ஆகிய போரியல் அம்சங்களை உள்ளடக்கி ஓய்வதும் வழக்கமாகிவிட்டது.

இயற்கைக்கடன் கழிப்பதற்காக ஒரு கையில் மண்வெட்டியும் தண்ணீர்க்கலனும், மறுகையில் துப்பாக்கியும் கொண்டு சிலநூறு மீற்றர்கள், காட்டினை ஊடுருவி அப்போராளி பற்றை மறைவை நாடுகின்றான். சிலமீற்றர் தொலைவில் கரந்துறைந்திருக்கும் பகை இராணுவவீரர் மூவர், தங்கள் துப்பாக்கிகளினால் இவனைக் குறிபார்த்தவண்ணம் கண்காணிக்கின்றனர். எதேட்சையாக இவன் பார்வையில் அவர்கள் பட்டுவிட்டனர். இவன் மண்வெட்டியைப் போட்டுவிட்டு துப்பாக்கியை நீட்ட முதல் அவர்களின் இயந்திரத் துப்பாக்கிகள் சடசடத்து விட்டன. இவன் கையிலும் மார்பிலும் குண்டடிபட்டு விழுகின்றான். விழுந்த வண்ணம் பகைவரை நோக்கி படபடவென தொடர் சூட்டினை மேற்கொள்கின்றான். அவர்கள் இவனை நோக்கி கைக்குண்டொன்றை வீசிவிட்டு மறைந்து விடுகிறார்கள்.

அன்றைய நாளிற்கான சண்டை தொடங்கிவிட்டது. இவர்களின் மருத்துவ முகாமினுள்ளும் அதனைச் சுற்றிவரவும் எறிகணை மழை பொழிந்தவண்ணம் உள்ளது. சில நூறு மீற்றர் இடைவெளியில் துப்பாக்கிகள் சடசடக்கின்றன. இவர்களை நோக்கிவந்த மருத்துவ வாகனத்தின் பின்பகுதியில் எறிகணை விழுந்து வெடிக்க, அது சிதைய, சாரதி மயிரிழையில் உயிர் தப்புகின்றான். போர்ப்புயலால் மரக்கொப்புகளும், கிளைகளும் முறிந்து விழுகின்றன. இவர்களுக்கு நிலைமை விளங்கிவிட்டது. இரவோடு இரவாக இரகசிய நகர்வை மேற்கொண்ட பகைவன், இம்மருத்துவ முகாமை பக்கங்களால் மேவிவிட்டான். அதேநேரம் எறிகணைகளை செறிவாக வீசியவாறும், மிகையொலி விமானக் குண்டுவீச்சுக்களை மேற்கொண்ட வண்ணமும், ராங்கிகளைக்கொண்டு மூர்க்கமாக மோதியும் முன்னரண்களை உடைத்து, முன்னரே வந்திருந்த சக படைவீரர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி விட்டான். இப்போது கணிசமான போராளிகள் முற்றுகையினுள் அகப்பட்டு விட்டனர்.

நிலைமையைச் சரியாகக் கணித்த பீரங்கிப் பிரிவினர், இவர்களை எதிரி அண்மிக்க விடாமலும், மேலும் முன்னேற்றத்தைத் தடுக்கும் விதமாகவும் எறிகணை வீச்சைத் துல்லியமாக வழங்கிய வண்ணம் இருந்தனர். இம்மருத்துவ முகாம் காயமடைந்தவர்களால் நிரம்பத் தொடங்கிவிட்டது. அவசர முதலுதவிகளைச் செய்து பின்னால் அனுப்பமுடியாத நிலை. பின்தளத்திற்கும் இவர்களிற்குமான தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. இருக்கும் வசதிகளைக் கொண்டு விழுப்புண் அடைந்தவர்களைப் பாதுகாக்க வேண்டியதுதான். ஒழுங்குபடுத்தப்படும் சேம இருப்புப் படையணிகள் வந்து முற்றுகையை உடைத்து தொடர்பெடுத்தால்த்தான் இவர்கள் தப்பலாம்.

பிரதான பதுங்கு குழியினுள் வைத்து அவசர சிகிச்சைகளைச் செய்து, பின்னர் காயக்காரர்கள் வெளியில் கொண்டுவரப்பட்டு திறந்த பதுங்கு குழியினுள் கிடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு மேலாக முறியும் கொப்புகளும், கொட்டுண்டும் இலைகளும் வீழ்ந்தவண்ணம் உள்ளது. சில பதுங்கு குழியினுள் நேரடியாக வீழ்ந்து வெடிக்கும் எறிகணைகளால் சிலர் மீண்டும் மீண்டும் காயமடைகின்றார்கள். இன்னும் சிலர் வீரச்சாவு அடைகின்றனர். சமர் தன் போக்கில் அகோரத் தாண்டவம் ஆடுகின்றது.

மருத்துவப் போராளிகள் ஓடி ஓடி பம்பரமாய்ச் சுழன்றவண்ணம் பணியாற்றுகின்றார்கள். சீறிவரும் எறிகணைகளுக்கு இடைப்பட்ட நேரங்களில் காயமடைந்தவர்களின் இரத்தப் பெருக்கை, நிறுத்துவது, திரவ ஊடகம் ஏற்றுவது, பதுங்கு குழியினுள் அவர்களை இழுத்துச் செல்வது எனச் செயற்பாடு தொடங்குகின்றது. உயிர்காத்தலுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதால் மருத்துவத்தின் மென்மையான பகுதிகள் கைவிடப்பட்டு கடினப்போக்குகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

ஒருவருக்கு வயிற்றில் பாரியகாயம். அவசரமாக முதலுதவியும் ஆரம்பசிகிச்சைகளும் செய்யப்பட்டுவிட்டது. இரத்தம் ஏற்றினால் சில மணிநேரம் உயிர்தக்க வைக்கலாம். முற்றுகை உடைபட்ட பின்னர் பின்தளத்திற்கு அனுப்பி மேலதிக சிகிச்சையை மேற்கொள்ளலாம். அவனைக் கவனிப்பது, ஏனைய பாரிய காயமுடையவர்களுக்கு சிகிச்சை செய்வது, சந்தர்ப்பம் வந்தால் உடன் முதலில் அனுப்பப்பட வேண்டியவர்களைத் தரம் பிரிப்பது என பிரதான மருத்துவப் போராளி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றான்.

எதிரி வாசலை அண்மித்துவிட்டான். குண்டுகள் வெடிக்கையில் காற்றை விரிப்பதால் ஏற்படும் அழுத்தம் நெஞ்சறையைத் தாக்குகின்றது. சமர் ஆடுகின்றவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டும், விழுப்புண் ஏற்பவர்களின் தொகை அதிகரித்துக்கொண்டும் இருக்கின்றது. ஆனால், நடைபெறும் யுத்தத்திற்கும் தங்களிற்கும் எதுவித தொடர்பும் இல்லை என்ற மாதிரி மருத்துவப்போராளிகள் செயற்படுகிறார்கள். "டொக்ரர் இரத்தம் ஏற்றத்தான் வேண்டும்" ஒரு களமருத்துவன் மீண்டும் வலியுறுத்துகிறான். "என்னில எடுங்கோ" இன்னொரு போராளி கட்டிலில் ஏறிப் படுக்கின்றான். அவனிலிருந்து இரத்தம் எடுக்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டு வயிற்றுக் காயக்காரருக்கு ஏற்றப்படுகிறது. எப்படியும் முற்றுகை உடையும், சில மணித்தியாலங்கள் தாக்குப்பிடித்தால் போதும். இவனைத்தப்ப வைத்துவிடலாம். போர்க்களத்தில் பங்குபற்றிக் கொண்டிருப்பவர்களில் இருந்து இரத்ததானம் பெறுதல் என்பது போர்மருத்துவக் கோட்பாடுகளுக்கு முரணானது. ஆயினும் அதனைச் செய்கிறார்கள்.

"டொக்டர், ஆளுக்கு நெஞ்சுக்காயம் I.C.U Tube போடவேண்டும்" ஒருவன் அழைக்க பிரதான மருத்துவப் போராளி தான் செய்துகொண்டிருந்த சிகிச்சையை இன்னொருவரைச் செய்யுமாறு பணித்துவிட்டு அவனிடம் செல்கிறான். நோயாளியின் விலா என்புகளுக்கிடையேயான தோலை வெட்டி, தசையில் ஓட்டை போட்டு, இறப்பர் குழாயை உள்ளே செலுத்த, நெஞ்சறைக் குழியினுள் வெளியேறித் தேங்கியிருந்த இரத்தம் எ.்றிப் பாய்கின்றது. "இதனை இப்படியே கட்டு" இன்னொரு போராளியிடம் ஒப்படைக்கின்றான். "டொக்ரர், பெமறல் ஆட்ரி அறுத்து இரத்தம் பாயுது" இன்னொருவன் கத்த, இவன் அவ்விடம் நோக்கி, கிடத்தப்பட்டுள்ள காயக்காரர்களைக் கடந்து பாய்ந்து ஓடிச் செல்கின்றான். எவ்வித வலி நிவாரணியும் கொடுக்காமல், அறுத்த பிரதான தொடைநாடியை அழுத்திப்பிடித்த வண்ணம் "பொசப்ஸ்சைத் தா" கையை நீட்ட ஒருவன் அதனை எடுத்துக் கொடுக்க, அதனால் அந்நாடியை அமத்திப்பிடித்து நசித்து 'கற்கட்' நூலினால் கட்டுகின்றான். "நல்லா பிலீற் பண்ணீட்டுது, இரண்டு காற்மன்ஸ்ஸப் பிழிந்து ஏத்திப்போட்டு பங்கரில கொண்டுபோய்க் கிடத்துங்கோ பிறகு பார்ப்பம்" கட்டளைகளைப் பிறப்பித்தவண்ணம் ஏனைய காயக்காரர்களைப் பார்க்கப்போகிறான். வீரச்சாவடைந்தவர்களின் உடல்கள் ஒரு பக்கமாகக் கிடத்தப்படுகின்றன. மருத்துவவளம் முடிவடைகின்றது. மணித்தியாளங்கள் நகர நகர இவர்களின் செயற்பாட்டு வீதம் குறைவடைகின்றது.

'அடுத்தடுத்த நிமிடங்களில் என்ன நடக்கும்? சொல்லமுடியாத நிலை. திடீரென ஒரு எறிகணை வீழ்ந்து வெடிக்க மின்பிறப்பாக்கி மூச்சடங்கிவிட்டது. அவ்வளவுதான். பிரதான பதுங்கு குழியினுள் மின்னொளி அணைந்துவிட்டது. 'ரோச்' வெளிச்சத்தில் மருத்துவப்பணிகள் தொடர்ந்தவண்ணம் இருக்கின்றன.

முற்றுகை உடைக்கப்படுவதும், மீண்டும் எதிரியால் மூடப்படுவதும் என கள நிலவரம் அடிக்கடி கைமாறிக் கொண்டிருக்கின்றது. சமரின் போக்கு நம்பிக்கைதர மறுக்கின்றது. கந்தகப் புகையினால் அச்சூழல் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது. கிராபிக்ஸ் தொழில்நுட்பம் புகுத்தப்பட்ட ஆங்கிலத் திரைப்படச் சண்டைக்காட்சிகளை தோற்கடிப்பதாக நிகழ்வுகள் அரங்கேறுகின்றது. மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க, விரைந்துகொண்டிருந்த களமருத்துவரை இன்னொரு போராளி கூப்பிட்டுச் சொல்கிறான், "அந்தப் போராளிக்கு மீண்டும் இரத்தம் ஏற்ற வேண்டும். B.P குறைகிறது" இப்போது என்ன செய்யமுடியும்? ஒன்றும் செய்யமுடியாது. அருகில் கிடந்த போராளியின் மூச்சும் நின்றுவிட்டது. அவனுக்கு இரு போராளிகள் செயற்கைச் சுவாசம் கொடுப்பதில் ஈடுபட்டுள்ளார்கள். இவன் அவனருகில் சென்று பார்க்கின்றான். அப்போது இவனது காலைத்தட்டி, "டொக்ரா டொக்ரர்" என வயிற்றுக் காயக்காரப் போராளி கூப்பிடுகின்றான். இவன் சங்கடத்துடன் அவனைத் திரும்பிப் பார்க்கின்றான். அவன் இவனைப் பார்த்து மிகவும் கடினப்பட்டுக் கூறுகின்றான், "டொக்ரர், எனக்காக நீங்கள் சரியாக் கஸ்டப்படுறீங்கள், உங்களுக்கு நன்றி டொக்ரர். நான் தப்பமாட்டன், என்னோட மினகிடாம தப்பக்கூடிய போராளிகளைக் கவனியுங்கோ" இவனை இடி தாக்கியதுபோல் உணர்கிறான். இவன் காலை மடித்து முழங்காலில் இருந்து அவன் தலையைச் சற்று ஆறுதலாக தடவி விடுகின்றான். "நாங்கள் எப்படியும் உன்னைக் காப்பாற்றுவம். இன்னும் கொஞ்ச நேரத்தில சப்ளை கிடைச்சுடும். உன்னைத்தான் முதலில பின்னுக்கு அனுப்புவம்" கூறியவன் அடுத்த காயக்காரனைப் பார்க்க எழுந்து நடக்கிறான்.

அப்போது முற்றுகையின் சிறுபகுதி உடைக்கப்பட்டு மருத்துவ முகாமிற்கான விநியோகப் பாதை எடுக்கப்படுகின்றது. அதனூடாக ஒரு மொட்டை ஜீப்பொன்று, விழுந்து வெடிக்கும் எறிகணைகளை அலட்சியம் செய்தபடியே புகைமூட்டத்தினூடாக குன்றும் குழியுமான வீதியில் பாய்ந்து பாய்ந்து வருகின்றது. வந்த ஜீப் 'கிறீச்' என பிறேக் பிடித்து நிற்கின்றது. பார்த்தவர்களுக்கு தலைசுற்றுகிறது. காரணம், சாரதிக்கு அருகில் உதவிக்கு இருந்தவன் வீரச்சாவடைந்துவிட்டான். சாரதியின் ஒரு கை காயமடைந்து துண்டிக்கப்பட்டிருக்கின்றது. அதிலிருந்து இரத்தம் பாய்கின்றது. அதனைப் பொருட்படுத்தாதவன், ஜீப்பிலிருந்து இறங்கி மறுபக்கம் வந்து கதவைத் திறந்தவாறு கத்துகிறான், "முதலில் ஏத்தவேண்டிய காயக்காரரை ஏத்துங்கோ.... கெதியா.... கெதியா....." இங்கு முதலில் நின்ற போராளி ஓட்டுனர் ஓடிச்சென்று அவனைப் பதுங்கு குழியினுள் இழுத்து வருகின்றான். "நீ காயத்தைப்பார் நான் கொண்டுபோறன்" கத்திச் சொல்கிறான். அப்போது களமருத்துவன் ஓடிப்போய் வயிற்றுக் காயக்காரனைப் பார்க்கின்றான். ஜீரணிக்க முடியாத அதிர்ச்சி. அவன் வீரச்சாவடைந்து விட்டான். உடன் மற்றவனைத் தூக்கிப்போய் வாகனத்தில் ஏற்றுகிறான். வேறு சிலரும் ஏற்றப்படவும் ஜீப் சீறிப் புறப்படவும் சரியாக இருந்தது. வீதியில் விழுந்து வெடித்துக் கொண்டிருக்கும் எறிகணையினூடு அது பறக்கவும் இன்னொரு ஜீப் இவர்களை நோக்கி வருகிறது. இவர்கள் ஏனைய காயக்காரரை தூக்கிவர ஓடிப்போகின்றார்கள். ●

— தூயவன்

# மானுடத்தின் தமிழ்க் கூடல் 2002

## காலம் வென்று தந்த களம்

ஏறக்குறைய இருபத்தியேழு வருடங்களுக்குப் பிறகு ஒரு நிகழ்ச்சி (மானுடத்தின் தமிழ்க்கூடல் 2002) வரலாற்றின் முக்கிய அடையாளமாகவும் பல சேதிகளைச் சொல்வதாகவும் நடந்தேறியிருக்கிறது.

இருபத்தியேழு வருடங்களுக்கு முன்பு - 1974இல் - நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்தது. பண்பாட்டுப் பெருவிழாவாக நடந்த அந்த நிகழ்ச்சியை அப்பொழுது இனவாத அரசியல் நோக்கில் குழப்பி பெரும் அனர்த்தத்தை விளைவித்தனர் அன்றைய சிங்கள



ஆட்சியாளர். அன்றைக்கு அவர்கள் மூட்டிய தீயில் எரிந்துவிடாமல் அதை ஒளிச்சுடராக மாற்றினர் தமிழர். இதுதான் தமிழர் போராட்டத்தின் மகிமை. இங்கேதான் போராட்டச் சக்தியான விடுதலைப் புலிகளினதும் தலைவர் பிரபாகரன் அவர்களினதும் சிறப்பைப் புரிந்து கொள்ளலாம்.

ஒன்பது உயிர்களைப் பலி கொண்ட கொலைச் செயலின் மூலம் அச்சுறுத்தலை விதைத்து தமிழரை அடக்கிவிடலாம் என்று கனவு கண்ட சிங்களப் பேரினவாதம் வாய் பிளந்து நிற்க இன்று தமிழரின் தேசிய விளிப்பையும் போராட்ட எழுச்சியையும் சொல்லும் நிகழ்வாக 'மானுடத்தின் தமிழ்க்கூடல் 2002' நடந்திருக்கிறது.

அதே மண்டபம், அதுவும் பலமுறை குண்டு வீசி அழிக்க முயன்றும் முடியாது நிமிர்ந்து நிற்கும் வீரசிங்கம் மண்டபம். அதன் முன்னே முன்பு தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்ட ஒன்பது பேரின் நினைவுகளைச் சொல்லும் கற்றூண்கள். அதே முற்ற வெளித்திடல். ஆனால் அன்றைய இயல்பில்லை. யுத்தத்தில் இடிந்தும் சிதைந்தும் மிஞ்சியிருக்கும் சுற்றயல். காலம் மாறியிருக்கிறது. இல்லையில்லை, 'காலத்தை மாற்றினர் புலிகள்' என்ற கவிஞனின் கூற்றுத்தான் சரி. காலத்தை மாற்றிய புலிகளின் காலத்தில் - புதிய களத்தில் இன்று மானுடத்தின் தமிழ்க்கூடல் 2002.

இன்று தமிழர் பலமான நிலையில், யாரும் நினைத்தவாறெல்லாம் எதுவும் செய்துவிட முடியாது என்ற நிலையில் ஒன்று திரண்டிருக்கிறார்கள். தமிழ், முஸ்லிம், சிங்களக் கலைஞர்கள், அறிஞர்கள், ஊடகவியலாளர்கள், மற்றும் தமிழகத்து தமிழீழ உணர்வாளர்கள், பங்கேற்பாளர்கள் என நிறைந்திருந்தது மண்டபமும் வளாகமும்.

இங்கே - தமிழிலும், சிங்களத்திலும் நியாயமாகவும் ஆழமாகவும் சீரியஸாகவும் சிந்திப்பவர்களும் செயற்படுபவர்களும் குரல் எழுப்புபவர்களுமே அநேகர். புதிய சிந்தனையை நோக்கி, புதிய காலத்தை நோக்கி, புதிய வாழ்வை நோக்கி, புதிய பயணம் பற்றிய எண்ணமுடையோர் பேசினார்கள்; விவாதித்தார்கள்.

இவையெல்லாம் சொல்லி நிற்கும் சேதிகள் பல. அன்று கூடிய தமிழரைக் குழப்பினர்; கொலையும் புரிந்தனர். இன்றோ புதிய காலம்பற்றி, புதிய வாழ்வுபற்றி ஒரு புரிந்துணர்வுடன் பேச முன்வந்தனர்; பேசினர். அன்று இருந்த நிலையை விட்டு இன்று புதிய விரிந்த நிலையில் தமிழரும் கூடியோரும் பேசிய விடயங்களும் நோக்கமும் இருந்தன.

இனமுரண் பற்றி, முரணுக்கான அடிப்படைகளைப் பற்றி, ஒடுக்குமுறை பற்றி, ஒடுக்குமுறைக்குள்ளான வாழ்வு பற்றி, போராட்டம் பற்றி, போராட்ட வாழ்வு பற்றி, விடுதலை பற்றி, விடுதலைக்கான செயற்பாடுகள் பற்றியெல்லாம் பேசும் ஒரு களமாக இந்த மானுடத்தின் தமிழ்க்கூடல் பரிணமித்திருந்தது.

மக்களிடையே விழிப்புணர்வையும் செயலூக்கத்தையும் தூண்ட வல்லோர் கலை, இலக்கியப் படைப்பாளிகளும், அறிஞரும், ஊடகக்காரர்களுமே. சமூக மாற்றத்திலும், வளர்ச்சியிலும் அதிக கரிசனையும் பொறுப்புமுடையோரும் இவர்களே.

இலங்கையின் கடந்தகால வரலாற்றில் இனமுரண் வளரவும் இன ஒடுக்குமுறை யுத்தமாகப் பரிணமிக்கவும் காரணமாயிருந்தோரில் ஊடகக்காரர்களும், மத, கலாச் சாரவாதிகளும் அடங்குவர். மாறாக தனித்தனியாக ஒவ்வொரு தரப்பிலும் மாற்றுக் குரல்களும் - நியாயக் குரல்களும் - தீவிரமாக ஒலித்திருக்கின்றன. இத்தகைய நியாயக் குரல்கள் இன்று ஒன்றுபட்டொலிப்பதற்கான ஒரு களத்தை விரித்திருக்கிறது இந்த மானுடத்தின் தமிழ்க்கூடல் 2002.

உண்மையில் சமாதானத்தின் பக்கமும் அமைதியின் பக்கமும் நாம் நிற்கின்றோம். மெய்யான புரிந்துணர்வும் சூதற்ற நீதியும் மலரவேண்டுமென்பதில் ஆர்வமாயுள்ளோம் என்பதனை எடுத்துரைப்பதாகவே மானுடத்தின் தமிழ்க்கூடல் நிகழ்ந்திருக்கிறது. சகல சமூகங்களையும் சேர்ந்த கலை, இலக்கிய ஊடகவியலாளர்கள், அறிஞர்களையும் ஒன்றிணைத்து, புரிந்துணர்வினை ஏற்படுத்தி, இனிவரும் நாட்களைப்பற்றியும் கடந்தகால வாழ்வு பற்றியும் பேசியிருப்பதன் மூலம் எல்லோருக்குமுள்ள பொறுப்புணர்வு சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. இதனூடாக ஏனைய சமூகத்தினருக்கும் வெளியுலகிற்கும் விடுதலைப்புலிகள் சமாதானத்தின்மீதும் நீதியின் மீதும் உள்ள தெளிவையும் நோக்கையும் காட்டியுள்ளனர். கூடலில் கலந்து கொண்டோரும் பேசியோரும் பேசிய விடயங்களும்கூட எத்தகைய சிறப்புக்கும் கவனத்திற்குமுரியன என்பதும் கவனிக்கவேண்டியது. ஒரு ஆழமான சிந்தனைப் புலத்துடன் செயற்களத்தை விரிப்பதில் விடுதலைப் புலிகள் கொண்டுள்ள ஆர்வத்தையும் தீர்மானத்தையும் இதன்மூலம் புரிந்து கொள்ளலாம்.

**இருபத்தியேழு வருடங்களுக்கு முன்பு – 1974இல் – நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்தது. பண்பாட்டுப் பெருவிழாவாக நடந்த அந்த நிகழ்ச்சியை அப்பொழுது இனவாத அரசியல் நோக்கில் குழப்பி பெரும் அனர்த்தத்தை விளைவித்தனர் அன்றைய சிங்கள ஆட்சியாளர். அன்றைக்கு அவர்கள் மூட்டிய தீயில் எரிந்துவிடாமல் அதை ஒளிச்சுடராக மாற்றினர் தமிழர். இதுதான் தமிழர் போராட்டத்தின் மகிமை. இங்கேதான் போராட்டச் சக்தியான விடுதலைப்புலிகளினதும் தலைவர் பிரபாகரன் அவர்களினதும் சிறப்பைப் புரிந்து கொள்ளலாம்.**



இதேவேளையில், இன்னொரு கவனிக்கவேண்டிய விடயம் பதாதைகள் தொடக்கம் மாநாட்டில் ஆற்றப்பட்ட உரைகள் வரையில் தமிழிலும் சிங்களத்திலுமாக இரு மொழிப் பரிவர்த்தனை நடைபெற்றது. இத்தகைய ஒரு நிலை தோன்றுவதற்கு கால் நூற்றாண்டுகாலம் போராட வேண்டியிருந்திருக்கிறது. எண்ணற்ற உயிர்களை அர்ப்பணிக்க வேண்டியதாயிற்று. எவ்வளவோ இழப்புக்களைச் செய்யவேண்டியதாயிற்று. எத்தனையோ அவலங்களையும் அழிவுகளையும் சந்திக்க வேண்டியிருந்தது. இந்த உண்மை, இந்த யதார்த்தம் எல்லோர் நெஞ்சிலும் உறைந்திட மானுடத்தின் தமிழ்க்கூடல் புதிய பாடம் நடத்தியுள்ளது.

பொதுவாக நோக்கின் மானுடத்தின் தமிழ்க் கூடல் ஈழத்தமிழர் கொண்டிருக்கும் அரசியல் நிலைப்பாட்டினை தெளிவாகப் புலப்படுத்துவதற்கான ஒரு அடையாளம். அத்துடன் நீதியின் மீதும், நியாயத்தின் மீதும், புதிய சிந்தனையின் மேலும் கொண்டிருக்கும் ஆர்வத்தையும் நம்பிக்கையையும் பற்றையும் இது சுட்டுகிறது.

கலை, பண்பாட்டுக் கழகம், 'நிதர்சனம்' நிறுவனத்தையும் தமிழ்த்தாய் வெளியீட்டகத்தையும் இணைத்து நடத்தியிருக்கும் 'மானுடத்தின் தமிழ்க் கூடல் 2002' வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகியுள்ளது. இது தமிழ்த் தேசியத்தின் அடையாளத்தையும் தமிழர் உரிமைப் போராட்டத்தையும் இன்னொரு பரிமாணத்தில் வெளிப்படுத்தியுமிருக்கிறது. அதே வேளை இனவாத அரசியலுக்கும் யுத்தத்திற்குமான முடிவைக் காணுவதற்குரிய பொறுப்பை கலைஞர்கள், படைப்பாளிகள், அறிஞர்கள், ஊடகவியலாளர்களுக்கு உணர்த்தியுமிருக்கிறது. ●

# உயிரால் அரணமைத்துத் தேசம் காத்தவர்



-புரட்சிமாறன்-

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்குள் நுழையும்போது முகமாலை கடந்துவர இத்தாவில் உங்களை வரவேற்கும். இப்போது அமைதியாய்க் கிடக்கும் அந்த ஊரிற்குள் இருவருடங்களைக் கடந்த நாட்களிலொன்றில் நடந்த பூகம்பத்தைப் பற்றி நீங்கள் மறந்திருக்கவும் கூடும். ஆனால் எங்களால் மறக்க முடியுமா? இத்தாவில் தடுப்பரண்களில் தங்கள் உடலாலும், உயிராலும் அரண் அமைத்து உயிருமில்லாமல் உடலுமில்லாமல் உணர்வுகளை மட்டுமே விட்டுப் போனவர்களின் அர்ப்பணிப்பினை, செப்பனிடப்பட்ட வீதியும் செப்பனிடப்படும் சமாதானமும் மறைத்துவிட முடியாதென்பதால் அந்த இரத்தம் சிந்திய நாளொன்றிற்குள் நான் சென்றுகொண்டிருக்கிறேன்.

முன்னரங்க அரண்கள் விழிப்பாக இருக்கின்றன. இரவுப் பொழுதாயினும் அமைதி என்ற பேச்சுக்கே இடமில்லாமல் எறிகணைகள் வீழ்ந்துவெடித்து அமைதியை சிதைத்துக் கொண்டிருந்தது. போராளிகள் எந்தத் திசையிலும் தலைவைத்து நிம்மதியாகத் தூங்கமுடியாது. ஏனெனில் ஒரேயொரு வழங்கல் பாதையைத் தவிர சுற்றிவர எதிரியின் முற்றுகைச் சூழல். அதைவிட கடந்து சென்ற ஒவ்வொரு நாளிலும் அங்கிருந்து உறவாடியவர்கள் ஒவ்வொருவராய்ப் பார்த்திருக்க மடிந்தபோது இதயத்தின் இயலாமையால் ஏற்பட்ட வேதனைகள். அந்த நினைவுகளை மறக்க முற்பட்டாலும் அதை நினைவூட்டிக் கொண்டிருக்கும் இரத்தக்கறைகள். தன்னை ஏந்தியவனைக் காணாது ஏங்கியபடி மண்மூட்டையின் ஓரமாய்க் கிடக்கும் துப்பாக்கிகள். இனி விடியப்போகும் நாளில் எஞ்சியிருப்போரில் யாரை இழக்கப்போகின்றோமோ என்ற ஏக்கம். என்றவாறாய் ஒவ்வொரு எண்ணங்களையும் மனம் மாறிமாறி நினைத்துக் கொண்டிருந்தாலும் எல்லாவற்றையும் எதிர்கொள்ளும் மனவுறுதி மட்டும் இன்றும் குலையாமல் மிச்சமாய் இருந்தது.

காலை விடியப்போவதை சேவல் கூவி உறுதிப்படுத்தாவிட்டாலும் அதிகரித்த எறிகணை வீச்சு அதை உணர்த்தி நின்றது. இன்று மூழப்போகும் சமரைப்பற்றி நேற்றைய தினமே அறிந்திருந்ததால் துப்பாக்கிகள் அனைத்தும் சரிபார்க்கப்படுகின்றன. ரவைக்கூட்டில் மிச்சமாய் இடமில்லாமல் முழுமையாக ரவை நிரப்பப்பட்ட நிலையில் எஞ்சியவை ஓரமாய் பெட்டிக்குள் கிடந்தன. போராளிகள் ஒவ்வொரு வரும் இரவு தனித்தனியே சிந்தனையில் இருந்தபோது தன் தோழனுக்குச் சொல்ல நினைத்தவற்றை சொல்லி முடித்துவிட்டு முதலில் சிரிப்போடும் பின்னர் தற்செயலாய் அவனை இன்று பிரிந்துவிடுவோமோ என்ற ஏக்கத்தோடும் தங்கள் நிலைகளிற்குள்ளே சண்டைக்குத் தயாரானார்கள்.

காலை ஆறு மணியைத் தாண்டியபொழுது போராளிகளின் தடுப்பரண்களை நோக்கி இராணுவக் கவசங்களும் துருப்புக்களும் முன்னகர்கின்றன. அந்தப் பிரதேசம் ரணகளமாவதற்கு இன்னும் கொஞ்ச நேரம்தான் எஞ்சியிருந்தது. போராளிகளின் துப்பாக்கிகள் எதிரியைக் குறிவைக்க தயாராகின. இராணுவத்தின் ஆட்லெறிகளும், மோட்டார்களும் மூச்சுவிடும் இடைவெளி கூடக் கிடைக்காமல் எறிகணைகளைத் துப்பியவண்ணமிருந்தன. இன்று ஆனையிறவையும் முகமாலையையும் இணைத்து பழையபடி தங்கள் வளங்கலை ஏற்படுத்த எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியான நிலையில் இராணுவம் எங்களின் நிலைகளை நோக்கி முன்னேறியது.

முற்றிலும் எதிரியால் சூழப்பட்ட அந்த இத்தாவில் அரண்களில் சண்டைக்குத் தயாராயிருந்த போராளிகளுக்கும் அவர்களுக்குள் இருந்தபடி வழிநடத்தும் தளபதிக்குமான தகவல் பரிமாற்றங்கள் தொலைத்தொடர்புக் கருவியில் அவசர அவசரமாய் சென்று திரும்பிக் கொண்டிருந்தன. இப்போது பளையை நோக்கி அரண் அமைத்திருந்த எங்களின் நிலைகள் மீது கிளாலிப்பகுதியிலிருந்து முன்னேறிய எதிரி முட்டிமோதத் தொடங்கினான். மனதின் கற்பனைகளுக்கும் அப்பாற்பட்டு ஆனால் நிஜமாக மனிதனால் தாங்கிக்கொள்ள முடியாத அளவிற்கு குண்டுகளின் வெடியோசை காதை அடைத்துக் கொண்டிருந்தது. எந்தச் சத்தத்தையும் அனுமானிக்க முடியவில்லை. ஏனெனில் வெடிச்சத்தங்களிடையே இடைவெளி எதுவும் கிடைக்கவில்லை. எறிகணைகள் கிளப்பிய புகைமண்டலம் துப்பாக்கியால் குறிபார்க்க முடியாமல் தடுத்துக்கொண்டிருந்தது. தென்னந்தோப்புக்குள்ளாலும் புதர்களுக்குள்ளாலும் புகுந்த எதிரிகளை முதற்கட்டமாய் அடித்துத்தடுத்து நிறுத்தினர் போராளிகள். இராணுவ 'ட்றக்' ஒன்று தன் இயங்கு நிலையை இழந்து விட்ட நிலையில் அதை மீட்க முனையும் எதிரி மீது மீண்டும் மீண்டும் இடைவிடாத தாக்குதல்கள் தொடர்ந்தன. டாங்கிகள் முதற்கட்டமாய்த் தங்களால் முடியாதென மறுத்து விட்டன. பல இராணுவச் சிப்பாய்கள் சடலமாய் மரங்களின் வேர்களோடும் வெறுந்தரையிலுமாய்க் கிடந்தனர்.



சற்றுமுன் உற்சாகமாய் அருகிருந்த எதிரியைச் சுட்டவர்களில் சிலர் இப்போது அமைதியாய் தங்கள் நிலைகளுக்கருகிலேயே சிந்தப்பட்டு உறைந்த இரத்தத்தோடு வீழ்ந்திருந்தனர். ஒரு முனையில் தன் நகர்வு முடக்கப்பட்டதால் மீண்டும் முகமாலை நோக்கி இத்தாவில் A9 வீதியை மறித்து தடுப்பரண்களாய் நின்ற போராளிகளை நோக்கி சிங்கள இராணுவம் முன்னேறியது. புற்றுக்குள் இருந்த ஈசல் புறப்படுவது போல அந்தப் பிரதேசமெங்கும் இராணுவத் தலைகள். கண்டி வீதியில் முகமாலையில் இருந்து வந்த படைகளும் கவச வாகனங்களும் தங்களால் இயன்ற மட்டும் துப்பாக்கிச் சன்னங்களையும் எறிகணைகளையும் கொட்டித் தீர்த்தன.

டாங்கிகளின் தொலைநோக்கிகளுக்குள் போராளிகளின் நிலைகள் தென்படுகின்றன. டாங்கிகள் எங்களின் நிலைகளைக் குறிபார்க்கின்றன. இதை தெளிவாக உணர்ந்த போதும் எந்தவொரு கவசமுமில்லாமல் தம் மன உறுதியை மட்டுமே கவசமாய் வைத்து தங்கள் அரணின் மேல் ஏறி நின்றபடி R.P.G எறிகணைக் குழலினை தோளில் வைத்து பதட்டமில்லாமல் தங்கள் குறிகாட்டியினை இணைத்து டாங்கிகள் மீது குண்டுளைச் செலுத்தினார்கள் கவச எதிர்ப்புப் போராளிகள். போராளிகள் முந்திய போது டாங்கிகளும் டாங்கிகள் முந்திய போது போராளிகளின் நிலைகளும் எரிந்து கொண்டிருந்தன. தாங்கள் அடித்ததால் டாங்கி எரிகிறது என தொலைத்தொடர்புக் கருவியில் உற்சாகமாய் சொன்னவர்களின் தொடர்புகள் இல்லாமற் போயின.

சினைப்பர் துப்பாக்கியில் வைத்த கண்ணை எடுத்து பார்க்க நேரமில்லாமலும் ரவைக்கூடு மாற்றக்கூட முடியாமல் கண்முன்னே இராணுவ இலக்குகள் குவிந்திருந்தன. தங்களால் இயன்றமட்டும் அவர்கள் சுட்டுக்கொண்டிருந்தார்கள். நீண்டநேர சண்டைக்குப்பின் முகமாலை நோக்கிய இத்தாவில் முன்னரங்க நிலைகளுக்குப் பக்கவாட்டாய் கிளாலிப் பகுதியிலிருந்து முன்னேறிய இராணுவக் கவசங்கள் எங்கள் போராளிகளின் அரண்களை ஊடறுக்கின்றன. அந்தப் பகுதியில் இருந்த ஒவ்வொரு அரணிலுமிருந்து ஒலித்த போராளிகளின் குரல்கள் அடங்கிப் போகின்றன. ஆனாலும் அந்தப் பெயர்களை அதிகதரம் மீண்டும் மீண்டும் கட்டளைப்பணியக தொலைத்தொடர்புக் கருவி அழைத்த போதும் பதில்தராது மௌனம் சாதித்தன தொலைத் தொடர்புக் கருவிகள்.

அவர்கள் தலைவன் இட்ட கட்டளையையும் தாம் நேசித்த மண்ணையும் காப்பாற்றுவதற்காய் தங்களால் இயன்ற மட்டும் எதிரியைச் சுட்டு வீழ்த்திய பின் தங்கள் உடலில் குண்டேந்தி வீழ்ந்தார்கள். "அண்ணை எங்கட பக்கத்தாலை ஆமிவாறதாயிருந்தா அது நாங்கள் செத்த பிறகுதான்." என்று சற்று நேரத்திற்கு முன் தங்கள் தளபதிக்கு அவர்கள் கொடுத்த வாக்கின்படி தங்கள் சாவின் பின்னரே அந்தப் பகுதிக்குள் எதிரியை உள்நுழைய அனுமதித்தனர். உயிரற்ற அந்த உடல்களைக் கடந்து ஆக்கிரமிப்பு இராணுவமும் அதன் கவசங்களும் உள்நுழைந்தன.

இப்போது முகமாலை நோக்கி கண்டி வீதியின் முன்னரங்க நிலைகளில் நின்றபடி சமரிட்ட போராளிகளின் முன்னும் பின்னுமாய் இராணுவத் துருப்புக்களும், கவசங்களும் சூழ்ந்திருந்தன. R.P.G க்களைத் தாங்கிய வீரர்கள் எதிரியால் சூழப்பட்ட போதும் பதட்டமில்லாமல் தங்களின் பின்னால் தங்கள் பகுதிக்குள் இருந்த டாங்கிகள் மீது சுட்டார்கள். அவை குண்டுபட்ட பின் பாரிய தீப்பிளம்பையும் கரும் புகையையும் கக்கியபடி எரிந்து கொண்டிருந்தன. சினைப்பர் வீரர்கள் தங்களால் இயன்ற மட்டும் எதிரியைச் சுட்ட பின்னும் அங்கு ஏற்கனவே வீழ்ந்து விட்ட போராளிகளின் துப்பாக்கியை எடுத்துச் சுட்டனர். ஒவ்வொரு சினைப்பர் வீரனும் தான் திருப்திப்படும் அளவில் இராணுவத் தலைகளை வீழ்த்திய பின் தாங்களும் அந்த மண்ணில் குண்டேந்திக் கொண்டிருந்தார்கள்.

ஆண் போராளிகள், பெண் போராளிகள் என காலையில் தொலைத் தொடர்பில் அதிகமாய் ஒலித்த குரல்கள் பல அடங்கிப்போயின. நூற்றுக்கணக்கான இராணுவ துப்பாக்கிகளினால் குறிபார்க்கப்பட்ட பகுதிக்குள்ளும் இருந்தபடி எந்தவித பதட்டமுமில்லாமல் தொலைத்தொடர்புக் கருவியில் தெளிவாய் ஒலித்துக் கொண்டிருந்தது ஒரு பெண் போராளியின் குரல். அவள் உரத்துப் பேசமுடியாத தூரத்தில் எதிரி நின்ற போதும், தெளிவாக நிலைமைகளைத் தளபதிக்குக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

தன்னை மையமாக வைத்து, தன்னைச் சூழவுள்ள எதிரிகளை அழிக்க எறிகணைகளை வீழ்த்துமாறு ஒலித்துக்கொண்டிருந்தது தொலைத்தொடர்புக்கருவியில் அவளது குரல். தன் சாவை அவள் பொருட்படுத்தவில்லை. அவள் இருந்த பகுதியை நோக்கி அவள் சொல்லிய இலக்குகளைக் கேணல் ராஜுவின் ஆட்லெறிப்படையணி வீசிய எறிகணைகள் தகர்த்தன.

ஒரு நீண்ட கால அனுபவம் மிக்க இராணுவத்தின் ஆட்லறிப் படையணிபோல அந்த போராளிகள் மிகவும் துல்லியமாக சுட்டனர். பல இராணுவ வீரர்கள் சடலங்களாகிய போதும் தங்கள் முயற்சியினை இன்னும் விட்டுவிடவில்லை.

எங்களினது பல போராளிகள் மூச்சடங்கிப் போயினர். எஞ்சியிருந்த போராளிகளிடம் இழந்த போராளிகளினால் ஏற்பட்ட வேதனை பின்னர் கோபமாகப் பரிணமித்தது. காலையிலிருந்து இப்போது வரை மண்ணில் சிந்திய வியர்வையும் இரத்தமும் காயவில்லை. ஆனாலும் நாக்கு எப்போதே நீரில்லாமல் காய்ந்து விட்டது. 'இப்போது எங்களுக்கு எதுவும் வேண்டாம் எங்கள் தேசத்தைத் தவிர.' என்ற உறுதியோடு மீண்டும் உக்கிர சண்டைக்குத் தயாரானார்கள் போராளிகள்.

எதிரியின் முற்றுகைக்குள்ளான பகுதியை இரு முனைகளால் முன்னேறிக் கைப்பற்றுவதற்காகச் சண்டையைத் தொடங்கினார்கள். மீண்டும் அந்த ஆவேசத்தாக்குதல்களில் எங்கள் காவலரண் ஒவ்வொன்றாக மீட்கப்படத் தொடங்கியது. எதிரிக்கும் சாவு எங்களுக்கும் இழப்பு ஆனால் வெற்றி மட்டும் எதிரிக்கு கிட்டவிடோம் என்ற வெறித்தனத்தோடு ஒவ்வொரு போராளியும் சமரிட்டான். மரங்களும், கட்டிடங்களும் அந்தக் குண்டு மழையைத் தாங்காது சிதைத்த போதும், சிதையாத மனவுறுதியோடு ஒரு மானப்போர் அங்கே மூண்டிருந்தது.

காலையில் பளைப்பக்கமாக முன்னேறி அடிவாங்கி அடங்கிப் போயிருந்த எதிரி மாலையில் மீண்டும் முன்னகரத் தொடங்கினான். எங்கள் காவலரனை நோக்கி நூற்றுக் கணக்கில் முன்னேறினான். போராளிகள் தங்கள் துப்பாக்கியால் எதிரியைச் சுட்டு வீழ்த்தினர். கொஞ்ச நேரத்தில் அங்கே எங்களின் காவலரணிற்குள் கைகலப்புச் சண்டை மூண்டது. எங்களின் அரண்களுக்குள்ளும், எங்களின் தொடர் காப்பரண்களிற்குள்ளும் நின்றபடி எங்களோடு மோதினான் எதிரி. நீண்ட நேரமாய் வாழ்வா சாவா என்ற போராட்டம் தொடர்ந்தது.

அந்தப் போரின் முடிவில் உயிர் தப்பிய ஒவ்வொரு எதிரியும் தன் பகுதியை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான். இராணுவத்தின் முற்றுகைக்குள் தனித்து ஓங்கி ஒலித்த பெண் போராளியை மீட்கச் சண்டையிட்டபடி முன்னேறிய வீரர்கள், அந்தப் போராளியின் நிலையைச் சென்றடைந்தனர். அன்றைய நாளின் இரவுப் பொழுதையும் தாண்டி அடுத்த நாளின் விடிகாலைப் பொழுது புலர்வதற்கு நெருங்கும் நேரத்தில் சமர் மெல்ல ஓய்விற்கு வந்தது. இதயத்தை நெருடும் வகையில் எங்கள் வீரர்களை இழந்த போதும் அன்றைய பொழுதில் ஆனையிறவில் தங்கியிருந்த எதிரிக்குச் சாவு மணி அடிக்கப்பட்டது. ஆனையிறவு தங்கள் கையிலிருந்து நழுவப் போகின்றது என்பதை அன்றைய பொழுது எதிரிக்கு உணர்த்தி நின்றது.

இந்த வரலாற்றுச் சமரின் அடையாளமாய் அன்றைய நாளில் (10/04/2000) எதிரியால் சூழப்பட்ட நிலையிலும் நிதானமிழக்காது, எதிரியின் கவசவாகனங்களை சுட்டு எரியூட்டிய பின் அந்தப் போரிலேயே தானும் மடிந்த R.P.G எறிகணைக் குழலைத் தாங்கியதொரு வீரன் அழித்த கவச துருப்புக் காவியே (APC) இத்தாவிலை ஊடறுத்துச் செல்லும் A9 வீதியின் அருகே கிடக்கின்றது. இந்த வீதியால் செல்லும் போது, எங்கள் வீரர்கள் இரத்தம் சிந்தி உயிர்கொடுத்து மீட்டமண் என்பதை நெஞ்சிருத்திச் செல்லுங்கள்.

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

பேச்சுக்கான தூதுக்குழுக்களின் தலைவர்கள் இந்த உபகுழுவிற்கு இரு பக்கத்திலும் தலைமை தாங்குவார்கள். இலங்கை அரசின் சார்பில் திரு.ஜீ.எல்.பீரிசும் புலிகள் இயக்கத்தின் சார்பில் திரு.அன்ரன் பாலசிங்கம் அவர்களும் தலைமை வகிப்பார்கள்.

இந்த அரசியல் உபகுழுவில் அரசாங்கத்தின் சார்பில் அங்கம் வகிக்கும் ஏனைய உறுப்பினர்களுள் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் திரு.ராவூப் கக்கீமும் அடங்குவார்.

இனப்பிரச்சனைத் தீர்வில் சர்ச்சைக்குரிய விடயங்களாகக் கருதப்படும் இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் சட்டம், ஒழுங்கு போன்ற முக்கிய விடயங்களை பேச்சுக்களில் கட்டாயம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் பேச்சுவார்த்தைகளின்போது இந்த விடயங்கள் மிகமிக முக்கிய இடத்தை வகிக்கப்போகின்றன.

இந்த அரசியல் உபகுழு இனி வரும் நாட்களில், போர் மற்றும் இனமுரண்பாடுகளில் சிக்கி அவதிப்பட்டு - பின்னர் தீர்வுகளைக் கண்ட நாடுகளுக்கு நேரடியாக விஜயம் செய்து, அந்தந்த நாடுகளின் அனுபவங்களை ஆராய்ந்து தெரிந்துகொள்ள முனையும். அத்துடன், அங்கெல்லாம் உள்ள நிர்வாக முறை - நிதி வழங்கல் - வங்கி முறை - பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கல் விடயங்களையும் தெரிந்துகொள்ள முயலும்.

அடுத்த அமைதிப் பேச்சு அமர்வுகளில் இந்த அரசியல் உபகுழு தனது பணிகள் பற்றி காலத்திற்குக் காலம் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்.

**மனிதாபிமான புனர்வாழ்வுத் தேவைகள் பற்றிய உபகுழு:**

வடக்கு - கிழக்கின் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள அனைத்து இன மக்களதும் வாழ்நிலையை மேம்படுத்த ஒரு கூட்டுச் செயலணியை நிறுவுவது என தாய்லாந்தின் முன்னர் நடந்த முதற்கட்டப் பேச்சின்போது புலிகளுக்கும் - அரசிற்கும் இடையே ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

இத்தீர்மானத்தின் அடிப்படையிலும், பின்னர், இரண்டாம் கட்டப் பேச்சின்போது நடைபெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையிலும் உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழு அமைக்கப்பட்டு அதற்கான விதிமுறைகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த உபகுழு மக்களது உடனடித் தேவைகளை நிறைவு செய்வதற்கான ஓர் இடைக்கால அமைப்பாகும்.

மக்களது உடனடித் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வகையிலும் - நெகிழ்வுத் தன்மையும், சூழலுக்கேற்ப செயற்படும் தன்மையும் கொண்ட அமைப்பாக இந்த உபகுழு செயற்படும்.

மக்களின் மனிதாபிமான மற்றும், மீள் கட்டுமானத் தேவைகளை இனங்கண்டு இத்தேவைகளை நிறைவு செய்யக்கூடிய செயற்பாடுகளை அமுல்படுத்த முன்னுரிமை கொடுக்கப்படும்.

உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களுக்குப் புனர்வாழ்வு - கண்ணிவெடி அகற்றும் திட்டங்கள்- வீதிப் புனரமைப்பு - உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் கட்டுமாணங்கள்- சுகாதார வசதிகள் - பாடசாலைகள் போன்றவற்றை மீளக் கட்டுவதற்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் மக்கள் தமது சொந்த வீடுகளுக்கு திரும்புவதற்கான உதவிகள் போன்றவற்றை இலக்காகக் கொண்ட செயற்பாடுகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

இந்த உபகுழுவின் செயற்பாடுகளுக்கான நிதி வழங்கல் மற்றும் செலவீனம் சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டில் இருக்கமாட்டாது என்பது முக்கிய அம்சமாகும். இந்த விடயத்தில் இருதரப்பும் சம பங்காளிகளாக செயற்படுவர். இந்த நிதிக் கையாளுகையை கண்காணிக்க மூன்றாவது நாடொன்று இரு பகுதியினரதும் சம்மதத்துடன் நியமிக்கப்படும்.

இந்த உபகுழுவின் செயற்திட்டங்களுக்கான நிதியை உலக நாடுகளும் - சர்வதேச நிதி நிறுவனங்களும் வழங்கும். இந்த நிதியை தேடிப்பெற்றுக்கொள்ளும் பொருட்டு இலங்கை அரசாங்கமும் - புலிகள் இயக்கமும் ஒத்துழைத்துச் செயற்படுவர். இந்த மீள் கட்டுமாண நிதிக் கணக்குகள் தனியாகவே பேணப்பட்டு - நிர்வகிக்கப்படும்.

இந்த உபகுழுவிற்கு புலிகளின் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமை தாங்குவார். இலங்கை அரசின் தரப்பில் திரு. பேணாட் குணதிலக தலைமை தாங்குவார். இவர்கள் தவிர ஒவ்வொரு தரப்பிலும் மூன்று உறுப்பினர்கள் இடம்பெறுவர்.

இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்ற நான்கு உறுப்பினர்களில் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த இருவர் அங்கம் வகிப்பர்.

நோர்வே அரசாங்கம் அனுசரணையாளர் என்ற தனது பங்கை வகிக்கும். இந்த உபகுழு மாதத்திற்கு ஒருமுறை சந்தித்து செயற்திட்டங்களைத் தீட்டி - அதை நடைமுறைப்படுத்தும். இந்த உபகுழுவிற்கான தலைமைச் செயலகம் கிளிநொச்சியில் அமையும். கிளிநொச்சியில உள்ள அரச அலுவலகத்தில் இந்த செயலகம் இயங்கும். உபகுழு விரும்பினால் மட்டக்களப்பு - கொழும்பிலும் தனது கூட்டங்களை நடத்தும்.

**இராணுவ மயமாக்கலைக் குறைத்தல்:**

புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் - பின்னர் தாய்லாந்தில் நடந்த முதற் கட்டப் பேச்சின்போதும் வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவ முகாம்களை படிப்படியாக அகற்றி, தமிழர் பகுதிகளில் இராணுவ மயமாக்கலை குறைப்பது என்று இணக்கம் காணப்பட்டிருந்தது.

இரண்டாம் கட்டப் பேச்சின் போது இதை செயற்படுத்துவதற்காக ஒரு உபகுழு அமைக்கப்பட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் பொதுமக்கள் செல்லமுடியாத ஏனைய நிலப்பரப்புக்கள் தொடர்பான விடயங்கள் பற்றி இரு தரப்பும் கலந்துரையாடலை நடாத்தி இராணுவ மயமாக்கலை குறைப்பது இந்த உபகுழுவின் முக்கிய பணியாகும்.

அத்துடன், மக்களது மீள் குடியேற்றத்திற்கும் - மீள் புனருத்தானத்திற்கும் இக்குழு உதவுவதுடன், மீன்பிடி - விவசாயம் போன்ற தொழில் துறைகளுக்கு இருக்கும் தற்போதைய தடைகளை அகற்றி உதவுவதும் இந்த உபகுழுவின் பணியாகும்.

அத்துடன் இந்த உபகுழு வடக்கு - கிழக்கு தொடர்பான பாதுகாப்பு விடயங்களை ஆரம்ப கூட்டங்களில் விவாதிக்கும். அத்துடன் குறிப்பிடும்படியான உள்ளூர் விடயங்களை அதன் மாவட்டக் கூட்டங்களில் விவாதிக்கும்.

இந்த உபகுழுவில் மொத்தம் பதினெட்டு உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர். புலிகள் தரப்பில் இருந்து ஒன்பது பேரும் அரச தரப்பில் இருந்து ஒன்பது பேரும் நியமிக்கப்படுவர். இந்த உபகுழுவில் புலிகள் சார்பில் நியமிக்கப்பட்டுள்ள ஒன்பது பேரும் வருமாறு.

கேணல் தீபன், திரு. இளம்பருதி (யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்), கேணல் ஜெயம், திரு.எழிலன் (வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்), கேணல் பதுமன், திரு.திலக் (திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்), கேணல் கருணா, திரு.கௌசல்யன் (மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்) ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு.ஒஸ்ரின் பெனாண்டோ மற்றும் மேஜர் ஜெனரல் கொட்டேகொட, மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, றியர் அட்மிரல் வீரசேகர, பிரிகேடியர் பாலசூரிய, திரு.நிமால் லிவ்கி, குறூப் கப்டன் கோலித குணதிலக, திரு.டிவின்ட் கலுபகான, திரு.மஜிட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

சம்பந்தப்பட்ட தரப்புக்களில் தேவையெனக் கருதுமிடத்து சம்பந்தப்பட்ட தரப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உபகுழுவின் உறுப்பினர்கள் உள்ளூரில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சிறிலங்கா கண்காணிப்புக் குழுவின் ஆறு மாவட்ட அலுவலகங்களும் அமைந்துள்ள இடங்களுக்குத் தெரியப்படுத்தி யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா (கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் இதற்குள் அடங்கும்), திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இடங்களில் சந்திப்பர்.

இதேவேளை,

பேச்சுவார்த்தையின் மூன்றாவது அமர்வை நோர்வேயின் ஒஸ்லோ நகரில் நடத்துவதென்றும், இந்தப் பேச்சுவார்த்தையில் முடிவு செய்யப்பட்டது.

எதிர்வரும் டிசம்பர் இரண்டில் இருந்து ஐந்து வரை மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும்.

இதேசமயம், ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டபடி பேச்சுவார்த்தையின் நான்காவது அமர்வு அடுத்த வருடம்(2003) ஜனவரி ஆறில் இருந்து ஒன்பது வரை நடைபெறும். இதைத் தொடர்ந்து ஐந்தாம், ஆறாம் அமர்வுகளுக்கும் நேரகாலம் குறிக்கப்பட்டு இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஐந்தாம் சுற்றுப் பேச்சுக்கள் அடுத்த வருடம் பெப்ரவரி ஏழில் இருந்து பத்து வரையும் ஆறாம் சுற்றுப் பேச்சுக்கள் மார்ச் பதினெட்டிலிருந்து இருபத்தோன்றுவரை இடம் பெறும் என்று முடிவாகியுள்ளது. ●

## பொறுப்புள்ள விதார் ஹெல்கேசனும் பொறுப்பற்ற சந்திரிகாவும்

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனை சந்திக்க சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா தனது நிகழ்ச்சி நிரலில் நேரம் ஒதுக்கி சம்மதம் தெரிவித்தபோதும் கடைசியில் அவர் அச்சந்திப்பை மேற்கொள்ளாது தவிர்த்தமையானது, சந்திரிகாவுக்கு இந்த நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்தின் மீதும் சமாதானம் தொடர்பான அவரது விருப்பார்வத்தின் மீதும் உள்ள அக்கறையின்மையை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

ஒரு பொறுப்புள்ள - நட்புறவு நாடொன்றின் அமைச்சரும் ராஜதந்திரியும், சிறிலங்காவில் அமைதிநிலை ஏற்படவேண்டும் என்பதில் அக்கறை கொண்டவராக அமெரிக்கா முதல் வன்னி வரை அயராது அலைந்து கடுமையாக செயற்பட்டு வருபவருமான விதார் ஹெல்கேசனின் முயற்சி முன்னெடுப்புகளுக்கு பக்க பலமாக இருக்கவேண்டிய சந்திரிகாவின் அலட்சியம் நோர்வேயின் சமாதானத்திற்கான அனுசரணையை மட்டுமல்ல, சிறிலங்காவில் சமாதானம் ஏற்பட நோர்வே செய்யும் முயற்சிகளுக்கு பக்க பலமாக ஆதரவை வழங்கும் சர்வதேச சமூகத்தையும் அவமதித்த செயலாகும்.

அப்படி ஒன்றும் நேரமற்ற தேச, மற்றும், சமூக அல்லது குடும்ப பணிகளில் ஈடுபடும் அக்கறை கொண்ட ஒருவராக சந்திரிகாவை எவரும் கூறிவிட முடியாது. விடிய விடிய விருந்துகளில் ஆடம்பரமாக கலந்துகொண்டு பாடியும், ஆடியும் கும்மாளமிடும் ரகத்தை சேர்ந்தவர்தான் அவர் என்பதை கொழும்பின் ராஜதந்திர வட்டாரங்கள் மிக நன்றாகவே அறியும்.

ஒரு தேசிய முக்கியத்துவம் மிக்க பிரச்சினைக்கான தீர்வு குறித்து கலந்தாலோசனை செய்ய வெகு தொலைவில் இருந்து பல்வேறு நிகழ்ச்சி நிரல்களை வகுத்துக் கொண்டு வரும் ஒரு பொறுப்பான ராஜதந்திரியை - ஒரு நட்பு நாட்டு அமைச்சரை எந்த நெருக்கடிக்குள்ளும் நேரம் ஒதுக்கி முக்கியத்துவம் அளித்து சந்தித்து பேச வேண்டிய பொறுப்புணர்வு சந்திரிகாவிடம் இல்லாமல்போனது அவரது அரசியல் ஆளுமையின்மையையே காட்டுகிறது. நிறைவேற்று அதிகாரம் பற்றிக் கூறி அரசை மிரட்ட ஊர் ஊராக அலைந்து திரிந்து கூட்டம் கூட்டி மக்களைக் குழப்பச் செலவிடும் நேரத்தில் ஒரு சிறு பொழுதை அவர் விதார் ஹெல்கேசனை சந்திக்க ஒதுக்கியிருக்கலாம்.

அத்தகைய நாகரிகம் அவரிடம் இல்லாமல் போய்விட்டது.

அதனை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளவேண்டிய காலம் வந்துவிட்டது. ஒரு வேளை அரசியல் தில்லு முல்லுகள் புரிந்து அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து மீண்டும் சந்திரிகா பாராளுமன்றத்தை தனது ஆட்சிக்குள் கொண்டுவர நேர்ந்தால் கூட சமாதான முன்னெடுப்புகள் பாதிக்காது தொடரும் என்று நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் நம்பிக்கையுடன் கூறுவதுதான் வியப்பாக உள்ளது.


ஒன்று சந்திரிகாவை அவர் இன்னும் சரியாக இனம் கண்டு கொள்ளவில்லை. அல்லது சந்திரிகாவை மடக்க அவர்களிடம் ஏதோ இருக்க வேண்டும்.... எதையும் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ●

# கேட்கிறதா மணி? கேட்கிறதா பாடல்? தெரிகிறதா நெய்விளக்கு?




-வியாசன்-

இது கார்த்திகை மாதம்.
வேர்த்தறியாக் காலம்.
பச்சைத் தாவணி கட்டி
உச்ச அழகிற் கிடக்கிறது ஊர்கள்.
உறவுகளே! உங்களுக்கு என்ன மாதிரி?
பனியா? குளிரா?
மழையா? வெயிலா?
எதுவும் தெரியாது எமக்கு.
நலமெனும் ஒரு வார்த்தை
நமக்கது போதும்.
இது கார்த்திகை மாதம்.
உங்கள் தொட்டில் மீது
மாரிமழை பொழிகிறது.
வானக் கூரை பிய்ந்து
ஊர்முற்றம் மீது ஒழுக்கு.
இது வேர்களுக்கு விருந்துக்காலம்.
ஊறி நிலம் தெக்கி உஷ்ணம் தொலைந்துபோக
சாரல் மழையின் சந்தோசத்தில் சிறுவர்.
ஒழுங்கையெங்கும் வாரியடித்து ஓடுகிறது வெள்ளம்.
மணக்கோல மந்தாரத்தில் மரங்கள்.
கள்ளிச் செடிகூட காதலுக்கு ரெடியாக
கையில் கடிதம் வைத்திருக்கிறது.
பூக்களைப் பற்றிப் பேசவே வேண்டாம்
வாசலெங்கும் கண்ணெறிந்து கிடக்கின்றன.
நிறைமாதத் தாயாய் நிறைந்துள்ள குளங்களில்
கோவணமுமற்ற சிறுவர்கள் குதித்தெழும்புகின்றனர்.
ஆட்களைக் காணும்போது மட்டும்
ஆவரசம் பற்றைகள் ஆடைகளாகின்றன.
நீங்கள் விட்டுச்சென்ற இடைவெளியை
இன்று இவர்களே நிரப்புகின்றனர்.
காலங்களின் கால்களிற்றான் கடுகதி வேகம்
எந்த மாற்றமும் இல்லை இப்போதும்.
நீங்கள் இல்லையே என்பதைத் தவிர
எல்லாமும் அப்படியேதான் இருக்கின்றன.
காற்றும்,
மழையும்,
நிலவும்,
குளிரும்,
வழமைபோல் வந்து போகின்றன.
வருகிறது கார்த்திகை இருபத்தேழு.
ராஜபுரவியேறிப் போர்க்களம் புகுந்து
ஆவி கொடுத்தோரை அழைக்கும் நாள்.
துயிலுமில்லம் சென்று தொட்டெழுப்பும் திருநாள்.
கல்லறையின் வாசற் கபாடம் திறக்கும் நாள்.
மெல்லொளியாய் உள்ளே மூச்சே கேட்கும் நாள்.
கார்த்திகை மாதத்து மழைத்தூற்றல்
இந்த நாளுக்கான கண்ணீர்தான்.
அழுக்கெல்லாம் கழுவி அள்ளிச் செல்லவே
வீதியெங்கும் வெள்ளம் பாய்கிறது.
கோடி மலர்கள் கார்த்திகையில் பூப்பது
வுாடிவிழவல்ல......
கல்லறைக்கென்றே செடிகள் கருத்தரிக்கின்றன.
தனக்குள் உறங்கும் சந்தணமேனி குளிரட்டுமென
நீரை உறிஞ்சிக் கொள்கிறது நிலம்.
கார்த்திகை இருபத்தேழு
கண்ணீர் நாளல்ல........
ஆயினும் நெஞ்சில் ஆயிரம் ஆணிகளேறுகின்றன.
சிலுவையில் அறைவதுபோல் தேகம் வலிக்கிறது.
விதையுண்டுபோன வீரப்பிள்ளைகளையெண்ணி
விதையுண்டு கிடக்கிறது வாசல்கள்.
மாலைபடும் வேளை சுடரும் நெய்விளக்கில்
காலையொன்று விடியும் காட்சி தெரிகின்றது.
யாருக்கென்றுதான் அழுவது?
எவருக்கென்றுதான் ஏற்றுவது சுடர்?
எந்தக் கல்லறைக்கு பூவாரியிறைப்பது?
வேரெல்லாம் ஒன்றான பின்னர்
கிளைகளுக்குள்ளே பேதங்களேது?
எல்லாக் கிளைகளும் எமது.
எல்லாப் பூக்களும் எமது.
ஏல்லாக் குழிகளும் எமது.
எல்லாப் பிள்ளைகளும் எமது.
கனவின் மொழியெடுத்தெழுதிய கவிதைகளுக்கு
அனற்சுடரேற்றி அஞ்சலிக்கிறோம்.
புயல் மரத்தில் பூத்த மலர்களின் மடியில்
விழி சொரியும் பூக்களை விழுத்துகிறோம்.
எம்மண்ணிலும் இத்தனை வீரமா?
எம் சந்ததியின் கையிலும் இத்தனை சாகஜமா?
கோழி திருகக்கூட குடல் நடுங்கிய பரம்பரைக்குள்
ஊழிப் பெருந்தீயாய் இவர்கள் எப்படி உருவானார்?
திண்ணையில் ஏறிய அட்டையைத் தட்டக்கூட
அண்ணனைக் கூப்பிட்ட தங்கைகளிலிருந்து
அங்கயற்கண்ணிகள் அணிவகுத்தது எப்படி?
ஆறு மணிக்குப் பின்னர் அடி வளவிற்குப் போகவே
தாயைத் துணைக்கழைத்த தலைமுறை
சுடலை நடுவிலுள்ள காவலரணில் விழித்திருக்கிறது.
வேள்வி நடக்கும் கோவில்களின்
வீதிக்கே போகாத பரம்பரை
விழுந்து கிடக்கும் பகை மிதித்து முன்னேறுகிறது.
வீரம் விளைந்து விட்டால்
சாவு சர்க்கரையாகி விடுகிறது.
அடங்கிக் கிடக்க ஒப்புவதில்லை அனற்சுடர்.
காங்கை நெருப்பு கண்மூடிக்கிடக்காது.
ஏங்கித் தவிக்காது இடர்பட்ட நெஞ்சு.
பட்டத்து யானைப் பவனிக்கனவில்
இந்த ராஜ புதல்வர்கள் போர்க்களம் போகவில்லை.
திக்கெட்டும் உலாவந்து ஜொலித்து,
பகைத் தேரின் சக்கரங்களை முறித்து
சமர்க்களம் நின்றாடிச் சாய்ந்தோரிவர்.
பெருவலிக் கரமேந்திய வாளுடன்
செருக்களமாடிய சிம்மவாகினிகள்.
நெஞ்சில் கனல் மூண்டு விழிதிறந்தால்
விடுதலைக்கானதைத் தேடி விரையும்.
விரையும் வழியில் வெல்லும்.
வெல்லும் போதில் விழுந்துபோகும்.
விழுந்து போனோரின் ''விதைகுழிப் பெருநாள்''தான்
மாவீரர் நாள்.
கார்த்திகை இருபத்தேழு.
காவற் தெய்வங்களின் காணிக்கைத் திருநாள்.
ஊர்திரண்டு நின்று ஒப்பாரி வைப்பதில்லை
உருக்கொண்டாடி உறுதியெடுத்துக் கொள்கிறது.
தீயிடும் ஆரிய மரபழித்த



நடுகல் வழிபாடிது.
தமிழரின் பழைய மரபு புதுப்பிக்கப்படுகிறது.
ஈமத் தாழியும்,
நடுகல்லும்,
வெறியாட்டுமே நமக்கிருந்த வழிபாடு.
வேற்றிவீரர்கள் வீரத்தெய்வங்களாயினர்.
இவர்கள் கற்பனையற்ற கடவுளர்.
பகைவரும் திசைபார்த்து
எல்லைப்புறங்களில் இவர்களுக்கு கோயிலிருந்தது.
சாவடைந்த பின்பும்
இவர்களுக்கோர் சக்தியிருந்தது.
வீரமாதேவியின் விழிகள் திறந்தேயிருந்தன.
இன்றும் நிலத்தில் விதைக்கிறோம்
எங்கள் நிர்மல ரூபங்களை.
இது விடுதலைக்கான விதைப்பு.
கட்டறுப்புக்கான விலைகொடுப்பு.
உழவும், விதைப்பும்,
நாளை நமக்கெனவாகும் அறுவடைக்கானது.
நம்பிக்கையின் ஒளித்திசையில் பயணம்.
இது கார்த்திகை மாதம்
ஊர் முற்றமெங்கும் ஒளி வெள்ளம்.
சுடரேற்றித் தொழுகின்றோம்.
பாட்டோடு சேர்ந்த பரவசம்.
உறவுகளே!
கேட்கிறதா கோயில் மணி?
கேட்கிறதா நெஞ்சுருகும் பாடல்?
தெரிகிறதா சுடரும் நெய்விளக்கு?